Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 210 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 10, திங்கள் 24.06.2013

**இந்தியா**



பக். 06

ஈழப் படுகொலையைக் கண்டித்து மாணவர்கள் வாகனப் பேரணி

**உலகம்**



பக். 07

போர்க்குற்றமே அதிகரிக்கும்

**விளையாட்டு**



பக். 22

அனைத்து வயது பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட மகளிர் சம்பியன்



பக். 23

வாய்ச் சண்டை போடும் ரெனிஸ் வீராங்கனைகள்

# மாற்று அரசமைப்பு வேண்டும் தீர்வுக்கு

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

"தோல்வியான அரசமைப்பு முறைமையினால்தான் நாட்டின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆட்சிக்கு வந்த அரசியல் கட்சிகளால் முடியாமல் போனது; போரும் நீடித்தது. எனவே, போட்டித்தன்மையுடனான இந்த அரசியல் முறைமைக்குப் பதிலாக மாற்று அரசமைப்பொன்று உருவாக்கவேண்டும். அதனூடாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்."



- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் புதிய அரசமைப்பு நகல்வரைவு கோட்டை ஸ்ரீ கல்யாணி சாமஸ்ரீ தர்ம மகா சங்க சம்மேளன சபையின் அதி. வணக்கத்துக்குரிய அக்கமஹா பண்டித சாஸ்த்ரபதி பெல்லன ஸ்ரீ ஞானவிமல தேரரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டபோதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் உருவாக்கியுள்ள இந்த அரசமைப்பு நகல் வரைவு வெறும் அறிக்கை மட்டுமல்ல, நம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கான ஆரம்பமாகும்.

நாடாளுமன்றத்தைச் சக்திப்படுத்தும் வகையிலும், நிறைவேற்று அதிகாரம் ஒருதனிநபருக்கோ அல்லது ஓர் இடத்துக்கோ குவிக்கப்படாத வகையிலும் நாம் பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம். அதனூடாக மாகாணசபை முறைமையை புதிய கோணத்தினூடாகப் பார்த்துள்ளோம்.

மாகாணசபை முறைமையில் பயன்பெறவேண்டுமாயின், மாகாணசபை அமைச்சரவையில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சித் தலைவருக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்படவேண்டும். இரண்டாம் இடத்தைப் பெறும் கட்சியின் தலைவருக்குப் பிரதி முதலமைச்சர் பதவி வழங்கப்படவேண்டும். அத்துடன், மாகாணசபை அமைச்சர்களின் எண்ணிக்கை அந்தச் சபையிலுள்ள கட்சிகளின் விகிதாசாரத்திற்கேற்ப பகிர்ந்தளிக்கப்படவேண்டும் - என்றார். (ங-சி)

# '13' ஆதரவு அரச அணி எடுக்கிறது விஸ்வரூபம்

கொழும்பு, ஜூன் 24

அரசமைப்பில் குறிப்பாக 13 ஆவது திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக அரசு தெரிவுக் குழுவை நியமித்துள்ளது. எனினும் அரச கூட்டுக்குள் 13 இற்கு ஆதரவான அணி ஒன்று விஸ்வரூபம் எடுத்து வருவதுடன், தமது நடவடிக்கைகளையும் அந்த அணி தீவிரமாக முடுக்கி விட்டுள்ளது.

இதற்கமைய சிரேஷ்ட அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளுந்தரப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகள், சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் என 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவான தரப்பினர் திரைமறைவில் முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரியவருகின்றது.

மேற்படி தரப்பினர் ஆரம்பத்தில் '13' ஐ பாதுகாக்க தனித்தனியே குரலெழுப்பி வந்தனர். ஆயினும் '13' ஐ ஒழிக்க நினைப்போரின் நடவடிக்கைகள் உக்கிரமடைந்துள்ளதால், இது விடயத்தில் அரசுக்கு கடும் அழுத்தத்தை பிரயோகிக்கும் நோக்கில் 13 க்கு ஆதரவானோர் ஓரணியில் திரளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அணி, '13' விவகாரம் குறித்து திடமானதொரு தீர்மானத்தை தமக்குள் மேற்கொண்ட பின்னர், எதிர்க்கட்சிகளுடனும், 13' ஐ பாதுகாக்கும் ஏனைய அமைப்புகளுடனும் பேச்சுகளை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளது எனவும் அறியமுடிகின்றது. (ங-சி)

# நிபந்தனைகளை ஏற்றாலேயே தெரிவுக்குழுவில் பங்கேற்போம்

## ஐ.தே.க., ஜே.வி.பி. விடாப்பிடி

கொழும்பு, ஜூன் 24

'13' திருத்தங்களை மேற்கொள்வதற்கான தெரிவுக் குழுவில் பங்கேற்பதற்குத் தாம் முன்வைத்துள்ள நிபந்தனைகளை அரசு தொடர்ந்தும் புறக்கணித்து வருவதால் தெரிவுக்குழுவை எதிர்க் கட்சிகள் புறக்கணித்துள்ளன.

தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகளின் பெயர்களை அரசு பரிந்துரைசெய்துள்ள நிலையில், தமது நிபந்தனைகளை அரசு ஏற்றால் மாத்திரமே தெரிவுக்குழுவில் பங்கேற்பது சாத்தியமாகும் என எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் தமது நிலைப்பாட்டை உறுதிபடத் தெரிவித்துள்ளன.

தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முக்கிய 4 நிபந்தனைகளை அரசிடம் முன்வைத்துள்ளது. குறித்த தெரிவுக்குழுவில் தாம் பங்கேற்க மாட்டோம் என ஜே.வி.பியும் தெரிவித்தது. இருப்பினும் தெரிவுக்குழுவுக்கான தமது 19 பிரதிநிதிகளின் பெயர்களை அரசு கடந்த 21ஆம் திகதி பரிந்துரை செய்துள்ளதுடன், எவர் பங்குபற்றினாலும், பங்குபற்றாவிட்டாலும் தெரிவுக்குழு நடவடிக்கைகளைத் தாம் முன்னெடுப்போம் எனத் தமது நிலைப்பாட்டை அரசு அறிவித்துள்ளது. (ங-சி)

# இலங்கை – கனடா இராஜதந்திரப் போர் உச்சக்கட்டம்

கொழும்பு, ஜூன் 24

இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையேயான இராஜதந்திரப் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும் இதனாலேயே, இருநாடுகளும், புதிய தூதுவர்களின் நியமனங்களை ஏற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் நடக்கவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்கவும், இடம்மாற்றவும் கனடா வலியுறுத்தி வருகிறது. இதனால் கனடாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் சமீப காலமாக

தொடர்ச்சி: பக்கம் 21

# ஆபத்தானது இலங்கை பட்டியலிட்டது பிரிட்டன்

கொழும்பு, ஜூன் 24

இலங்கை உட்பட ஆறு நாடுகளை ஆபத்தான நாடுக்ளாகப் பட்டியலிட்டுள்ளது பிரிட்டன் குடிவரவுத்துறை. இதன்மூலம் குறித்த 6 நாடுகளிலிருந்தும் பிரிட்டனுக்குள் வருவோரைக் கட்டுப்படுத்த இறுக்கமான நடைமுறைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், நைஜீரியா, கானா ஆகிய 6 நாடுகளுமேஆபத்தான நாடுகள் பட்டியலுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று பிரிட்டன் உள்துறைச்செயலர் தெரெசாமே தெரிவித்துள்ளார்.

இனிமேல் ஆபத்தான இந்த ஆறு நாடுகளில் இருந்து பிரிட்டனுக்கு வருவோர் 3 ஆயிரம் பவுண்ட்ஸை பிணைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

அவர்கள் நுழைவிசைவுக் (விஸா) காலம் முடிந்த பின்னரும் பிரிட்டனில் தங்கியிருந்தால் அந்தப் பிணைப்பணத்தை இழக்க வேண்டியிருக்கும். (ங-சி)

# தமிழக மீனவர் மீது மீண்டும் தாக்குதல்

இராமேஸ்வரம், ஜூன் 24

தனுஸ்கோடி மற்றும் கச்சதீவு அருகே மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை தமிழக மீனவர்களை நேற்று முன்தினம் துப்பாக்கியைக் காட்டி விரட்டியடிக்கப்பட்டனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் 700 இற்கும் மேற்பட்ட படகுகளுடன் தனுஸ்கோடி கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற போதே இலங்கைக் கடற்படையினர் அவர்களை விரட்டியதுடன் வலைகளை சேதமாக்

தொடர்ச்சி: பக்கம் 21

# பரமேஸ்வராச் சந்தியில் அடிதடி யாழ். பல்கலை மாணவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தென்பகுதி மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் நான்கு மாணவர்கள் காயமடைந்தனர்.

யாழ். நாகவிகாரையில் நடைபெற்ற பொசன் நிகழ்வில் மாணவர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டாலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நாகவிகாரையில் இடம்பெற்ற பொசன் நிகழ்வுக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தென்பகுதியைச் சேர்ந்த விஞ்ஞான பீட இரண்டாம் வருட மாணவர்களும், முகாமைத்துவ பீட முதலாம் வருட மாணவர்களும் சென்றனர். இதன்போது இரண்டாம் வருட மாணவர்களுக்கு உரிய மரியாதையை முதலாம் வருட மாணவர்கள் வழங்கவில்லை என்று முரண்பாடு எழுந்தது. இந்த முரண்பாட்டின் எதிரொலியாக முதலாம் வருட மாணவர்கள் விகாரையால் திரும்பி பரமேஸ்வராச் சந்தியில் பஸ்ஸால் இறங்கியபோது தாக்கப்பட்டனர். முதலாம் வருட மாணவர்களைசிரேஷ்ட

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24/06/2013



'பொசன்' பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அனுராதபுரம் ஸ்ரீ மகாபோதி விகாரையில் நேற்று இடம்பெற்ற விசேட வழிபாடுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

## விசுவமடு, தொட்டிலடி மக்களுக்கு அரச காணிகளுக்கு அனுமதிப் பத்திரம்

முல்லைத்தீவு, ஜூலை 24
விசுவமடு தெற்கு தொட்டிலடி கிராமத்தில் இந்திய அரசால் கொத்தணி வீட்டுத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 26 குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்களை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் வழங்கியுள்ளார்.
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தின் கீழ் கொத்தணி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள விசுவமடு மேற்கு தொட்டிலடிக் கிராமத்தைச் சேர்ந்த 26 குடும்பங்களுக்கு அரச காணிகளில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.
இந்த வீடுகளை அமைப்பதற்காக குறித்த அரச காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன் போது காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை பிரதேச செயலர் பயனாளிகளுக்கு வழங்கியுள்ளார்.
காணி இல்லாதவர்களையும் இந்திய வீட்டுத்திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காகவே அரசால் காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.
(ங-115)

## வரிவருமானங்கள் அதிகரிப்பு மறைமுக வரிகளே காரணம்

கொழும்பு, ஜூன் 24
இலங்கை அரசின் மறைமுக வரி விதிப்புக்களால் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் வரி வருவாய் பல மடங்கு அதிகரித்துள்ளது என்று பொருளியல் நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்தத் தகவலை கொழும்பிலிருந்து வெளியாகும் மவ்பிம வார இதழ் தெரிவித்துள்ளது.
2013 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானம் 33, 828 மில்லியன்களாக இருந்த போது தற்போது அது 11 லட்சத்து 7 ஆயிரத்து 940 மில்லியன்களாக உயர்வடைந்துள்ளது. இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் 329 சதவீதம் வரி வருமானம் உயர்வடைந்துள்ளது. இத்தகைய வரிவருமான அதிகரிப்புக்கு நுகர்பொருள்கள் மீதான மறைமுக வரி விதிப்புகளே காரணம் என்று கூறப்படுகிறது. இதைவிட அடுத்த வருடத்தில் இருந்து நுகர் பொருள்கள் மீதான நேரடி வரிகளையும உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் வரி வருமான வீதம் இன்னும் உயர்வடைவதோடு, நுகர் பொருள்களின் விலைகளும் உயர்வடையக் கூடும். இதனால் மக்களின் வாழ்க்கைச் சுமை இன்னும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.
(ங-22)


## தப்பித்துத் தலைமறைவான கைதி 13 வருடங்களின் பின் கைதானார்

கொழும்பு, ஜூன் 24
மாத்தளை நீதிமன்ற வளாகத்தில் வைத்து சிறைச்சாலை அதிகாரி ஒருவரை துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பியோடிய கைதியொருவர் 13 வருடங்களின் பின்னர் கைதுசெய்யப்பட்டார்.
குறித்த கைதி கம்பஹா வெலிவேரிய பகுதியில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மேற்படி சந்தேகநபர் பொலன்னறுவை, கலபான, மெல்சிறிபுர போன்ற இடங்களில் வங்கி, நிதி நிறுவனங்கள் உட்படப் பல இடங்களில் கொள்ளையிட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் 2000ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார்.
அதேவேளை, கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்ற விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட போதே மாத்தளை நீதிமன்ற வளாகத்தில் சிறைச்சாலை அதிகாரியொருவரின் துப்பாக்கியை பறித்து சூடுநடத்தி அங்கிருந்த அரச வாகனமொன்றில் தப்பிச் சென்றுள்ளார்.
மாத்தளை பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி கீர்த்தி ரணவீரவின் பணிப்புரையின் பேரில் கம்பஹா பகுதிக்குச் சென்ற விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரைக் கைது செய்தனர். இச்சந்தேக நபரிடமிருந்து போலி அடையாள அட்டைகள் இரண்டும், கைத்துப்பாக்கியொன்றும் 15 ரவைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.
இச்சந்தேகநபரை பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலை செய்தபோது குறித்த நபரை இம்மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற நீதவான் டி.சில்வா உத்தரவிட்டுள்ளார்.

# 13 விவகாரத் தெரிவுக்குழு தொடர்பில் பங்காளிக் கட்சிகளுடன் பேசியே முடிவு

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24
''13ஆவது திருத்தத்தில் மாற்றங்களை முன்மொழிவதற்காக அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பங்கேற்பதா இல்லையா என்பது குறித்து பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்திய பின்னரே முடிவெடுக்கப்படும்.''
- இவ்வாறு நேற்று உதயனிடம் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.
இதுதொடர்பில் கூட்டமைப்பு எடுக்கும் முடிவு இன்னும் சில தினங்களில் அறிக்கையூடாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட ஏனைய அதிகாரங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்துள்ளது. இந்தக் குழுவில் பங்கேற்கும் அரச தரப்பின் 19 உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளார்.
ஆனால், இந்தத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. முதலான எதிர்க்கட்சிகள் இன்னும் முன்வரவில்லை.
இந்நிலையில், 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று வலியுறுத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறித்த தெரிவுக்குழுவில் பங்கேற்குமா இல்லையா என்று இந்தியாவிலிருந்து நேற்று மதியம் நாடு திரும்பிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனைத் தொடர்புகொண்டு உதயன் வினவியது.
இதன்போது அவர் தெரிவித்ததாவது:-
''13 ஆவது திருத்த விவகாரம் குறித்து இந்திய மத்திய அரசுடன் பேச்சு நடத்த கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவுடன் சென்ற நான் இன்றுதான் (நேற்று) நாடு திரும்பினேன்.
இந்நிலையில், 13ஆவது திருத்தத்தில் மாற்றங்களை முன்மொழிவதற்காக அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பான முழு விவரங்கள் இன்னும் எமக்கு முழுமையாகத் தெரியவரவில்லை. ஏனெனில், நாம் இந்தியாவுக்குப் பேச்சுக்காகச் சென்ற போதுதான் இந்தத் தெரிவுக் குழுவை அரசு இங்கு நியமித்துள்ளது. இனித்தான் இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவுள்ளோம்.
தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்பதா இல்லையா என்பது குறித்து பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்திய பின்னரே முடிவெடுக்கப்படும். இது தொடர்பில் கூட்டமைப்பு எடுக்கும் முடிவு இன்னும் சில தினங்களில் அறிக்கையூடாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்'' - என்றார்.
(ங-சி)

# தெரிவுக்குழு விவகாரம் ஒருபக்க கதையாகிவிடும்

### எதிர்வு கூறுகிறது ஆங்கிலப் பத்திரிகை

கொழும்பு, ஜூன் 24
13 ஆவது அரசமைப்பில் திருத்தம் செய்வது தொடர்பாக விவாதித்து முடிவெடுப்பதற்காக நியமிக்கப்படவிருக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழு விவகாரம் ஒருபக்கக் கதையாக முடியக் கூடும் என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டிருக்கிறது.
31 பேர் கொண்ட குழுவுக்கு ஏற்கனவே அரச தரப்பிலான 19 பேரின் பெயர்களை சபாநாயகர் வெளியிட்டிருக்கிறார். கடைசி நேரத்தில் மாற்றம் எதுவும் ஏற்பட்டால் அல்லாமல் ஐ.தே.க. கட்சி இந்தக் குழுவில் பங்கு பற்றப்போவதில்லை என்று அறிவித்துள்ளது.
அரசு தனது முன்மொழிவுகளை முதலில் வெளியிடவேண்டும் என்பது ஐ.தே.கவின் நிலைப்பாடு அது இல்லையென்றால் தமிழர் பிரச்சினையை அரசு எவ்வாறு தீர்க்கப் போகிறது மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஆலோசனை கலந்த பின் தேசிய நல்லிணக்கம் எவ்வாறு மேற்கொள்ளப்படவிருக்கிறது. என்பது குறித்து திட்டவரைவொன்றை அரசு வெளியிட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. தெரிவித்துள்ளது.
த.தே.கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் இடம்பெறமாட்டாது. ஜனதா விமுக்தி பெரமுனவும் தெரிவுக்குழுவில் பணியாற்றுவதில்லையென்று அறிவித்துள்ளது. இவ்வாறு அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.
(ப)

## வீரமாகாளியின் பூங்காவனம்



யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்.வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் பூங்காவனத்திருவிழா இன்று திங்கட்கிழமை மாலை இடம்பெறவுள்ளது.
வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து மாலையில் ஈழத்தின் புகழ் பூத்த நாதஸ்வரக் கலைஞர்கள், இந்தியா புகழ் தவில் நாதஸ்வர கலைஞானிகள் இசைமாரி பொழிவார்கள். ஈழ நல்லூர் நாதஸ்வர கலைஞர் உதயசங்கர் குழுவினர், திருவண்ணாமலை நாதஸ்வர வித்துவான் ரி.கே.கே. காந்தி, நாதஸ்வர இசைச் சுடர் ரி. ஆர். வாசுதேவன் ஆகியோர் நாதஸ்வர தவில் கச்சேரி நடத்தி அடியார்களை பரவசப்படுத்துவார்கள். (சிறப்பிதழ் 8, 9 ஆம் பக்கங்களில்)
(ஒ-14)

### தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் கடிதம் மூலம்

## உறவுகளைத் தேடித்தருமாறு செஞ்சிலுவையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24
தமது உறவினர்களைத் தேடித்தருமாறு தமிழகத்தில் இருந்து 20க்கும் மேற்பட்ட கடிதங்கள் எமக்கு கிடைத்துள்ளன-என்று தெரிவித்துள்ளார் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் கு.பாலகிருஸ்ணன்.
இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
''காணாமற்போன தமது உறவினர்களைத் தேடித்தருமாறு தமிழகத்தில் அகதிகளாக உள்ள 20க்கும் மேற்பட்டோர் கடிதம் மூலம் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்பட்ட நபர்களைக் கண்டறிய நாடளாவிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. -என்றார்.
(ங-7)

## முஸ்லிம்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமாம்— பஷீர் சேகுதாவூத் அறிவுரை

கொழும்பு, ஜூன் 24
''இலங்கையில் வெளிநாட்டு உள்நாட்டு சக்திகள் ஆட்சி மாற்றத்தினை எதிர்பார்க்கின்றன. இதனால் தான் பள்ளிகளுக்கு கல் எறிந்தும், முஸ்லிம்களின் ஹலால் பற்றி பேசியும் ஜனாதிபதிக்கு எதிராக முஸ்லிம்களை திசைதிருப்புவதற்கு சில தீய சக்திகள் முயல்கின்றன. நூறு சதவீத முஸ்லிம்களையும் ஜனாதிபதிக்கு எதிராக வாக்களிக்க செய்யும் இவர்களின் சிந்தனை தொடர்பாக முஸ்லிம்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் . இந்த விடயத்தில் முஸ்லிம்கள் கவனமாக முடிவெடுக்க வேண்டும். இவ்வாறு இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் ஏறாவூர், அறபா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.
(ங-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க விவசாய திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24

கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் அதிகூடிய மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க வடமாகாண விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.



வடமாகாணத்தில் 5 மாவட்டங்களையும் உள்ளடக்கி கடந்த வருடம் காலபோகத்தில் சிறுதோட்டப் பயிர்ச் செய்கையாளர் மத்தியில் 2 ஆயிரத்து 348 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மிளகாய் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 3 ஆயிரத்து 588 மெற்றிக் தொன் உற்பத்தி விளைச்சலாகக் கிடைக்கப்பெற்றது.

சிறுதோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் காலம் தாழ்த்தினாலும் மிளகாய் உற்பத்தியூடாக அதிகளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நிலையில் கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென மிளகாய் செய்கையாளர்கள் நல்லின மிளகாய்க் கன்றுகளை நடுவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் மிளகாய் அறுவடைக் காலமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் சந்தைகளில் தற்போது ஒரு கிலோ பச்சை மிளகாய் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுவரும் நிலையில் இன்னும் மிளகாயின் சந்தை விலை அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் மிளகாய்ச் செய்கையாளர்கள் மிளகாயைக் காய வைத்து காய்ந்த மிளகாயாக விற்பனை செய்வதன் ஊடாக இரு மடங்கு இலாபத்தைப் பெற முடியும் என்பதால் மிளகாய்ச் செய்கையாளர்களில் அதிகமானோர் தாமதித்த அறுவடையிலும் ஈடுபட்டுள்ளனர்.

நோய்த் தாக்கமற்ற நல்லின மிளகாய் கன்றுகளை பயிரீடு செய்யப்பட்டுள்ளதால் அதன் விளைச்சல் அதிகமாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 4 வருட உற்பத்தி நடவடிக்கையில் கடந்த வருடமே அதிகூடிய விளைச்சல் கிடைக்கப்பெற்றதுடன் உற்பத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு 870 ஹெக்ரேயர் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டு விளைச்சலாக ஆயிரத்து 277 மெற்றிக் தொன்னும் 2010 ஆம் ஆண்டு 945 ஹெக்ரேயரில் மிளகாய் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு ஆயிரத்து 611 மெற்றிக் தொன் விளைச்சலும் 2011 ஆம் ஆண்டு ஆயிரத்து 164 ஹெக்ரேயரில் மிளகாய் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு 2 ஆயிரத்து 280 மெற்றிக் தொன் விளைச்சலும் 2012 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 348 ஹெக்ரேயரில் மிளகாய் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு 3 ஆயிரத்து 588 மெற்றிக் தொன் விளைச்சலும் கிடைக்கப்பெற்றது.

இந்த வருடமும் மிளகாய் உற்பத்தி அதிகூடிய விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (வ-14)

அடையாளம் காட்டப்பட்ட

## தென்னங் காணியை துப்புரவு செய்வதற்கு சின்னப்பல்லவராயன்கட்டு மக்கள் தீர்மானம்

### அரச அதிகாரிகளுக்கு மனு கையளிப்பு

அக்கராயன், ஜூன் 24

தமக்கு வீட்டுத்திட்டத்துக்கென அடையாளம் காட்டப்பட்ட தென்னங்காணியை துப்புரவு செய்யப் போவதாக சின்னப் பல்லவராயன்கட்டு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி அரச அதிபர், பூநகரி பிரதேச செயலர் வீட்டுத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் உதவி வழங்கும் அமைப்பும் மற்றும் கிராம அலுவலர் ஆகியோருக்கு மனு ஒன்றின் மூலமாக இது தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

**சின்னப்பல்லவராயன் கட்டுக் கிராமத்தில் உள்ள தென்னங் காணியில் 100 ஏக்கர் இராணுவத்தினருக்கும், 25 ஏக்கர் மக்களுக்கும் வழங்கப் படுமென ஏற்கனவே தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

பூநகரியின் சின்னப்பல்லவராயன் கட்டுக் கிராமத்தில் உள்ள 48 குடும்பங்களில் 25 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இந்த நிலையில் பூநகரிப் பிரதேச செயலர் வாக்குறுதி அளித்ததன் பிரகாரம் தென்னங்காணியில் அரை ஏக்கர் வீதம் இவர்களுக்கு இது வரை வழங்கப்படாததுடன் காணி அளவீடும் நடைபெறவில்லை. முக்கொம்பன் கிராமத்தில் நிரந்தர வீட்டுக்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் தாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த நிலை நீடிக்குமாயின் இங்குள்ள 48 குடும்பங்களும் ஒன்றிணைந்து தமக்கு அடையாளம் காட்டப்பட்ட தென்னங்காணியைத் துப்புரவு செய்யவுள்ளதாகத் தமது மனுவில் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

சின்னப்பல்லவராயன்கட்டுக் கிராமத்தில் உள்ள தென்னங் காணியில் 100 ஏக்கர் இராணுவத்தினருக்கும், 25 ஏக்கர் மக்களுக்கும் வழங்கப்படுமென ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன புதிய மடாலயம் நேற்றுத் திறப்பு





மடாலய திறப்பு விழாவில் கோமாதா பூசை நடைபெறுவதையும் அதைத் தொடர்ந்து நுழைவாயில் திறப்பு நிகழ்வையும் காண்கிறீர்கள்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன புதிய மடாலயத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

லண்டன் வாழ் மக்களது நிதியுதவியில் 2 கோடி 20 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட இந்த மடாலயத் திறப்பு விழாவில் முன்னோடியாக நல்லை ஆதீனத்தில் உள்ள ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று ஆறுமுக சுவாமி ஊர்வலமாக நல்லூர் கந்த சுவாமி கோயில் அடைந்து அங்கிலிருந்து மண்டப வாயிலுக்கு மங்கல வாத்திய சகிதம் எடுத்து வரப்பட்டார்.

அதைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் சிவாச்சாரியர்களின் கோமாதா பூசையைத் தொடர்ந்து 9.30 மணிக்கு மண்டப நுழைவாயிலை லண்டனில் வதியும் பாலசிங்கம், ஆதீன முதல்வர் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். அதையடுத்து நந்திக் கொடியேற்றப்பட்டதும் அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர் க.நீலகண்டன் ஆதீன முதல்வர் சோமசுந்தர பராமாச்சாரியார் ஆகியோர் நாடாவை வெட்டி மண்டபத்தைத் திறந்து வைத்தனர். நினைவுக் கற்களும் திரைநீக்கம் செய்யப்பட்டன.

நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். திறப்பு விழாவை அடுத்து நடைபெற்ற கூட்டத்தில் குடாநாட்டைச் சேர்ந்த நாதஸ்வரதவில் வித்துவான்களின் மங்கல வாத்திய இசைக்கச்சேரியும் உரைகளும் இடம்பெற்றன. ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், முன்னாள் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் க.நீலகண்டன், லண்டனைச் சேர்ந்த பாலசிங்கம் ஆகியோர் உரையாற்றினர். (வ-7-9386)

# போலி நாணயத் தாள்கள் குடாநாட்டில் தாராளம்

## பொதுமக்களே கவனம்; ஏமாந்து போகாதீர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24




அண்மைக்காலமாக குடாநாட்டில் போலி நாணயத் தாள்கள் தாராளமாக புழக்கத்தில் இருப்பது குறித்து பொது மக்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

போலி நாணயத்தாளைத் தயாரிக்கும் கும்பலும் வியாபாரிகள் போல் வேடமிட்டு இத்தாள்களை புழக்கத்தில் விட்டுள்ளதாகவும்-

இவர்களின் இத்தகைய சட்ட விரோத செயலுக்கு ஒரு சில வியாபாரிகளும் துணை போவதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த வாரமும் இளைஞர் ஒருவர் வெளிநாட்டில் இருந்து உறவினர் ஒருவரால் அனுப்பப்பட்ட ஒரு தொகைப் பணத்தை கடையொன்றில் இருந்து பெற்று வந்து வீட்டில் வைத்து விட்டு மறுநாள் செலவுக்காக எடுத்த வேளை அதில் ஒரு ஆயிரம் ரூபா போலித் தாள் எனத் தெரிந்து கொண்டார்.

இதேவேளை, நேற்று முன்தினமும் நல்லூர் கிட்டு பூங்காவுக்கு அருகேயுள்ள கடை ஒன்றுக்குச் சென்ற நடுத்தர வயதுடைய ஒருவர் போலி ஐந்நூறு ரூபாத் தாளை கொடுத்து சிகரெட் வாங்கமுயன்றார் என்றும்- ஆனாலும் கடையில் நின்ற பெண் தாளின் தரத்தைப் பார்த்து சந்தேகப்பட்ட போதும், வாதிடப் பயந்து காசு மாற்றுவதற்கு இல்லை எனக் கூறி சிகரெட்டைத் திருப்பி வாங்கி விட்டு பணத்தை திருப்பிக் கொடுத்து விட்டார் என்றும் தெரிய வந்தது.

நாகரிகமான தோற்றத்துடன் காணப்படும் இந்த ஆசாமிகள் குடாநாட்டில் சாதாரணமாக நடமாடி லட்சக் கணக்கில் பணத்தை சுருட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கும்பலைக் கண்டறிந்து சம்பந்தப்பட்டோர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-288)

# நடமாடும் சேவையில் 42 பேர் பயனடைவு

யாழ்ப்பாணம், ஜூன் 24

மன்னார் மெத்த பவுண்டேசன் நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட இலவச நடமாடும் சேவையில் 42 பேர் நன்மையடைந்துள்ளனர்.


மாற்று வலுவுடையோருக்கு செயற்கை அவயங்களைப் பொருத்தும் குறித்த நிறுவனம் கடந்த வாரம் இரண்டு தினங்கள் இலவச நடமாடும் சேவையை நடத்தியது. [illegible] பயனாளிகளின் [illegible] செயற்கைக்கால்கள் பொருத்தப்பட்டதுடன் மேலும் 29 பேருக்கு செயற்கைக் கால்கள் பொருத்துவதற்காக அளவுகள் எடுக்கப்பட்டன.

அத்துடன் மூன்று பேருக்கு சார்பு உறுப்புகளும் பொருத்தப்பட்டன. இதனைவிட செயற்கை அவயங்களை ஏற்கனவே பொருத்திய 9 பேருக்கு அவயங்களில் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. குறித்த நடமாடும் சேவையின் போது மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்கு 2 பேர் அனுப்பி வைக்கப்பட்டதுடன் 6 பேருக்கு செயற்கை அவயங்களைப் பொருத்திய பின் நடமாடும் பயிற்சியும் ஆலோசனையும் வழங்கப்பட்டன. (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு கிருஸ்ணபிள்ளை



புளியங்கூடலைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கிருஸ்ண பிள்ளை நேற்று முன்தினம் (22.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கார்த்திகேசு-பார்வதிப் பிள்ளை கண்ணம்மா தம்பதிய ரின் பாசமிகு மகனும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம்-தங்கம்மா தம்பதியரின் பாச மிகு மருமகனும், அன்னலட் சுமியின் அன்புக் கணவரும், ராதா (கொழும்பு), சண்முகராசா (ஜேர்மனி), ராகினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசிங்கம் (கொழும்பு), ஞானாம்பிகை (ஜேர்மனி), விஜயன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, செல்வரட்ணம் மற்றும் நாகம்மா (லண்டன்), நாகராசா (கனடா), சரஸ்வதி, பாக்கியம், பரமேஸ் வரி, பாலசுப்பிரமணியம், கந்தவேள், தேவராசா ஆகியோரின் அன் புச் சகோதரரும், தவமணி, கனகமணி இராசாம்பாள், ஞானம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நோஜிதன் (கொழும்பு), டிலானி, சாமினி (ஜேர்மனி), அபிரா, ஜஸ்விகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2013) காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ந.பகல் 12.00 மணிக்கு தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியங்கூடல்,**
**ஊர்காவற்றுறை.**

(38607) (10,16)

தகவல்
**குடும்பத்தினர்.**

# அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கான அபிவி ருத்திக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறும் என பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சின் செயலா ளர் வி.சிவஞான சோதி அறிவித்துள் ளார்.

குறித்த கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்யவுள்ள தொழில் முயற்சியாளர்கள் 50 பேருக்கு முதற் கட்டமாகக் காணி கள் பகிர்ந்து வழங் கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பாரம்பரிய சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல ந்து கொள்வார்.

அச்சுவேலி கைத் தொழில் பேட்டையில் இந்திய அரசு மற்றும் இலங்கையின் நிதி பங்களிப்பில் மின் சாரம், குடிதண்ணீர், கழிவுநீர் வாய்க்கால், வீதி அபிவிருத்தி மற் றும் உட்கட்டுமானத் தேவைகள் நிறைவு செய்யப்படவுள்ளன.

இவ்வாறான உட்கட் டுமான அபிவிருத்தித் திட்டங்களை ஐ.நா. நிறுவனமான யுனொப்ஸ் முன்னகர்த்தி வருகின்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

(வ-50)

# கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர் லயன்
**விஷ்ணுபாதமூர்த்தி றீகன்** அவர்களின்
அன்புத் தந்தை

## கோவிந்தசாமி விஷ்ணுபாதமூர்த்தி
**(சிவகவி)**

அவர்களின் மறைவையொட்டி எமது கழகத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரி வித்துக்கொள்கின்றோம்.

(38614) (10,16)

**திருநெல்வேலி வட்ட லயன் கழகம்.**

# மரண அறிவித்தல்கள்

## கோவிந்தசாமி விஷ்ணுபாத மூர்த்தி (சிவகவி)



வடமராட்சி கிழக்கு, நாகர் கோயிலைப் பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாக வும், இல. 19 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கோவிந் தசாமி விஷ்ணுபாத மூர்த்தி (சிவ கவி) நேற்று (23.06.2013) ஞாயிற் றுக்கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான கோவிந்தசாமி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோசேப்பு மற்றும் வியாகுலம் தம்பதியரின் அன்பு மருமகனும், வவியின் அன் புக் கணவரும், றீகன் (பிராந்திய விற்பனை முகாமையாளர், செரண்டிப் மா ஆலை நிறுவனம்), சுமங்கலி, நிஷால்டின், குபேனி, றாகமி (மாணவி, புதுக்குடியிருப்பு மத்திய கல் லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், நதிரா, அபராஜி தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜஸ்மின், அபிஷா, தனார்தனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று (24.06.2013) திங்கட்கிழமை தற்காலிக வதிவிட முகவரியில் பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று, பி.ப 3.00 மணியளவில் தூய மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, தூய மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**இல. 19, வைத்தியசாலை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
றீகன் 0777224942
நிஷால்டின் 0773580816

(38544) (10,16)

தகவல்
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## இளையகுட்டி துரைராஜா (குணம்)

(உரிமையாளர்-தாரணி எலக்ரிக்கல்ஸ்)

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை யைப் பிறப்பிடமாகவும், நவாலி வீதி, ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி துரைராஜா (குணம்) நேற்று (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டி மற் றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் (கிளி) அன்புக் கணவரும், பிரபா (கனடா), பிரியா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோபி (இத்தாலி), யாமினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கெவின், கெல்வன், அஞ்சலினா, நிருஜன் ஆகி யோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற புவ னேஸ்வரி, பரமேஸ்வரி, நாகேஸ்வரி, தர்மரட் ணம் (ரவி-இத்தாலி) ஆகியோரின் அன்பு சகோ தரனும், தம்பிராசா, விக்கினேஸ்வரன், இராஜ துரை, ஜெகதீஸ்வரி (பாப்பா-இத்தாலி) ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2013) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவாலி வீதி,**
**ஆனைக்கோட்டை.**

(38604) (10,16)

தகவல்
**குடும்பத்தினர்.**

## திருமதி சவுந்தரம் கந்தசாமி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவுந்தரம் கந்தசாமி நேற்றுமுன்தினம் (22.06.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை -பாக்கியம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், சுமதி, சிவநாதன், சுகுநாதன், சுரேந்திரநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.06.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து சாவகச்சேரி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கண்டி வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

(C/9981) (16)

**தகவல்: க.நரேந்திரநாதன் (மகன்)**
**வீடியோ மனுவல், நீர்கொழும்பு.**
**0777512929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24/06/2013



## சிவகாமி அறக் கட்டளை கல்வி நிலையம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

நயினாதீவில் அன்னை சிவ காமி அறக் கட்டளை கல்வி நிலையம் இன்று திறந்து வைக் கப்படவுள்ளது.

அறக்கட்டளை நிலையத் தலை வர் சி.மகாதேவன் தலைமை யில் பிற்பகல் 4 மணிக்கு நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் தீவக வலய கல்விப்பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ் கல்வி நிலையத் தைத் திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினராக நெடுந் தீவு கோட்டக் கல்வி அதிகாரி க.அரசரட்ணமும் கௌரவ விருந்தினர்களாக நயினை நாகவிகாராதிபதி, நயினை அம்பாள் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் க.பரமலிங் கம், முன்னாள் தலைவர் ஆதியா கராசா ஆகியோர் கலந்து கொள் வர். (வ-7)

## பண்டத்தரிப்புக்குத் தனியான கால்நடை கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

பண்டத்தரிப்பு கோயில்பற் றுக்கு உட்பட்ட பிரதேசத்தில் தனியாக கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்படவுள்ளது.



எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் வலி.தென்மேற்கில் இரண்டாவது கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு மானிப் பாய் பிரதேச சபை உறுப்பினர் சின்னத்தம்பி மகேந்திரன் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக 28 கிராம அலுவலர் பிரிவைக் கொண்ட பரந்த பிரதேசம். என்பதால் ஒரு சங்கத்தால் பரந்துபட்ட மக்களின் தேவை களைச் நிறைவேற்ற முடியா துள்ளது.


பண்டத்தரிப்பு பரிஷ் பிர தேசத்துக்குட்பட்ட கால்நடை வளர்ப்போரின் பெரும்பாலான தேவைகள், உதவிகள், வாழ் வாதாரத் திட்டங்கள் எவையும் கிடைப்பதில்லை.

இதயைடுத்து பண்டத்தரிப்புக் குட்பட்ட 14 கிராம அலுவலர் பிரிவு மக்கள், பொது அமைப்பு கள் ஒன்றுகூடி புதிய கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, பண்டத்தரிப்பு பரிஷ் பிரிவுக்கு உட்பட்ட 14 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக புதிய கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட வேண்டி யதன் அவசியம் குறித்து வட மாகாண கூட்டுறவு ஆணை யாளர் திருமதி மதுமதி வசந்த குமாரின் விசேட கவனத் துக்குக் கொண்டு வந்ததைய டுத்தே புதிய சங்கம் அங்கு ரார்ப்பணம் செய்யப்படவுள் ளது. (வ-41)

## தடை விதிக்கப்பட்டும் ஓயவில்லை நடவடிக்கை

### குழைபோட்டு கணவாய் பிடித்தல்



யாழ்ப்பாணம், ஜூன் 24

வடமராட்சி கிழக்கு கடல் பகுதி யில் குழைபோட்டு கணவாய் பிடிப்பதை கடற்றொழில் நீரி யல் வளத் திணைக்களம் தடை செய்துள்ள போதும் குறிப் பிட்ட சில மீனவர்கள் அந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வரு கின்றனர் என்று வடமராட்சி கிழக்கு மீனவர் சமாச வட்டா ரங்கள் தெரிவித்தன.

வடமராட்சி கிழக்கு கடற் கரையோரப் பிரதேசங்களில் இதுவரை காலமும் காட்டுக் குழைகள் போட்டு கணவாய் பிடித்தல் தொழிலில் ஈடுபடுவ தில்லை. வடமராட்சி கிழக்கு கடற்கரையோரத்தில் நீரோட் டத்துக்கு வலைபோட்டு மீன் பிடித்தலையே மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது காட்டுக் குழை போட்டு கணவாய் பிடித்தலில் ஈடுபடு வதால் மீனவர்களது வலை கள் காட்டுக் குழையினுள் சிக்குண்டு அறுபடுகின்றன.

இந்த நிலையில் கடந்த வாரம் வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் சென்ற கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர், காட்டுக் குழைபோட்டு கணவாய் பிடித்தலில் மீனவர்களை ஈடு பட வேண்டாம் என்று எச்சரித் ததுடன் அதனையும் மீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வும் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் ஒரு சில மீனவர் கள் அந்தப் பகுதியில் தொடர்ந் தும் காட்டுக் குழை போட்டு கணவாய் பிடித்தலில் ஈடுபட்டி ருப்பதாகவும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக் கப்படவில்லையென்றும் தெரி விக்கப்படுகின்றது. (வ-5)

## வீதியில் பயணிப்போர் மீது தாக்குதல் நடத்தும் கும்பல்

### வரணிப் பகுதியில் தொடரும் சம்பவங்கள்

கொடிகாமம், ஜூன் 24

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வரணிப் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வரும் கும்பல் வீதியில் செல்வோர் மீது தாக்குதல் நடத்தும் சம்ப வங்கள் மீண்டும் தலைதூக்கி யுள்ளமை குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் வரணி எட்டாம் கட் டைச் சந்தியில் குறித்த கும்பல் வீதியில் செல்வோரைத் தாக்கி யும் இடையூறு கொடுத்ததை ஊடகங்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து பொலிஸாரின் தொடர் ரோந்து நடவடிக்கையால் மக் கள் அச்சமின்றி நடமாடக் கூடி யதாக இருந்தது.

இந்தக் கும்பல் மோட்டார் சைக் கிள் மற்றும் ஓட்டோக்களில் மாலை வேளைகளில் மீண் டும் தாக்குதல் சம்பவங்களை நடத்தி வருவதாகவும் தெரி விக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை வயல் வேலைக்குச் சென்று விட்டு இரவு சைக்கிளில் வீடு திரும் பிய இருவரை வழிமறித்த கும் பல் அவர்களை மோசமாகத் தாக்கியுள்ளனர். தாக்குத லுக்கு இலக்கான இருவரும் கொடிகா மம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் வரணிப் பகுதியில் நடைபெற்ற நிகழ் வொன்றுக்குச் சென்று விட்டு இரவு 7 மணியளவில் வீடு திரும்பிய நால்வரை இந்தக் கும்பல் வழி மறித்து கொட் டன்களால் தாக்கியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

மாசேரியைச் சேர்ந்த ரதீஸ் வரன் ரகுந்தன் (வயது-17) தனுஷ்கோடி பிரதீஸ் (வயது-23), இடைக் குறிச்சியைச் சேர்ந்த சின்னவன் மகேந்திரன் (வயது-40), கணபதிப்பிள்ளை தெய் வேந்திரம் (வயது-44) ஆகி யோரே காயமடைந்தவர் களா வர்.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(வ-9)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாண மத்திய கல் லூரியின் 2013 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பிரிவு மாணவர் களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு குறித்த தினங்களில் காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இதற்கமைவாக பொரு ளியல் பாடக் கருத்த ரங்கு இன்றும் கணக்கீட் டுப் பாடக் கருத்தரங்கு நாளையும் வணிகக் கல்வி பாடக் கருத்த ரங்கு மறுநாள் புதன் கிழமையும் நடைபெற வுள்ளது. -என்று கல் லூரி அதிபர் அறிவித் துள்ளார்.

(வ-14)

## நீதியரசர் விக்னேஸ்வரனின் இந்துசமய சிந்தனைகள் நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஜூன் 24

உயர் நீதிமன்ற ஓய்வுநிலை நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பான 'இந்து சமய சிந்தனைகள்' நூல் வெளியீ டும் சிவத் தமிழ்ச் செல்வி கலா நிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரை நிகழ்வும் அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்.பணி மனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்க லைக்கழக மாணவர்கள் ஐவ ருக்கு மடிக் கணினிகள் வழங் கப்பட்டதோடு, கிளிநொச்சியி லுள்ள மகாதேவா சிறுவர் இல்லத்திலுள்ள சிறார்களின் கணினிக் கற்றலுக்கு உதவியாக இல்லப் பொறுப்பாளரிடமும் கணினி ஒன்று வழங்கப்பட்டது.

நீதியரசர் விக்னேஸ்வரனின் இந்துசமய சிந்தனைகள் எனும் நூல் தமிழிலும், ஆங்கிலத் தில் "Some Thoughts on Hinduism" எனும் பெயரி லுமாக இரண்டு நூல்களாக வெளியிடப்பட்டன.

இந்திய துணைத் தூதராக யாழ்.அலுவலக அதிகாரி வி.மகாலிங்கம் முதற் பிரதிகளை வெளியிட்டு வைக்க, லண்டன் நல்லை ஆதீன குழு பொதுச் செயலாளர் வே.சிவசுந்தரம் அதனைப் பெற்றுக்கொண் டார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் ஆசியுரை வழங்கினார். நூல் வெளியீட்டுரையை கலாநிதி ஆறு.திருமுருகன் நிகழ்த்தினார்.

நீதியரசர் விக்னேஸ்வரன் நினைவுப் பேருரையை "ஒட்டு றவும் ஒருமைப்பாடும்" எனும் தலைப்பில் நிகழ்த்தினார். நிகழ்வில் பன்னிரு திருமுறை கள் ஒருங்கே அமைந்த நூல் கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆலயங்களுக்குவழங்கப்பட்டன.

இந்துசமயம சிந்தனைகள் எனும் நூல்களை அகில இலங்கை இந்து மாமன்றம் குமரன் புத்தக இல்லத்துடன் இணைந்து வெளியிட்டிருந் தது. நிகழ்வில் நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன புதிய [illegible] கைப் பொறுப்புச் சபையும் ஆரம் பித்து வைக்கப்பட்டது. (வ-4)

## ஆயுள்வேத வைத்தியசாலையில் பரிசாரகருக்கான பயிற்சிநெறி



குருநகர், ஜூன் 24

கைதடி சித்த போதனா வைத் தியசாலையில் கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் பரிசாரகர்க ளுக்கான மூன்று மாத கால பயிற்சி நெறி வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெற்று வரு வதாக கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் மருத்து வப் பொறுப்பதிகாரி திருமதி பிறேமா சிவசண்முகராஜா தெரி வித்தார். குறித்த பயிற்சி நெறி வகுப்புக்களில் வவு னியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள ஆயுள் வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர் கள் கலந்து கொள்கின்றனர். இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக் களத்தின் ஆணையாளர் திரு மதி சியாமா துரைரட்ணம், கைதடி சித்த போதனா வைத் தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரி திருமதி பிறேமா சிவசண்முகராஜா, தாதிய உத் தியோகத்தர்கள் சி.வைரவ நாதன், அ.படவீரசிங்கம், திரு மதி வை. கனகரட்னம் ஆகி யோர்கள் பிரதம அதிதிகளாக கலந்து பயிற்சிநெறியை ஆரம் பித்து வைத்தனர். (வ-51)

> "கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் பரிசாரகர்க ளுக்கான மூன்று மாத கால பயிற்சிநெறி வகுப் புகள் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ள இடர்: மீட்புப் பணிகள் தொய்வு

டேராடூன், ஜூன் 24
மழை வெள்ளத்தால் கடும் சேதத்துக்கு உள்ளாகியுள்ள உத்தரகண்ட் மாநிலத்தில் போதிய ஒருங்கிணைப்பு இல்லாததால் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அதையடுத்து ஆங்காங்கே சிக்கியுள்ள 30 ஆயிரத்துக்கும் அதிகமான யாத்திரிகர்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் தவிக்கின்றனர் என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை, இயற்கை அனர்தங்களால் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரை 18 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மீட்புக் குழுவினரால் மீட்கப்பட்டுள்ள போதும், பெரும்பாலான இடங்களில் இதுவரை மீட்பு பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட இடங்களில் உணவுகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவரும் சூழ்நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை எதிர்பார்க்க முடியாத அளவில் காணப்படக்கூடும் என்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.(ற)

# ஈழப் படுகொலையைக் கண்டித்து மாணவர்கள் வாகனப் பேரணி



சென்னை, ஜூன் 24
இலங்கை அரசால் நடத்தப்பட்ட தமிழினப் படுகொலைகளைக் கண்டித்தும், இலங்கைப் பொருள்களைப் புறக்கணிக்கக் கோரியும் தமிழக அனைத்துக் கல்லூரி மாணவர்கள் இருசக்கர வாகன விழிப்புப்புணர்வுப் பேரணி ஒன்றை ஆரம்பித்துள்ளனர். அனைத்துக் கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் இருசக்கர வாகனப் பேரணி மெரீனா கடற்கரை காந்தி சிலை முன்னாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (ற)

> “அனைத்துக் கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்

# அந்தோனி பதவி விலக வேண்டும்

## வலியுறுத்துகின்றது ம.தி.மு.க.

> “தமிழக மக்களுக்கு பொய் கூறி துரோகம் இழைக்கின்ற அமைச்சர் இராணுவப் பாதுகாப்புத் துறை அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு தகுதியற்றவர் என்றே கருதுகின்றோம்.

சென்னை, ஜூன் 24
தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது, துரோகம் இழைக்கின்ற இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று ம.தி.மு.க. தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எழும்பூரில் நடைபெற்ற ம.தி.மு.க. கட்சியின் இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

"தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தமிழகத்தில் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்க மாட்டோம் என்று இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி உறுதியளித்திருந்தார். ஆனால் அவர் உறுதியளித்த அதே தினத்தில் இராணுவப் பயிற்சிகளுக்காக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவர் தமிழகத்துக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழக மக்களுக்கு பொய் கூறி துரோகம் இழைக்கின்ற அமைச்சர் இராணுவப் பாதுகாப்புத் துறை அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு தகுதியற்றவர் என்றே கருதுகின்றோம். உடனடியாக அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்" என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.



இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்தில் ம.தி.மு.க. கட்சியின் பொதுச்செயலர் வைகோபாலசாமியும் கலந்து கொண்டு உரையாற்றினார். (ற)




# சிறுவன் உதவியால் உயிர் பிழைத்த சிசு

சென்னை, ஜூன் 24
உயிருடன் புதைக்கப்பட்ட பச்சிளம் பெண் குழந்தை சிறுவன் ஒருவனின் உதவியால் உயிர் பிழைத்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

உத்தர பிரதேச மாநிலத்தில் அலிகார் நகரில் உள்ள ஒரு வயல்வெளி பகுதிக்கு ஒரு இளம் பெண்ணும், இளைஞர் ஒருவரும் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளனர். அந்தப் பெண்ணின் கைகளில் பிறந்து 10 நாள்களே ஆன ஒரு பச்சிளம் பெண் குழந்தையும் இருந்துள்ளது. வீதியோரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்திய அந்த இளைஞர் இளம் பெண்ணில் கையிருந்த பெண் குழந்தையை வாங்கி வயல் வெளியில் குழி ஒன்றை வெட்டி, குழந்தையை அதில் போட்டு மூடிவிட்டுத் திரும்பியுள்ளனர்.

இவற்றையெல்லாம் அந்தப் பகுதியைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவன் பார்த்துக் கொண்டிருந்துள்ளான். குழந்தையை புதைத்ததைக் கண்ட சிறுவன் சத்தமிட்டுக் கத்தியுள்ளான். அதையடுத்து கூடிய கிராமத்தினர் புதைக்கப்பட்ட குழந்தையை மீட்டு வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர். குழந்தை தற்போது நலமுடன் இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. குறித்த இளைஞனும், இளம்பெண்ணும் தப்பித்து விட்டனர் என்று கூறப்படுகிறது. தற்போது இருவரையும் பொலிஸார் வலைவீசித் தேடி வருகின்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா பத்மநாதன்

(முன்னாள் மெக்கானிக்கல் போமன்-பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பத்மநாதன் நேற்று (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்-கண்ணகைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், நயனவதி (ஆசிரியர், யா/நாவற்குழி ம.வி) அவர்களின் அன்புத் தந்தையும், குகராஜ் (தாதிய உத்தியோகத்தர்-யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மாமனாரும், காயத்ரி (மாணவி- A/L2013 யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) அவர்களின் பேரனும், காலஞ்சென்ற பூங்கோதை மற்றும் பாலசிங்கம், கனகலிங்கம், இராஜேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் சிவகாமி, சிவபாக்கியம், துரைராசா, காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் செல்வரட்ணம் தவமணி, குணபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவசுப்பிரமணியம், விசுவலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.
தொடர்பு: 0775589147
0776911678

(39603)(10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

### தேவசகாயம் பேனாட்



மல்வம், உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் பேனாட் (22.06.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் மற்றும் நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் பூப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், லொஜின், டெஸ்மன், டிச்சானா ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவ பெனடிக்ற் பெர்ணதேற், பேணடேத், பேக்மன்ஸ் (டெவி) ஆகியோரின் சகோதரரும், அல்பிறட், விமலா, காலஞ்சென்ற ஜெகநாதன் (சாள்ஸ்) மற்றும் ஜான்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மல்வம்,
உடுவில்.

(சி/9979 (45.6.3)

தகவல்:
மைத்துனர் (அல்பிறட்)

# போர்க்குற்றமே அதிகரிக்கும்

## சிரியக் கிளர்ச்சியாளருக்கான ஆயுத உதவி குறித்து ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை

ஜெனிவா, ஜூன் 24

சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா வழங்கும் ஆயுத உதவிகள், அங்கு நடைபெறுகின்ற போர்க்குற்றங்கள் மேலும் அதிகரிக்கவே வழி வகுக்கும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை எச்சரித்துள்ளது.

''சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு உதவியளிப்பது தொடர்பான அமெரிக்காவின் முடிவை ஐ.நா. சபை விமர்சிக்கவில்லை. எனினும் அமெரிக்காவோ அல்லது வேறு நாடுகளோ கிளர்ச்சியாளர்களுக்கு அளிக்கும் ஆயுத உதவிகள் அங்கு மேலும் பிரச்சினைகளை உண்டாக்குவதாகவே அமையும்'' என்றும் ஐ.நா.



சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த ஐ.நா. சுயாதீன விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் போலோ பினிரோ, ''அமெரிக்காவிடம் இருந்து நவீன ஆயுதங்களைப் பெறும் கிளர்ச்சியாளர்கள் இராணுவத் தீர்வையே நாடுவார்கள். அமைதிப் பேச்சுக்களைப் புறக்கணிக்கவே எண்ணுவார்கள். அது மனித உரிமை மீறலுக்கும் போர்க் குற்றங்கள் அதிகரிக்கவும் வழி வகுக்கும். சிரியப் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாக அமைதிப் பேச்சுக்கள் மூலமே தீர்வு காண முயற்சிக்க வேண்டும்'' என்று வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, ஜோர்டான் மற்றும் துருக்கியில் உள்ள படைத்தளங்களில் சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு போர் விமானங்கள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை எதிர்கொள்ளும் முறைகள் பற்றிய பயிற்சிகளை அமெரிக்க இராணுவத்தினர் வழங்கி வருகின்றனர். கிளர்ச்சியாளர்களுக்கு நேரடியாக இராணுவ உதவிகள் மற்றும் ஆயுதங்கள் வழங்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்ததை அடுத்து அந்தப் பயிற்சிகள் மேலும் தீவிரமடைந்துள்ளன. (ற)

## எட்வேர்ட் ஸ்நோடென் மொஸ்கோவுக்கு

அமெரிக்காவின் இணைய உளவுத் திட்டம் தொடர்பான தகவல்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய சி.ஐ.ஏ. முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடென் ஹொங்கொங் நகரை விட்டு மொஸ்கோவுக்குப் பயணமாகியுள்ளார் என்று 'சவுத் சைனா மோர்னிங்' என்ற பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. எனினும் அதுகுறித்த மேலதிக விவரங்கள் எதனையும் அந்தப் பத்திரிகை வெளியிடவில்லை.

இதேவேளை, ஸ்நோடென் குறித்த பத்திரிகைக்கு ''சீனா வின் கைத்தொலைபேசி வலையமைப்புகள் மற்றும் டிசிங்குவா பல்கலைக்கழகத்தையும் அமெரிக்கா தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றது'' என்ற தகவலை நேற்று வெளியிட்டிருந்தார்.

இந்தத் தகவல் வெளியிடப்பட்டதன் பின்னரே ஸ்நோடன் ஹொங்கொங் நகரை விட்டு வெளியேறி மொஸ்கோ பயணமாகிக் கொண்டுள்ளார் என்ற தகவலை 'சவுத் சைனா மோர்னிங்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ஸ்நோடன் குறித்த தகவல்களுக்கான அமெரிக்கா தம்மை அணுகியிருப்பதாக ஹொங்கொங் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



ஸ்நோடென் மீது அரச உடைமைகளைத் திருடியமை மற்றும் அரசை உளவு பார்த்தமை போன்ற பிரிவுகளில் அமெரிக்கா வழக்குப் பதிவு செய்துள்ளது. அத்துடன் ஸ்நோடனைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஹொங்கொங் அரசை வலியுறுத்தியுள்ளது. (ற)

அமெரிக்காவால் ஸ்நோடனைக் கைது செய்து ஒப்படைப்பதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்பட்டதாகவும், அந்தக் கோரிக்கை முழுமையான சட்டரீதியானதாகக் காணப்படவில்லை என்றும் ஹொங்கொங் அரசு அறிவித்துள்ளது என்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அணு ஆயுத பாதுகாப்புக்கு 25,0000 படையினர்

இஸ்லாமாபாத், ஜூன் 24

பாகிஸ்தானின் அணு ஆயுதங்களின் பாதுகாப்புக்கென 25 ஆயிரம் பேர் கொண்ட சிறப்புப் படைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு நிதி அமைச்சர் இஷாக் தர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து வெளியிடும்போது,

'' சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்ட, அதிநவீன ஆயுதங்களுடன் கூடிய 25 ஆயிரம் கொண்ட சிறப்பு படை அணு ஆயுதங்களை பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் காக்க சிறப்புப் படை, சிறப்பு கடலோர காவல்படை போன்றவை உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் சிறப்பு உளவுப் பிரிவு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறப்புப் படை, நிலம் மற்றும் ஆகாய மார்க்கமாக வரும் தாக்குதல்களை சமாளிக்கும் திறன் கொண்டவையாக உருவாக்கப்பட்டுள்ளது. அணு ஆயுதங்களைக் கையாள்வது குறித்த பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன'' என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## மண்டேலாவின் நிலை கவலைக்கிடம்

ஜொகன்னர்ஸ்பேர்க், ஜூன் 24

நுரையீரல் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க விடுதலை வீரரும் முன்னாள் ஜனாதிபதியுமான நெல்சன் மண்டேலாவின் உடல் நிலை மோசமடைந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த இரு வாரங்களாக தீவிர மருத்துவக் கண்காணிப்பில் இருந்த மண்டேலாவின் உடல்நிலை நேற்றுமுன்தினம் மீண்டும் மோசமடைந்துள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சற்றுச் சீரடைந்திருந்த அவரது உடல்நிலை நேற்றுமுன்தினம் மோசமடைந்ததை அடுத்து அவரது நுரையீரல் மற்றும் சிறுநீரகம் ஆகிய உறுப்புகள் செயலிழந்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ள போதும் மருத்துவமனை வட்டாரங்கள் எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை. (ற)



பிரேஸிலில் அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக பொதுமக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்கள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றமையை அடுத்து வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 2 இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

## மகளுக்காக பரீட்சை எழுதிய தாய் கைது

பரிஸ், ஜூன் 24

தன் மகளுக்காக பரீட்சை எழுதிய தாய் ஒருவர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது பரிசில் உயர்நிலைப் பாடசாலையில் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. ஒரு கல்லூரியில் அதிபர் ஒவ்வொரு பரீட்சை அறையாக மேற்பார்வையிட்ட போது, 52 வயதுடைய பெண் ஒருவர் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தார். சந்தேகம் அடைந்த அதிபர், பெண்ணை விசாரித்த போது அவர் தனது 19 வயது மகளுக்காகப் பரீட்சை எழுதிக் கொண்டிப்பது தெரிய வந்தது. அதையடுத்து கைது செய்யப்பட்டார் அந்தப் பெண். அவரது மகள் எதிர்வரும் 5 வருடங்களுக்குப் பரீட்சை எழுத முடியாது என்றும் கூறப்படுகிறது. (ற)

## 60 லட்சம் பேரின் பேஸ்புக் தரவுகள் முறைகேடாகப் பகிரப்பட்டுள்ளன

நியூயோர்க், ஜூன் 24

சமூக இணையதளமான பேஸ்புக்கைப் பயன்படுத்தும் சுமார் 60 லட்சம் பயனாளிகளின் தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியென்பொருள்கள் மூலம் முறைகேடாக பகிர்ந்து கொள்ளப்பட்டு விட்டன என்று பேஸ் புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் நிதி மற்றும் இதர தகவல்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படவில்லை என்றும், தவறான நோக்கத்துடன் அவை பகிர்ந்து கொண்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்றும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தம்மை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியது என்றும், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அதுகுறித்த விவரங்கள் மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள பாதுகாப்பு குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

''வாடிக்கையாளர்களின் அந்தரங்க தகவல்களை பாதுகாப்பதற்கு எங்களால் முடிந்தவரை முயற்சிக்கிறோம். தகவலை பாதுகாக்கும் பணியில் வலிமையான குழுக்களை ஈடுபடுத்தினாலும், எந்த ஒரு நிறுவனத்தாலும் இதுபோன்ற முறைகேடுகளை 100 சதவீதம் தடுக்க முடியாது என்பது நிதர்சனம்'' என்று பேஸ் புக் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ற)

## பாகிஸ்தானில் துப்பாக்கிச் சூடு; வெளிநாட்டவர்கள் 11 பேர் சாவு

இஸ்லாமாபாத், ஜூன் 24

பாகிஸ்தானில் விடுதியொன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சுற்றுலாப் பயணிகள் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடக்கு எல்லை நகரான நாங்கா பாரபட்டில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றின் மீதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



நேற்று அதிகாலை விடுதிக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள், சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. துப்பாக்கிப் பிரயோகத்தில் ரஷ்யா, சீனா, உக்ரைன் நாட்டைச் சேர்ந்த 11 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து துரித விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் உயிரிழந்தவர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை

# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்

## பூங்காவனத் திருவிழாவும் மணிமண்டபத் திறப்புவிழாவும் (சிறப்புமலர்) - 24.06.2013

### ஆலய பிரதம குருமாரின் அருளாசி உரை



எல்லாம் வல்ல அன்னை வீரமாகாளி அம்மையின் பெருந்திருவிழா சிறப்பாக நடைபெற்று இன்றைய தினம் அன்னையின் பூங்காவனம் சிறப்புற நடைபெற இருக்கின்றது. இந்தப் பூங்காவன உற்சவத்தில் சிறப்பம்சமாக பூங்காவன உற்சவ உபயகாரர்களான திரு. திருமதி க.பற்குணராஜா, அம்பிகாதேவி குடும்பத்தினரால் பலகோடி ரூபா செலவிலே மிக பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்ட மணி மண்டபம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வீரமாகாளி அம்மையின் பாதார விந்தங்களில் அர்ப்பணிக்கப்பட இருக்கின்றது. இந்தப் புனித திருப்பணியை நிறைவேற்றித் தந்த அன்னாரின் குடும்பத்தினருக்கு அன்னை வீரமாகாளியின் திருவருளோடு எமது குருவருளும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என அருளாசி கூறுகின்றோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

*'சிவாகம கிரியாரத்தினம்'*
*சிவஸ்ரீ சி.செல்ராசகுருக்கள்,*
*சிவாச்சார்யா இளவரசு, சக்தி கிரியா வியாசர், சக்திதாசன்*
*சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்*
(மேற்படி ஆலய பிரதம குருமாரும் ஆதீன கர்த்தாக்களும்)

### அம்பிகை அடியார்களுக்கு..



யாழ்ப்பாணம் வண்ணை வீரமாகாளி அம்பாளுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மணிமண்டபம் அம்பிகையினுடைய பாதத்துக்கு இன்று சமர்ப்பிக்கப்படுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. யாழ்ப்பாண வரலாற்றின் தனிச் சிறப்புக்களைக் கொண்ட நல்லூரை ஆண்ட சங்கிலிய மன்னனால் வழிபாடு செய்யப்பட்டு மன்னனுடைய உறைவாள் இன்றும் அம்பிகையோடு இருக்கின்ற பெருமையைக் கொண்ட வீரமாகாளி அம்பாளுக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்ப வேலைகளோடு அழகான மணிமண்டபத்தை இன்றைய உபயகாரர்களாகிய பற்குணராசா குடும்பத்தவர்கள் நிறைவு செய்து அம்பிகையினுடைய பாதத்துக்குச் சமர்ப்பிப்பது அன்னையினுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதாகும். பல வளர்ச்சிகளைக் கொண்டுள்ள இந்த ஆலயம் எல்லோரையும் மகிழ்விக்கும் செய்தியாகும். இந்தப் புனித பணியை நிறைவு செய்திருக்கும் குருமார்களுக்கும் உபயகாரர்களுக்கும் பேரின்பம் கிடைப்பதாகும்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*நல்லை ஆதீனகுருமுதல்வர்*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்*

### அன்னையின் அருளே இச்சிறு பணி



...காளித் தாயாளின் அடியவர்களில், ...ன். எம்பிராட்டியின் இத்திருக்கோயி... வரலாற்றை சைவ உலகம், ...னைவில் கொண்டிருக்கும். சங்கிலி ...ற்றிப் புகழ்ந்து, வழிபட்டு வரம் பெற்ற ... ...காயில் இந்துக்களின் தலையாய முதுசொத்து. இந்தத் திருத்தலத்தின், மகிமை குன்றாதிருக்கவும் புதுப்பொலிவு பெறவும் முகப்பில் ஒரு மணிமண்டபம் அமைக்கும் பேற்றினை எனக்கு அன்னை வழங்கினாள். இந்தத் தொண்டை நிறைவேற்ற எனக்கு அன்னையின் பேரருள் கிட்டியது நான் செய்த பேறேயாகும். இப்பணிக்கு ஆசி கூறிய தர்மகர்த்தாக்கள் ஊக்க மூட்டிய அனைத்து உள்ளங்களுக்கும் குறிப்பாக ஆலய நிர்வாகத்தினருக்கும் என் அன்பு கனிந்த நன்றிகள்.



ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி

*அன்பன், அன்னையின்*
*அடியவன்*
*க. பற்குணராஜா அம்பிகாதேவி*
*[நியூராம் கொன்ஸ்ரக்சன்]*

### அன்னையின் பாத கமலங்களில் புதிய மணிமண்டபம் சமர்ப்பணம்



இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த சங்கிலிய மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டும் வழிபாடு செய்யப்பட்டும் தனது ஆட்சிக் காலத்தில் தனது சேனைகளுக்கு வெற்றியையும் நல்லாட்சியையும் பெற்றுக் கொள்வதற்காக சிறப்பாக வழிபடப்பட்டதும் ஆதியிலிருந்தே சைவக் குருமார்களினால் நித்திய நைமித்திய வழிபாடுகள் ஆற்றப்பட்டதுமான வண்ணை வீரமாகாளி அம்பாளின் திருவருள் துணை கொண்டு அன்னையின் மீளாவடியவரான திருவாளர் பற்குணராஜா தம்பதியினரின் தர்ம சிந்தனையில் அவர் தம் தர்மச் செயலான அன்னையின் ஆலயத்தின் இராஜ கோபுரத்துக்கு முன்னிலையில் அமைக்கப்பெற்ற அலங்கார வேலைப்பாடுகளும் மிக அழகான வர்ண வேலைப்பாடுகளுடன் அமைந்த கண்கவர் 'மணி மண்டபம்' இன்று நடைபெறும் பூங்காவன உற்சவத்தின் போது அன்னையின் பாத கமலங்களில் சமர்ப்பிக்கப்படுவதையிட்டு நாம் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த மணிமண்டபத்தை உபயம் செய்த திருவாளர் பற்குணராஜா குடும்பத்தினருக்கு வீரமாகாளியம்மாளின் திருவருள் கடாட்சம் நிறைவாகக் கிடைக்கட்டும். மேலும் இந்த மணிமண்டபத்தை அழகாக உருவாக்கிய சிற்பக் கலைஞர்கள், வர்ணக் கலைஞர்கள், மின்ஒளி அமைத்த கலைஞர்கள் மற்றும் சகல வழிகளிலும் பணிபுரிந்த அனைவருக்கும் அம்பாளின் திருவருட்கடாட்சம் நிறைவாகக் கிடைக்கட்டும். அத்தோடு இந்த ஆலயத்தில் இறுதியாக நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பல திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றமையை எல்லோரும் அறிவார்கள். மேலும் அன்னையின் ஆலயத்தில் வடக்கு வாசலில் அமைந்த இராஜகோபுரம் போல ஏனைய மூன்று வாசல்களுக்கும் இராஜகோபுரம் அமையப்பெற்று வீரமாகாளி அம்பாளின் ஆலயம் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறந்த ஆலயமாக எதிர்காலத்தில் மிளிர வேண்டும் என்று அன்னையின் திருவருளை வேண்டி நிற்கின்றோம். இன்றைய நிகழ்வுகள் யாவும் பூரணமாக நிறைவுபெற எம்குல தெய்வமான அரசடி விநாயகரை வேண்டி நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*சிவஸ்ரீ.சதா மகாலிங்க சிவக்குருக்கள்*
*பிரதம குரு, நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம். நல்லூர் யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன

# ...ம்பாள் தேவஸ்தானம்





## செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி



சரித்திரப் பிரசித்தி பெற்ற வரலாற்றுத் திருக் கோயிலாகிய நல்லூர் வீரமாகாளி அம்பாளின் திருவருள் அறியாதவர்களில்லை. தமிழ் வேந்தர் காலத்தில் செழிப்புற்று அந்நியர் ஆட்சியில் அழிவுற்று மீண்டும் வளர்த்தெடுக்கப்பட்ட கோயில். இன்று இந்தத் திருக்கோயில் சகல சிறப்புகளுடனும் நிறைவாகக் காட்சியளிக்கின்றது. அழகான வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கும் அம்பாளின் திருக்கோயிலில் திரு. கே.பற்குணராஜா அம்பிகாதேவி தம்பதியினரின் கொடையில் அழகான மணிமண்டபம் கட்டப் பெற்றுள்ளமை சிறப்பு அம்சமாகும். தம் வாழ்வின் உயர்வுக்கு உதவிய அம்பாளுக்கு அர்ப்பணமாக இந்தப் புனித கைங்கரியத்தை இந்தக் குடும்பத்தவர்கள் நிறைவேற்றியிருப்பது பாராட்டுக்குரியது. வீரமாகாளி அம்பாள் அருளால் சமீப காலத்தில் பல திருப்பணிகள் நிறைவு பெற்றமை அனைவரும் அறிவர். மாமன்னன் சங்கிலியன் இம்மண்ணை வீரமாகாளியிடமே இறுதியில் ஒப்படைத்து இறையடி சென்றார். எம்மண்ணைக் காத்து எம் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு தாயே உன்னிடமே.... என்று வேண்டிப் பிரார்த்தித்து விழவு பெறுவோமாக.

*கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர்,*
ஸ்ரீதுர்க்காதேவி, தேவஸ்தானம், தெல்லிப்பழை, தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

## தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே

வீரத்தில் சிறந்த எங்கள் வீராதி வீரன் அந்த
பார் புகழ் சங்கிலியன்
பக்தியால் பணிந்த அன்னை
சிங்கத்தில் ஏறி அன்னை சீறியே
எழுவாளானால், அண்டமே அதிரும் அந்த
அன்னையின் அருளாலன்றோ
உலகையே ஆளும் அந்த உத்தமி அறிவாள்
எல்லாமானவள் கோயில் தன்னை
தக்கவாறு அழகு சொட்ட
பூ தலம் வியக்கும் வண்ணம்
புனித நல் மண்டபம் அமைத்து
மாண்புற கோயில் தன்னை
மனங்கவர் கோயிலாக்கி வைத்த
சீர்பெறு தொண்டன் எங்கள்
சிந்தையைக் கவர்ந்த நல்லோன்
பற்குணராசா பார்புகழ வாழியிநீடு



*விகடகவி மு.திருநாவுக்கரசு,*
*[ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி]*

## அம்பிகை அடியார்களுக்கு..





எல்லோருக்கும் நல்லருள்புரியும் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மனுடைய மணி மண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு ஆலய தர்மகர்த்தாக்களாகிய சிவஸ்ரீ நா.சிவதர்ஷக் குருக்கள், காந்தி ஐயா ஆகிய இருவரும் அகம் மகிழ்கின்றோம். மேலும் இவ்வாறான உபயகாரர்கள் முன் வந்து ஆலய வளர்ச்சிக்கு மேன்மேலும் ஆதரவு வழங்க வேண்டும். மற்றும் மணிமண்டபத்தைப் பூர்த்தி செய்து காணும் திரு.பற்குணராஜா குடும்பத்தினர்க்கு என்றும் அன்னையின் திருவருள் கிடைத்து நலமுடன் வாழ வேண்டும் என்று வண்ணை ஸ்ரீ வீராமாகாளி அம்மனை வேண்டுகிறோம்.

"அன்னையை சரண் புகுந்தோர் வீரசக்தி பெறலாம்"

*ஆலய தர்மகர்த்தாக்கள், சிவஸ்ரீ*
*நா.சிவதர்ஷக்குருக்கள், காந்தி ஐயா .*

**உதயசங்கர்** குழுவினர் நாதஸ்வர இளவரன் ஈழநல்லூர் - (ஆஸ்தான வித்துவான் ) விஷேட நாதஸ்வர தவில் கச்சேரி

இவர்களுடன்....

**நாதஸ்வரம்**

திருவண்ணாமலை திருக்கோயில்
ஆஸ்தான நாதஸ்வர வித்துவான்
நாதசுர சுகநாத இளவரசன்
**T.K.K. காந்தி தமிழ்நாடு**

நாதஸ்வர இசைசுடர்
**T.R. வாசுதேவன்**
**(கடலூர்) தமிழ்நாடு**

**T.செய்யப்பர் (தஞ்சாவூர்)**

**தவில்**

தவில் இசைகலைமணி
**T.G. வெங்கடாஜலம் (கடலூர்)**
**தமிழ்நாடு.**



மறைந்த தவில் மேதை
**N.R.S. சின்னராஜா** அவர்களின் புதல்வன்
**N.R.S.ரவீந்திரன் (இணுவில்)**

தவில் மேதை
**R.சிவகுமார் குழுவினர் -**
**வழக்கம்பரை**



**வி.சபேசன் குழுவினர் - நல்லூர்.**

**எஸ்.சிவகுமார்- வழக்கம்பரை**

**ஒலி ஒளி அமைப்பாளர்**
தேவன் ச[illegible]
நவா லயற் தேவன்சவுண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் இறங்கு துறை புதனன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

ஐ.ஓ.எம்.நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்ட பாஷையூர் இறங்குதுறை நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது.


கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரட்ண இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இறங்கு துறையை மீனவர் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கவுள்ளார்.

ஐ.ஓம்.எம். நிறுவனத்தினால் சுமார் 60 மில்லியன் ரூபா நிதியுதவியில் புனரமைப்புச் செய்யப்பட்ட இந்த இறங்கு துறையின் மூலம் ஊடாக மீனவர்கள் பயனடையவுள்ளனர். (வ-4)

# அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 24

தென்மராட்சி வலயக் கல்விப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் பி.ப. ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)



நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழாவில் பக்தர்கள் திரண்டிருக்க அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவதையும் அங்கப் பிரதட்சணையில் ஈடுபடும் அடியார் கூட்டத்தையும் காணலாம். (வ-7)

## ஆலயச் சூழலில் மது விற்ற 10 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 24

நயினாதீவு ஆலயச் சுற்றாடலை அண்மித்து சட்டவிரோதமாக மது விற்பனை செய்தமை, கள்ளு வைத்து விற்பனை செய்தமை தொடர்பில் 10 பேர் யாழ்.மதுவரித் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டனர்.

அனைவரும் புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

யாழ்.மதுவரித் திணைக்கள பரிசோதகர் செந்தூரம் தலைமையிலான குழுவினரின் திடீர் சோதனையின்போதே இவர்கள் பிடிபட்டனர். (த-4)

# விவசாயத் தொழில்நுட்பப் பூங்கா ஓகஸ்ட் முதல் வாரத்தில் பார்வைக்கு

## விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூன் 24

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள வளாகம் ''விவசாயத் தொழில்நுட்ப பூங்காவாக'' மறு சீரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வருடம் முதல் வாரத்தில் மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது என யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

விவசாயிகள் மரபு வழியான பயிர்ச் செய்கை முறையில் இருந்து விடுபட்டு காலவோட்டத்துக்கும் கள நிலைக்கும் ஏற்ப விவசாய நடைமுறை மற்றும் பயிர்ச் செய்கை நடவடிக்கை களில் நவீன தொழில்நுட்ப உத்திகளைக் கையாளவேண்டும். இதன் மூலம் பொருளாதார ரீதியில் முன்னேற முடியும். அத்துடன் பயிர்ச் செய்கையில் ஏற்படக்கூடிய நோய்த் தாக்கங்களையும் தேவையற்ற இழப்புக்களையும் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

விவசாயிகள் மற்றும் விவசாய ஆர்வலர்களின் எதிர்கால நன்மைகளைக் கருத்தில்கொண்டு திருநெல்வேலியில் அமைந் துள்ள விவசாயத் திணைக்கள வாளாகம் ''விவசாயத் தொழில் நுட்ப பூங்காவாக'' மாற்றப்பட்டு வருகின்றது. திருநெல்வேலி விவசாயத் திணைக்கள வளாகத்தை விவசாயத் தொழில்நுட்ப பூங்காவாக மறுசீரமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கணிசமான அளவு செயற்பாடுகள் நிறைவடைந் துள்ளன. இந்த வருடம் ஓகஸ்ட் முதல் வாரம் விவசாயத் தொழில் நுட்ப பூங்கா மக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்படும்.

விவசாயத் தொழில்நுட்ப பூங்கா செயற்படத் தொடங்கியதும் அலுவலக நேரத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய ஆர்வலர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பூங்காவைப் பார்வையிட்டு உரிய தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் அலுவலர்களிடம் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்; தமது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள முடியும்-என்றார். (வ-11)

## மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, ஜூன் 24

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் குடும்பஸ்தர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த சின்னையா செல்வராசா (வயது-56) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நாளை

ஆனி-11 செவ்வாய்க்கிழமை 25.06.2013

திதி: துதியை பி.ப. 12.51 வரை

நட்சத்திரம்: உத்தராடம் மு.இ. 11.32 வரை

சுபநேரம்: 10.25 - 11.55 வரை

இராகுகாலம்: 02.55 - 04.25வரை

**மேடர்:** புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபர்:** சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**மிதுனர்:** சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகர்:** நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**சிங்கர்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**கன்னி:** எதிர்பாராத சந்திப்பு நிகழும். எதிர்மறை எண்ணங்கள் நீங்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தொழிலில் இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**துலார்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**விருச்சிகர்:** சில தினங்களாக இருந்த சோம்பல் நீங்கி, உற்சாகம் அடைவீர்கள். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசர்:** சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். அடுத்தவர்களை குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். யாரையும் யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மகரர்:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் மிகுதிகளைப் போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதத்தைத் தவிர்க்கவும்.

**கும்பர்:** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உடன்பிறந்தவர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பீர்கள். மனதுக்கு இதமான செய்திகள் வரும். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**மீனர்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உறவினர்கள், நண்பர்களுக்கு உதவுவீர்கள். நீண்ட நாள்களாக பார்க்க நினைத்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில ரகசியங்களைச் சொல்லித் தருவார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | 6 | | | 9 | 3 |
| 2 | 1 | | 3 | 5 | | | 6 | 8 |
| | | | | 8 | | | | |
| 5 | 7 | 4 | | 2 | 6 | | | |
| | 8 | | | | | | 4 | |
| | | | 5 | 4 | | 7 | 8 | 6 |
| | | | | 3 | | | | |
| 7 | 2 | | | 1 | 4 | | 5 | 9 |
| 4 | 5 | | | 7 | | 3 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 2 | 1 | 7 | 3 | 5 | 8 | 6 |
| 7 | 8 | 5 | 4 | 2 | 6 | 3 | 1 | 9 |
| 6 | 3 | 1 | 9 | 8 | 5 | 2 | 7 | 4 |
| 1 | 7 | 3 | 2 | 6 | 9 | 4 | 5 | 8 |
| 8 | 5 | 6 | 7 | 3 | 4 | 1 | 9 | 2 |
| 9 | 2 | 4 | 5 | 1 | 8 | 6 | 3 | 7 |
| 5 | 6 | 9 | 8 | 4 | 1 | 7 | 2 | 3 |
| 2 | 4 | 8 | 3 | 5 | 7 | 9 | 6 | 1 |
| 3 | 1 | 7 | 6 | 9 | 2 | 8 | 4 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

நடத்தும்

பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சங்கஉறுப்பினர்களுக்கான

# சேவைநலன் பாராட்டுவிழாவும் வெள்ளிவிழா சேவையாளர் விருது வழங்கல் நிகழ்வும் – 24.06.2013

## நிகழ்ச்சி நிரல்

* மங்கள விளக்கேற்றல்
* அகவணக்கம்
* வரவேற்புரை : திரு. பொ.நை.ப. யசோதன் (இணைச்செயலாளர்)
* தலைமையுரை
* வாழ்த்துரை : திரு. சி. கலாராஜ் (உப தலைவர்)
* சிறப்பு விருந்தினர்கள் உரை
* பிரதம விருந்தினர் உரை
* ஓய்வு பெற்ற விழாநாயகர்களைக் கௌரவித்தல்
* 25 வருடத்திற்கு மேலான சேவையாளர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்தல்
* புலமைப் பரிசில் சித்தியெய்திய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு பதக்கம் அணிவித்தும் பரிசில் வழங்கியும் கௌரவித்தல்.
* பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்த நிதியுதவி வழங்கல்
* ஏற்புரை : திரு.மு.யோகேந்திரன் (ஓய்வுபெற்ற ஊழியர்)
* நன்றியுரை : திரு. க.தர்மராசா (இணைச்செயலாளர்)

## பாராட்டுப்பெறும் ஓய்வுபெற்ற ஊழியர் சங்க உறுப்பினர்கள்

(25.05.2011 முதல் 08.06.2013 வரை)




## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

"செய்நன்றி மறப்பது நன்றன்று" அந்த வகையில் இந்தப் பல்கலைக்கழகத்தில் நீண்ட நாள்கள் சேவையாற்றி ஓய்வு பெறும் ஊழியர்களையும், நீண்டகாலமாகச் சேவையாற்றி வரும் ஊழியர்களையும் கௌரவிக்கும் முகமாக நடைபெறும் இந்த விழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பல இடர்கள், தடங்கல்கள் மத்தியில் தனது வேலைத்தளத்தில் தங்களுடைய சேவை மிகத் தேவை என உணர்ந்து சேவையாற்றிய ஊழியர்களை வாழ்த்துவது சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஊழியர்களுக்கு. இவர்களின் கடின உழைப்பு எடுத்துக்காட்டாக அமைந்து அவர்களையும் இவ்வாறு உழைக்கத் தூண்ட வேண்டும். இளைப்பாறும் ஊழியர்கள் தமது ஓய்வுநாள் களை இன்பமாகவும், இனிமையாகவும் கழிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், துணைவேந்தர்.

## பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமானது இன்று ஓய்வு பெற்ற, நீண்டநாள் (வெள்ளி விழா ) சேவை செய்த எமது அங்கத்துவ ஊழியர்களின் கௌரவிப்பு நிகழ்வினையும், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற எமது அங்கத்தவர்களின் பிள்ளைகளின் பாராட்டு விழாவினையும், உதவி பெறும் மாணவர்களின் கொடுப்பனவு நிகழ்வினையும் சிறப்பாக கொண்டாடுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு பொன்னான இந்நாளில் நீண்ட காலம் பல்கலைக்கழக சேவையில் தங்களை அர்ப்பணித்து அரும்பாடுபட்டு பணிநிலையில் ஓய்வடைந்திருக்கும் எங்கள் சிரேஷ்ட அங்கத்தவர்களை கௌரவிக்க எமக்கு கிடைத்திருக்கும் இவ்வாய்ப்பானது மகத்துவமானதாகும். பல்கலைக்கழக சேவையில் வெள்ளிவிழா காணும் எமது ஊழியர்களைக் கௌரவிக்கவும் எமக்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. எமது சங்கம் இப் பல்கலைக்கழகத்தில் பெரும் ஆலமரமாக வளர்ச்சி பெற்றுப் பல நெருக்கடியான காலகட்டங்களிலும் ஊழியர் உரிமைகளுக்காகப் போராடி வருவதுடன் பல்கலைக்கழக சமூகத் தில் நடைபெறும் பொது விடயங்களிலும் தன் காத்திரமான பங்களிப்பை பதிவு செய்துள்ளது. இன்றைய சூழலில் சமூகத்தின் கலாசார விழுமியங்களை பல்கலைக்கழகத்தில் கட்டிக் காப்பதில் எமது சங்கம் கவனத்தை செலுத்த வேண்டியும் ஏற்பட்டுள்ளது.

மிகவும் உணர்வு பூர்வமான இவ்வேளையில் ஓய்வு பெற்ற எம் ஊழியர்களின் ஓய்வுக்காலம் அமைதியாகவும், சிறப்பானதாகவும் அமைய பிரார்த்திக்கின்றேன். வெள்ளிவிழா சேவையாளர்களும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றேன். புலமைப்பரிசில் பெற்ற மாணவ செல்வங்களும் நிதி உதவி பெறும் பல்கலைக்கழக மாணவர்களும் இன்னும் பல சிகரங்களைக் கண்டு தாயகத்தில் தலைநிமிர்ந்து வாழ வாழ்த்துகின்றேன்.

சி. தங்கராஜா, தலைவர்

## விருது பெறும் வெள்ளிவிழா சேவையாளர்கள்

1. திரு. க. கமலநாதன்
2. திரு. ம. குணசேகரன்
3. திரு. ந. கந்தவேள்
4. திரு. A.A.F. திருக்குமரன்
5. திரு. இ. அமிர்தலிங்கம்
6. திரு. மா. காலிங்கராசா
7. திரு. நோ. சகாயநாதன்
8. திருமதி. எஸ். செல்வராசா
9. திரு. க செல்வரட்ணம்
10. திரு. சி. தெய்வேந்திரா
11. திரு. வே. சிவகுமார்
12. திருமதி. ச. செல்வகுமார்
13. திரு. இ. மதிகரன்
14. திரு. மா. உதயகுமார்
15. திரு. கோ சத்தியகுமார்
16. திரு. நா.சே[illegible]
17. திரு. க. குமரேஸ்வரன்
18. திரு. க. அம்பிகாவதி
19. திரு. ச. குகன்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர்களின் பிள்ளைகள்

1. யூட் விமலநாதன் யூடினி
2. கிருபானந்தராசா கிங்ஸ்ரன் ஜெறி
3. ஜெயந்திரன் ரிதுர்ஷிகா
4. அருள்குமரன் திவ்யன்
5. தனேஸ்வரன் விவேகன்
6. சுரேந்திரன் தனுப்பிரியா
7. தயாபரன் சங்கவி
8. வள்ளுவதாசன் வாகீசன்
9. சசிரூபன் சிவலக்ஷியா
10. தர்மராசா தர்மதன்
11. தர்மசேனா ஐதுர்சினி
12. இலக்ஸ்மன் ஷமிந்தன்
13. நீதிராசா சிவஜெனனி
14. மகாராசா சங்கவி
15. அன்ரனிராஜன் நிக்ஷன்அன்ரனி
16. இராஜேஸ்வரன் கனிஷ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125 ஆவது யூபிலி ஆண்டுப் பெருவிழா
# 24.06.1888–24.06.2013
# புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்
# சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.



125வது ஆண்டு நிறைவு விழா 24.06.2013
1888–2013

### யாழ். ஆயரின் ஆசிச் செய்தி.



யாழ். நகரின் முக்கியமான ஆலயங்களில் யூவானியார் ஆலயமும் ஒன்றாகும். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கும் இந்த ஆலயம் நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்துள்ளது. காலத்துக்குக் காலம் அங்கு பொறுப்பேற்ற பங்குத் தந்தையர்கள் இந்த ஆலயத்தை மிகச் சிறப்பாகப் பேணியுள்ளார்கள் ஆனி மாதத்தில் வரும் புனித யுவானியார் பிறந்த திருநாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆலயத்தைச் சேர்ந்த பொது நிலை யினா் மிகவும் ஆர்வத்துடன் ஆலயத்துக்காகப் பணி செய்து வருகிறார்கள். இவர்களுடைய சேவைகள் மிகவும் பாராட்டத்தக்கது. 125 ஆவது விழாவைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில் பங்குச் தந்தைக்கும் அருட்பணிச் சபை அங்கத் தவர்களுக்கும் பங்கு மக்களுக்கும் எனது இனிய வாழ்த்துக்களைக் கூறி புனித யுவானியாரின் பரிந்துரை வேண்டி ஆசித்து நிற்கின் றேன்.

பேரருட் திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்.,
யாழ். ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

### மன்னார் ஆயரின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணத் திருச்சபையின் பழம் பெரும் ஆலயங்களில் ஒன்றாக சுண்டுக்குழியில் அமைந்துள்ள புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் விளங்குகின்றது. இந்த ஆலயத்தின் 125ஆவது ஆண்டு விழா சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். ஓர் ஆயர் என்ற வகையில் மட்டுமல்ல இந்த ஆலயத்தின் முன்னாள் பங்குத் தந்தை என்ற வகையில் எனது மகிழ்ச்சி இரட்டிப் பாகின்றது. நான் இந்தப் பங்கில் ஏழு ஆண்டுகள் பணி புரிந்ததையிட்டு பெருமைப்படுகின்றேன்.

புனித திருமுழுக்கு யோவான் மட்டில் எனக்கு ஆழமான பக்தி உண்டு. அவருடைய வாழ்வு, மரணம் எனக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்தது. உண்மைக் காக, நீதிக்காக உறுதியோடு குரல் கொடுத்து அதற் காகவே தன் இன்னுயிரையும் அர்ப்பணித்த ஓர் ஒப்பற்ற தியாகி புனித திருமுழுக்கு யோவான் அவரிடம் விளங்கிய இறைவாக்கினருக்குரிய அந்தத் துணிவை எனது வாழ்விலும் கடைப்பிடிக்க நான் முயற்சிக் கின்றேன். அவருடைய பரிந்துரை உங்கள் அனைவ ரோடும் இருப்பது போல் இன்றும் எனக்கு உண்டு. நீங்கள் அனைவரும் குறிப்பாக இளையோரும் உண்மைக்கும் நீதிக்கும் சாட்சியம் பகர்ந்து மனித இனம் அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழ எம்மை இச்சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்திக்கொள் வோம். உங்கள் பங்குத் தந்தைக்கும் உங்கள் அனை வருக்கும் எனது பாராட்டுக்களையும் இறை ஆசீரையும் வேண்டி நிற்கின்றேன்.

பேரருட்திரு இராயப்பு ஜோசப்,
மன்னார் ஆயர்.

## புதிய திருமுழுக்கு யோவான் ஆலய வரலாறு

கல்வி மேம்பாடும் கலைகள் பண்பாடும் கடின உழைப்பும் கலந்து இணைந்த யாழ். நகரின் மத்தியிலே கலைகள் நிறைந்து கம்பீரமாகக் காட்சிதருவது யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது சுண்டுக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயமாகும்.

இந்த ஆலயமானது வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஒன்றாக விளங்கி இன்று 125ஆவது ஆண்டு யூபிலி விழாவை இந்தப் பங்கின் மக்கள் நன்றியுணர்வுடன்கொண்டாடி மகிழ் கின்றனர்.

யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் நிர்வகித்த பொழுது பல கத்தோலிக்க ஆலயங் களை அமைத்தனர். 1634ஆம் ஆண்டு பதினோராவது ஆலயமாக அமைக்கப்பட்டதே புனித திருமுழுக்கு யோவான் ஆலயமாகும். தொடர்ந்து வந்த ஒல்லாந்தரினால் கத்தோலிக்க ஆலயங்கள் பல அழிக்கப்பட்டன. அவ்வேளையில் திருமுழுக்கு யோவான் ஆலயமும் அழிக்கப்பட்டது. யாழ். பேராயலத்தின் மூப்பராக இருந்த முதலியார் ஜோசப் புவிராஜசிங்கி அவர்களினால் இன்றைய புதிய ஆலயத்திற்கான அடிக்கல் 1888ஆம் ஆண்டு நாட்டப்பட்டு இந்த ஆலயத்தின் முதலாவது மூப்பராக இருந்த கட்டடக் கலைஞர் யாக்கோபு சாமுவேல் அவர்களின் தலைமையில் கோவாக் கலை அம்சங்கள் பொருந்திய இன்றைய ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது. இந்த ஆலயத்தின் உன்னத வளர்ச்சிக்கு அன்றைய ஆயர் பெருந்தகை ஹென்றி யூலன் ஆண்டகை அவர்களின் பேருதவியும் பங்கு மக்களின் தியாகம் நிறைந்த பங்களிப்பும் உறுதுணையாக அமைந்தன. இந்த ஆயலத்தின் முதலாவது பங்குத் தந்தையாக அருட்திரு அந்தோனி (அ.ம.தி.) அவர்கள் நியமிக்கப் பட்டார்.

எமது திருமுழுக்கு யோவான் பங்கில் பல பங்குத் தந்தையர்கள் பணிபுரிந்துள்ளனர். சிறப்பாக முக்குருமணிகள் எமது பங்கில் பணியாற்றும் போதும் பணி முடித்து உரோம் நகரில் இருக்கும் போதும் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள் என்றால் எமது பங்கின் பணிக்கொடையின் மகத்துவத்தையும் அருள் வரத்தையும் அறிந்துகொள்ளலாம். அவ்வகையில் எமது ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மட்டக் களப்புத் திருகோணமலை ஆயர் பேரருட் திரு.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் ஆயர் பேரருட் திரு. இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆகிய மூவரும் எமது பங்குத் தந்தை யர்கள்- ஆயர்கள்- இதனாலே எமது பங்கு பெருமையடைகின்றது.

இவ்வாறு பெருமை பெறும் எமது ஆலயத்தின் வளர்ச்சிக்கு காலத்துக்குக் காலம் பலரால் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 125ஆவது ஆண்டைக் கொண்டாடும் எமது இன்றைய பங்குத் தந்தையாம் அருட்பணி ஏ.சி.கிறிஸ்தோபர் அடிகள் பணியாற்றி வருகிறார். இவருடைய ஆன்மீக வழிகாட்டலில் ஆலயம் அழகுறக் காட்சியளிக்கின்றது.

### வாழ்த்துச் செய்தி



யாழ். சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் தோற்றம் பெற்று இவ்வாண்டுடன் ஒன்றேகால் நூற்றாண்டு பூர்த்தியடைந்ததையிட்டு, அதற்கான நிறைவு விழா மலருக் கு எனது ஆசிச்செய்தியையும் விழாவின் போது விருந்தினர்களில் ஒருவராக என்னையும் அழைத்தமைக்காக எனது நன்றியை நவில்கின்றேன்.

இறைபணியின் நிமித்தம் யாழ்ப்பாணத்தை விட்டுத் தூர விலகிவிட்டாலும் நிர்வாகப் பணியாற்றிய இனிய நினைவுகளை மீட்டிப்பார்ப்பதற்கு உங்களது மேலான வேண்டுகோள் ஒரு வாய்ப்பாகிவிட்டதில் எனக்கு மட்டில்லா மகிழ்ச் சி! இவ்வாலயத்தில் எனது குறுகிய காலப்பணி யில் பங்கின் ஆன்மீகப் பணிகளாலும் ஆன் மீகம் சார்ந்த பணிகளிலும் இப் பங்கின் பொது நிலையினர் எனக்கு பக்கபலமாய் நின்று தவினர். தற்போது 125 ஆண்டுகளைக் கடந்து வந்து விழாவெடுக்க முன் வந்த, பங்குத் தந்தை அருட்பணி ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடி களாருக்கும் திரு.சொலமன் சிறில், செயலாளர் அவர்களுக்கும் மற்றும் விழாக்குழு உறுப்பினர்களுக்கும், மேற்படி பங்கில் பணியாற்றி வரும் அருட் சகோதரிகள், ஆசிரியர்கள், பங்கு மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும். இறைவனது வருகைக்கு முன்னோடியான புனித யோவான் தொடர்ந்தும் வழிநடத்தி, இறையாசி நிரம்பப் பெற உதவி புரிவாராக.

இறைவனின் அருட்பணிச் சேவையில்
யோ.கிங்சிலி சுவாம்பிள்ளை.
மறைமாவட்ட ஆயர், திருகோணமலை.

### பங்குத் தந்தையின் ஆசி



புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டு 125 ஆவது ஆண்டு விழாவை என் பணிக் காலத்தில் கொண்டாடுவதற்குக் கிடைத்தது பெரும் பாக்கியமே. இதற்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். இப் புனிதர் சுண்டிக் குழிப் பகுதியில் 1630 ஆம் ஆண்டளவில் கோயில் கொண்டார் என்று வரலாற்றுச் சான்று பகிர்கிறது. ஆனால் தற்போதைய ஆலயம் 1886இல் ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆலயப் பங்கின் வளர்ச்சிக்காக உழைத்த ஆயர்கள் அருட்பணியாளர்கள் அருட்சகோதரிகள் பொதுநிலை மக்களையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன். பாலைவனத்தின் குரலொலியாக ஒலித்த புனித திருமுழுக்கு யோவானின் வாழ்வும் வார்த்தையும் துணிச்சலும் படிப்பினைகளும் நாம் வாழும் இக்காலத் திலும் பயனளிப் பனவாக உள்ளன.

125ஆம் யூபிலி ஆண்டின் வாழ்த்துக்களுடன் இறையாசி வேண்டுகின்றேன்.

அருட்பணி அ.கிறிஸ்தோபர்
பங்குத் தந்தை, திருமுழுக்கு யோவான் ஆலயம்.

### வாழும்போது வருவோர்க்கெல்லாம் வார்த்தையினால் நன்றி சொல்வோம்.



யாழ்ப்பாணம் சுண்டுக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் 125ஆம் ஆண்டின் நிறைவில் எம் இனிய மக்களுக்கு மனம் நிறைந்த யூபிலி வாழ்த்துக் களையும் புனிதரின் பிறந்ததின வாழ்த்துக்களையும் கூறுவதில் இறைகொடையான இன்றைய நாளில் பெரு மையும் இரட்டிப்பு மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இறைமனித உறவின் புதுப்பித்தலில் நம் மீட்பராம் யேசுக்கிறீஸ்துவின் முதல் வருகையின் 2013ஆம் ஆண்டில் இந்த ஆலயத்தின் 125ஆம் ஆண்டின் நிறைவை எண்ணி மகிழ்கின்றோம். உண்மையில் நாம் கொடுத்து வைத்தவர்கள்.

அது மட்டுமல்லாது இந்த மகிழ்ச்சிகளின் பங்காளிகளான எம் முன்னோர்களை நாம் மறந்து வாழ முடியாது. அவர்களது கடமை உணர்வும் கடின உழைப்பும் ஆன்மீக தாகமுமே நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் இறைவனுக்கு நன்றி கூறவும் இந்தப் பெரிய சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது.

வற்றாது வளமூட்டும் நல்லுணர்வுகளின் விளைநிலமாக விளங்கும் சுண்டுகுழிப் பங்கின் உயர்வுக்காகவும் ஆன்மீக வாழ்வுக்காகவும் வாழ்வியல் நன்மைகளுக்காகவும் அர்ப்பணிப்புடன் அயராது பணியாற்றிய பணியாற்றுகின்ற மேன்மை மிகு ஆயர்கள் அருட்தந்தையர்கள் அருட் சகோதரர்கள் அருட்சகோதரிகள் இறைபணிக்காகத் தம்மை அர்ப் பணித்த எம் பங்குமைந்தர்கள். சிறப்பாக பங்கு மக்கள், வெளிநாடு களில் வாழும் எம் ஆலய உறவுகள் அனைவருக்கும் இந்த வேளையில் நன்றி கூறுவது எமது கடமையும் உயர்ந்த கிறிஸ்தவப் பண்பும் ஆகும்.

இதன் சாட்சியும் மாட்சியுமே இந்தச் சிறப்பு மலரின் காணிக்கை யாகும். நல்லதைச் செய்வோம்,நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம் எல்லாப்புகழும் இறைவனுக்கே.

சொலமன் சூ.சிறில் செயலாளர், ஆலய அருட்பணிச் சபை.

## புனிதரின் வரலாறு

மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானை விட பெரியவர் எவரும் தோன்றவில்லை. (மத்:11:11) என்று சொல்லும் அளவுக்கு சிறப்புப் பெற்ற திருமுழுக்கு யோவான் மீட்பின் பாதையை சீராக்கவும் அதற்கான வழியை ஆயத்தப் படுத்தவும் ஒரு முன்னோடியாக அபியா வகுப்பைச் சேர்ந்த செக்கரியா என்பவருக்கும் ஆரோனின் வழிவந்த எலிசபேத் தம்பதியருக்கும் முதிர்ந்த வயதில் இறைவனின் அருளினால் பிறந்தார்.

குழந்தையாய் இருந்த யோவான் வளர்ந்து மனவலிமை பெற்று இஸ்ரவேல் மக்களுக்கு தம்மை வெளிப்படுத்தும் காலம் வரை பாலை நிலத்தில் வாழ்ந்து வந்தார். தோல் கச்சையை இடையில் கட்டியிருந்தார். வெட்டுக்கிளியையும் காட்டுத் தேனையும் உணவாக உண்டு வந்தார்.

திருமுழுக்கு யோவான் தனது பணியின் ஆரம்பத்தில் ''பாவ மன்னிப்பு அடைய மனம் மாறி திருமுழுக்குப் பெறுங் கள்''. (லூக் 3:3) என்று யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று பறைசாற்றினார். இவரது போதனையால் கவரப்பட்ட மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டுத் திருமுழுக்குப் பெற்றனர்.

ஏரோது மன்னனின் தவறான செயலை எடுத்துக் காட்டினார். அவன் செய்து கொண்ட குற்றத்தை உணர்த்தியதால் ஏரோது திருமுழுக்கு யோவானை சிறையில் அடைத்தான். பின்னர் அவரைச் சிரச் சேதம் செய்து கொன்றான். உண்மைக்காக உயிரைக் கொடுத்த எம் புனிதரின் எளிமையான உண்மையுள்ள வாழ்வைப் பின்பற்றி நாமும் வாழ்வோம்.

### "இறைவன் வாழும் உள்ளம் எப்போதும் ஆலயமே! அங்கே இறை மக்கள் யாவரும் இணைந்து வாழ்வது ஆனந்தமே!"



யாழ். நகரின் மத்தியில் இறைவனின் முன்னோடியாகிய தூய திருமுழுக்கு யோவா னின் ஆலயம் கம்பீரமான தோற்றத் துடனும் எழில் மிகுந்த ஆலயக மாகவும் பங்கு மக்களுக்கும் நீண்ட தூர பிரயாணம் செய்கின்ற மக்களுக்கும் ஓர் காப்பரணாக விளங்கு கின்ற தூய திருமுழுக்கு யோவானின் ஆலயம் 125ஆவது ஆண்டை நிறைவு செய்து இந்த ஆலய திருச்சபை எடுத்துக்காட்டாக விளங் குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடை கின்றேன். விசுவாச ஆண்டாகிய 2013 இன்று 125 ஆவது ஆண்டை நிறைவு செய்வது ஓர் சிறப்பாகும்.

இந்த அழகிய ஆலயத்தின் வழிபாடு களில் கலந்து கொள்வதால் மக்கள் விசுவாசத்தில் மேன்மேலும் உறுதி பெற வேண்டும். மக்கள் மத்தியில் ஒற்றுமை வளர வேண்டும்.

தூய திருமுழுக்கு அருளப்பரின் பங்கில் உள்ள அனைவரும் இறையேசுவின் படிப்பி னைகளுக்கு கத்தோலிக்க திருச்சபையின் போதனைகளுக்கும் என்றும் பிரமாணிக்கமாக இருந்து இவ் ஆலயம் ஒரு மையமாகத் திகழ வேண்டி வாழ்த்துகின்றேன்.

க.யோ.தனசிங்கம்,அருட்பணிச் சபை பொருளாளர்,
திருமுழுக்கு யோவான் ஆலயம்.

யூபிலி விழா செய்தித் தொகுப்பு: திரு. அன்ரன் பீற்றர், ஆசிரிய ஆலோசகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை ஆலய சூழலில் கஞ்சா விற்றவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 24

நயினை நாக பூஷணி அம்மன் ஆலய சுற்றாடலில் 18 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மற்றைய இரண்டு பேரைத்தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

வெள்ளி இரவு சந்தேக நபர் ஊர் காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அனலைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரவீந்திரகுமார் திவாகர் என்



பவரே கைது செய்யப்பட்டு எதிர்வரும் முதலாம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். உற்சவ கால விசேட சுற்றுலா நீதிமன்றில் இவர் முற்படுத்தப்பட்ட போது ஊர்காவற்றுறை பதில் நீதவான் இ.சபேசன் இவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (த-4)

# மாதகல் மீனவரின் மூன்று படகுகள் விஷமிகளால் நள்ளிரவில் தீ வைப்பு


## தனிப்பட்ட பகைமையே காரணமாம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

மாதகல் துறைமுகத்தடியில் நிறுத்தப்பட்டிருந்த மீனவர் ஒருவரின் 19 லட்சம் பெறுமதியான 3 படகுகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 11.15 மணியளவில் விஷமிகளால் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டுள்ளன.

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட தனிப் பட்ட பகை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாதகல் கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பின் பொருளாளரான தர்ம பாலன் தர்மராஜா என்பவருடைய



கடற்றொழில் உபகரணங்களே இவ்வாறு விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டரை வருடங்களாக மாதகல் கடற்பகுதியில் தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் குறித்த மீனவரின் 3 படகுகள் வழமையைப் போன்று துறைமுகத்தடியில் நிறுத்தப்பட்டிருந்தன. நேற்று முன்தினம் நள்ளிரவு அந்தப் படகுகள் விஷமிகளால் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டுள்ளன. இதன்போது படகுகளுக்குள் இருந்த இயந்திரம், மீன் பிடி வலைகள், தூண்டில்கள் என்பனவும் எரிந்து நாசமாகியுள்ளன.

இது தொடர்பாக இளவாலைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து இளவாலைப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். மாதகல் துறைமுகத்தில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட படகுகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தனிப்பட்ட விரோதங்களால் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமை குறித்து ஏனைய மீனவர்களும் அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார தலைமையில் இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில் 5 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளதாகபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டாரா தெரிவித்தார். (த-14-86)

# சுகாதாரக் கண்காட்சி

தென்மராட்சி, ஜூன் 24

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதிய அனுசரணையுடன் சுகாதார செயற்பாடுகள் தொடர்பான கண்காட்சி ஆறு இடங்களில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையிலும் நாளை மறுதினம் மட்டுவில் தெற்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நடத்தப்படவுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி க.தயாளன் தலைமையில் கண்காட்சி இடம்பெறவுள்ளன.

இதேவேளை ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, மருதங்கேணி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இவ்வாறான சுகாதாரக் கண்காட்சிகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பொசன் தினமான நேற்று சாவகச்சேரியில் தான நிகழ்வு

தென்மராட்சி, ஜூன் 24

பொசன் தினத்தையொட்டி சாவகச்சேரி தானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் மதிய உணவு வழங்கப்பட்டது. ஏ-9 வீதியில் சென்ற அனைத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டு உணவு வழங்கப்பட்டது.

இதேவேளை,

தென்னிலங்கையைச் சேர்ந்த மக்களால் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஏழு வகையான உணவுப் பொருள்கள் தானமாக வழங்கப்பட்டன.

வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. தென்னிலங்கையிலிருந்து வந்த மக்கள் 11 ஆவது இலகு காலாட் படையணியின் சாவகச்சேரி நகர் கட்டளைத் தளபதி கே.கேமரத்ன தலைமையில் வைத்தியசாலைக்கு உணவுப் பொருள்கள் கொண்டு வந்து வழங்கினர். வைத்தியசாலைக்கு அருகில் உள்ள உணவு நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் காலை பொது மக்களுக்கும் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (வ-9)



# சாவகச்சேரி சிவன் கோயிலடியில் திருடர்கள் நடமாட்டம் அதிகரிப்பு

தென்மராட்சி, ஜூன் 24

சாவகச்சேரி சிவன் கோயிலடிப் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் காற்றுக்காக திறந்து விடப்பட்டிருந்த ஜன்னல் ஊடாக வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

மற்றொரு நாள் வேறொரு வீட்டின் ஜன்னலில் பொருத்தப்பட்டிருந்த கம்பியை அகற்றப் பயன்படுத்திய உலக்கை முறிந்ததால் முயற்சியைக் கைவிட்டுச் சென்றனர்.

நேற்று முன்தினம் இரவு வீடொன்றினுள் உட்புக முற்பட்ட வேளை



யில் வீட்டுக்காரர் விழித்துக் கொண்டதால் திருடர்கள் தப்பியோடியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி நகர்ப் பகுதியின் பல இடங்களில் திருட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கடமைத் தினங்களில் சிக்கல்

வலி.வடக்கு , ஜூன் 24

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலர்களின் வெளிக்கள நாள்கள், பிரதேச செயலக நாள்கள் மற்றும் அலுவலக நாள்கள் என்பன தொடர்பில் பிரதேச செயலகத்துக்கு பிரதேச செயலகம் வேறுபட்ட நடைமுறைகளை பின்பற்றுவதனால் பொது மக்களும் அலுவலர்களும் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமுர்த்தி அலுவலர்களுக்கான பிரதேச செயலக நாள் திங்கட்கிழமையாகவும், அலுவலக நாள் புதன்கிழமையாகவும், சமுர்த்தி வங்கிகளுக்குச் செல்லும் நாள் வியாழக்கிழமையாகவும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டு இருந்தது.

தற்போது இந்த நடைமுறையைப் பிரதேச செயலாளர்கள் தமது விருப்பத்துக்கும் வசதிக்கும் ஏற்ப தாங்களே மாற்றிக் கொண்டுள்ளமையால் மாவட்டத்தில் சமுர்த்தி அலுவலர்களின் பணிகள் சீரற்ற முறையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

> அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் ஒரே மாதிரியான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலர்களின் தொழிற்சங்கத்திடம் கோரிக்கை

இத்தகைய நிலைமையை மாற்றி யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் ஒரே மாதிரியான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலர்களின் தொழிற்சங்கத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (த-86)

# மாணவர் பாடசாலை செல்வதை பெற்றோர் உறுதி செய்ய வேண்டும்

## நல்லூர் பிரதேச செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 23

பெற்றோரும், பாடசாலை அதிபர்களுமே மாணவர்கள் பாடசாலை செல்வதை உறுதிப்படுத்த வேண்டும். மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக சமூகம் தரவில்லையாயின் எமக்கு அறியத் தாருங்கள்.

மாணவர்களைப் பாடசாலையில் சேர்த்தால் மாத்திரம் போதாது, அவர்கள் பாடசாலைக்குச் செல்வதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்று நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளிலிருந்து இடை விலகும் மாணவர்கள் தொகை அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக திருநெல்வேலி மற்றும் கல்வியங்காட்டுப் பகுதியில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் இருப்பதாக நல்லூர் பிரதேச செயலகத்துக்கு கிராம சேவையாளர்களால் தகவல் வழங்கப்பட்டது.



இதனையடுத்து குறித்த பகுதிகளில் நல்லூர் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பட்டதாரிப் பயிலுநர்கள் இணைந்து வீடு வீடாகச் சென்று பெற்றோருக்கும் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கும் அறிவுரை கூறினர். இதன் பின்னரும் பாடசாலைக்குச் செல்லாதவர்களை பொலிஸாரிடம் பிடித்து ஒப்படைப்போம் எனவும் எச்சரித்திருந்தனர்.

இதற்கமைவாக கடந்த செவ்வாய்க்கிழமை கோப்பாய் பொலிஸாரின் உதவியுடன் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஒரு சில மாணவர்களைப் பிடித்த பொலிஸார் அவர்களைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அறிவுரை கூறிய பின்னர் விடுவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக நல்லூர் பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இலவசக் கல்வி சகலருக்கும் கிடைக்க வேண்டும். மாணவர்களைப் பாடசாலைகளில் மாத்திரம் சேர்ப்பது பெற்றோரின் பணியல்ல.

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகப் போகின்றார்களா? என்பதை அவதானிக்க வேண்டும். அதேபோன்று பாடசாலை அதிபர்களும் மாணவர்களது வரவை உறுதிப்படுத்த வேண்டும். இது தொடர்பில் எங்களிடம் முறையிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# செயலிழந்த சங்கத்தினால் மக்களுக்கு அவலங்கள்

நெளுக்குளம், ஜூன் 24

வவுனியா கணேசபுரத்தில் நீண்ட காலமாகவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் செயலிழந்து காணப்படுவதால் பொதுமக்கள் நீண்ட தூரம் சென்று நுகர்வுப் பொருள்களை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கணேசபுரம், மணிபுரம், சுந்தரபுரம், சமயபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்குத் தேவையான நுகர்வுப் பொருள்களைக் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கணேசபுரத்தில் அமைந்திருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்று வந்தனர்.

ஆனால் எதுவித முன்னறிவித்தலும் இல்லாது கடந்த இரண்டு வருடங்களாக சங்கம் பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.



இதனால் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இந்தப் பகுதியில் பொது மக்களின் நலன் கருதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் திறக்க வேண்டுமென கணேசபுரம், மணிபுரம், சுந்தரபுரம், சமயபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை திறக்கப்படாத கூட்டுறவுச் சங்க வாயிலில் கால்நடைகளின் எச்சங்கள் காணப்படுவதுடன் கலாசார சீரழிவுகளும் இடம் பெறுவதாகவும் தெரிய வருகின்றது. (க-402)

## நடமாடும் மருத்துவ சேவை

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலவச நடமாடும் சேவைகள் இன்று முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலும் நாளை மாங்குளம் மகா வித்தியாலயத்திலும் இடம்பெறுமென முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-435)

## கற்றல் உபகரணங்கள்

கிளிநொச்சி, ஜூன் 24

கிளிநொச்சி மாவட்டத்தில் தந்தையை இழந்த 123 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் மாண வர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலை மையில் நடைபெற்ற நிகழ் வுக்கு முதன்மை விருந் தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி எஸ். கிருஷ்ணவதனா, அமைச்சின் மாவட்ட அலுவலர் ந. உமாநாத், தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் சிறுவர் மாவட்ட அலுவலர் எஸ். செந்தூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ந-9)

# புதுக்குடியிருப்பு நகரின் மையப் பகுதியிலேயே சந்தை

## உறுதி கூறுகிறார் பிரதேச சபைச் செயலர்

முல்லைத்தீவு, ஜூன் 24

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை நகரின் மையப்பகுதியிலேயே அமையும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தைக்குரிய இடம் தெரிவு செய்யப்படுவதில் இழுபறி நிலை நிலவுவதால் சந்தையை மந்துவில் பகுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

மீள்குடியமர்வு இடம்பெற்று இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை அமைக்கப்படாமல் இழுபறி நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலையில் தற்போது புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை கோம்பாவில் பகுதியில் உள்ள காணி ஒன்றில் இயங்கி வருகின்றது. இது நகரின் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

எனவே குறித்த சந்தையை புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியில் அமைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து அந்தப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றறைப் பெற்று சந்தையை அங்கு அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் காணி ஆவணம் கிடைக்காமையால் சந்தையை அமைக்கும் பணி கள் தாமதடைந்து வருகின்றன.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு சந்தை மந்துவில் பகுதிக்கு இடமாற்றப் பட விருப்பதாக வெளியாகி வரும் தகவல்கள் தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலர் கு.மிதிலைநாதனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

புதுக்குடியிருப்பு நகருக்கான பொதுச் சந்தை தற்போது கோம்பாவில் பகுதியில் இயங்கி வருகின்றது. இதனை புதுக்குடியிருப்பு மையப் பகுதியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதிக்கு அண்மித்த சிவநகர் பகுதியில் பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்தகர்களாலும் சந்தை ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

இதனையே மந்துவில் பகுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-6)

## மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளன தபாலகத்தின் கட்டடப் பணிகள்

கிளிநொச்சி, ஜூன் 24

பரந்தன் பிரதான தபாலகத்தின் புதிய கட்டடப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பரந்தன் பிரதான தபாலகத்தின் புதிய கட்டடப் பணிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இன்று வரை பூர்த்தியாகாத நிலையில்காணப்படுகின்றது.

தற்போது இந்தத் தபாலகம் தொடர்ந்தும் தனியார் வீடொன்றில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

மேலும் தபாலகத்தை அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் 2010 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதன் கட்டுமா னப் பணிகள் நிறைவுறுத் தப்படவில்லை. அரைகுறை யான நிலையிலேயே தபா லகத்தின் கட்டுமானப் பணி கள் காணப்படுகின்றன.

தற்போது வேலைகள் புதிய ஒப்பந்தகாரர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் இன்னமும் 3 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைகளே மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஏ.விஜய கிருஸ்ணன் தெரிவித்துள்ளார். (க-6)

## சுகாதாரத்துக்கு ஒவ்வாத உணவகம்; 'சீல்' வைக்குமாறு நீதிமன்று உத்தரவு

கிளிநொச்சி, ஜூன் 24

சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாத வகையில் உணவு தயாரித்து வைத்திருந்த கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தின் பரந்தன் உணவகம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளதுடன் தண்டமும் அறவிடப்பட்டது.

கண்டாவளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாத வகையில் உணவு தயாரித்ததாக கண்டுபிடிக்கப்பட்ட கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பரந்தன் உணவகத்துக்கு எதிரான வழக்கு கடந்த 19 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டதுடன், உணவகத்தில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கையைப் பெற்று அதன் பின்னர் நீதிமன்றத்தின் அனுமதியின் பிரகாரம் உணவகத்தை மீளத் திறக்குமாறும், அது வரைக்கும் குறித்த உணவகத்துக்கு சீல் வைத்து மூடிவிடுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (க-6)

> "கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பரந்தன் உணவகத்துக்கு எதிரானது.



கொமர்ஷல் வங்கியின் 'சேமிப்பு ஒளி' திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய முரசுமோட்டை ஆரம்ப வித்தியாலய மாணவி ஒருவருக்கு வங்கியின் உயரதிகாரி ஒருவர் பரிசிலை வழங்குகின்றார். (க-6)

## கௌரவிப்பும் கலை நிகழ்வும்

வவுனியா, ஜூன் 24

வவுனியா கலைமகள் சன சமூக நிலையமும், கலைமகள் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கௌரவிப்பு விழாவும் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு கலைமகள் சனசமூக நிலைய திறந்த வெளி அரங்கில் நிலையத் தலைவர் இ.செல்வராஜா தலைமையில் இடம்பெறவுள் ளன.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா பிரதேச செயலர் கா. உதயராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வவு னியா நகரசபைச் செயலர் கே. சத்தியசீலன், வவுனியா சனசமூக நிலைய அபிவி ருத்தி உத்தியோகத்தர் திருமதி வ. கிருபானந்தசர்மா, வைரவபுளியங் குளம் கிராம அலுவலர் எஸ். சிவானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இலங்கை வங்கி வவுனியா கிளையின் ஓய்வு நிலை முகாமையாளர் க.சிவபாலன், ஓய்வு நிலை கிராம அலுவலர் ம. தியாகராசா ஆகியோர் இங்கு கௌரவிக் கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (க-402)

### முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கூட்டுறவுச் சங்கத்தின்

# அரிசி ஆலையை மீள இயக்க 40 மில்லியன் நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பனங்காமம் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குரிய அரிசி ஆலையினை மீள இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பனங்காமம் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள பொன்நகர் கிராமத்தில் உள்ள அரிசி ஆலையினையே மீள இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனை மீள இயக்குவதற்குரிய நிதியுதவியினை யு.என்.டி.பி. நிறுவனம் வழங்கவுள்ளது. கட்டடங்களை புனரமைப்பதற்கு 21 மில்லியன் ரூபாவும், நவீன இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு 19 மில்லியன் ரூபாவுமாக சுமார் 40 மில்லியன் ரூபாவினை யு.என்.டி.பி. நிறுவனம் வழங்கவுள்ளது. (ந-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு நுளம்பு ஒழிப்புக்கு திண்ம பி.ரி.ஐ. பக்ரீறியா

### களனி, கம்பஹா, பொரலஸ்கமுவவில் பரீட்சார்த்தம்



கொழும்பு,ஜூன் 24
இலங்கையில் டெங்கு நுளம்பு ஒழிப்புக்காக திண்ம பி.ரி.ஐ. பக்ரீறியாவைப் பயன்படுத்துவது குறித்து சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

திண்ம பி.ரி.ஐ. பக்ரீறியாவைப் பயன்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டத்தை அடுத்த இரு வாரங்களுக்குள் ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் முன்னோடி வேலைத் திட்டம் களனி, கம்பஹா மற்றும் பொரலஸ்கமுவ ஆகிய மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுகளில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் டபிள்யூ. எம்.பி. வன்னிநாயக்கா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் அடிப்படையில் திண்ம பி.ரி.ஐ. பக்ரீறியா முன்னோடி வேலைத்திட்டத்தின் கீழ் பரீட்சிக்கப்படவுள்ளது.

தற்போது டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவென முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்களுக்கு மேலதிகமாக உதவி வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு அமைச்சர் சிறிசேன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அதனடிப்படையிலேயே இந்த முன்னோடி வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.-என்றார். (ச)

### தமிழ்நாட்டில் பயிற்சி பெறும்

## படை அதிகாரிகள் இருவரையும் திருப்பி அழைக்கிறார் கோத்தா

கொழும்பு,ஜூன் 24
தமிழ்நாட்டில் உள்ள வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் இரண்டு படை அதிகாரிகளையும் திருப்பி அழைத்துக் கொள்ள இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

இந்தத் தகவலை கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெலிங்டன் பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் இலங்கைப் படை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவதற்கு தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்தநிலையில், இலங்கைப் படை அதிகாரிகள் இருவரையும் தமிழ்நாட்டில் இருந்து வேறு பயிற்சி நிலையங்களுக்கு மாற்றுவது குறித்து ஆராயப்பட்டது. ஆனால் அதற்கு இலங்கை உடன்படவில்லை.

கடந்தகாலங்களில், இத்தகைய எதிர்ப்பு ஏற்பட்டபோது, பெங்களூருக்கும், டேராடூனுக்கும் இலங்கைப் படை அதிகாரிகள் இடம்மாற்றப்பட்டனர்.

அதே பயிற்சி நெறிகள் வேறு இடங்களிலும் இருந்ததால், அவ்வாறு செய்வது சாத்தியமானது. ஆனால் இலங்கைப் படை அதிகாரிகள் வெலிங்டனில் ஆரம்பித்துள்ள பயிற்சி நெறி இந்தியாவில் வேறெங்கும் இல்லை.



இந்திய அரசு இதைவிடத் தரமான, பாதுகாப்பு முகாமைத்துவக் கல்லூரியில், உயர் பாதுகாப்பு முகாமைத்துவப் பயிற்சிநெறியை பின்தொடரும் வாய்ப்பை வழங்க முன்வந்த போதிலும், அது கேணல் தரத்துக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கே பொருத்தமானது.

தற்போது வெலிங்டனில் பயிற்சி பெறும் அதிகாரிகள் விங்கொமாண்டர் மற்றும் கேணல் தரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களுக்கு அது பொருத்தமானது அல்ல.

அதனால் இலங்கை பாதுகாப்புச் செயலர் இரு படை அதிகாரிகளையும் தமிழ்நாட்டில் இருந்து திருப்பி அழைக்க முடிவு செய்துள்ளார். (ச)



ஐ.தே.கட்சியால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய உத்தேச அரசமைப்பை கட்சிச் செயலர் திஸ்ஸஅத்தநாயக்க ஸ்ரீ.சு.கட்சி செயலர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் வைத்து கையளித்தார்.

## புலமைப் பரிசில் சபையை இல்லாதொழிக்க முயற்சி

### அகிலவிராஜ் காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 24
ஐக்கிய தேசியக் கட்சியால் மாணவர்களுக்கு நன்மையளிக்கும் நோக்கில் நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற புலமைப் பரிசில் சபையை இல்லாதொழிக்க அரசு எடுத்த தீர்மானம் தவறானது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியால் நாடாளுமன்ற 'புலமைப் பரிசில் சபை' அறிமுகப்படுத்தப்பட்டது.

மாணவர்களினது கல்வி வளத்தை விருத்தியடையச் செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்தச் சபையில் கல்வி தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

எனினும் தற்போதைய மோசமான ஆட்சி காரணமாக சபையின் நோக்கம் நிறைவேறவில்லை. -என்றார். (ச-ரி)

## ஆள்கடத்தலைத் தடுக்க தவறியது இலங்கை

### அமெரிக்க நிறுவனம் குற்றச்சாட்டு

சட்டவிரோத ஆள்கடத்தலைத் தடுப்பதற்கு இலங்கை அரசு போதிய கரிசனை செலுத்தத் தவறியுள்ளது என்று ஆள்கடத்தலைத் தடுப்பது தொடர்பான அமெரிக்க நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள் நாட்டுக்குள்ளேயும் வெளியேயும் ஆள்கடத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொழும்பு உள்ளிட்ட சனநெரிசல் மிக்க நகரங்களில் வீட்டு வேலைகளுக்கும் உலர் வலயத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கும் கடற்றொழிலுக்கும் சிறுவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

**"உள்ளக இடம் பெயர்வுக்குள்ளானவர்கள் மற்றும் போரால் விதவையாக்கப்பட்ட பெண்களும் அதிகளவில் ஆள் கடத்தலுக்கு இலக்காகியுள்ளனர்.**

உள்ளக இடம்பெயர்வுக்குள்ளானவர்கள் மற்றும் போரால் விதவையாக்கப்பட்ட பெண்களும் அதிகளவில் ஆள்கடத்தலுக்கு இலக்காகியுள்ளனர். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஹெரோயின் வைத்திருந்தவர் கைது

கொழும்பு,ஜூன் 24
பதுளை, ஹிங்குருகமுவ பிரதேசத்தில் ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பதுளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட தேடுதலின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரிடமிருந்து 3 கிராம் 560 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ச)

## '13' குறித்து இந்தியாவுடன் இதுவரை எதுவும் பேசவில்லை

### வெளிவிவகாரச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 24
13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக இந்தியாவுடன் இதுவரை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் ஏதும் நடத்தப்படவில்லை.

இவ்வாறு இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தைத் திருத்துவது தொடர்பாக இந்தியா கொண்டுள்ள கவலைகள் குறித்து பேச்சு நடத்த இலங்கை அரசு தயாராக உள்ளது.

எனினும், இன்னமும் எந்தவொரு அதிகாரிகள் மட்டப் பேச்சுக்களும் நடக்கவில்லை என்று அவர் கூறினார்.

13 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக இலங்கை அரசு ஏற்கனவே இந்தியாவுடன் இராஜதந்திரப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



**"13 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும்.**

## முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கையை நிறுத்துங்கள்

### கெஹலிய வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 24
முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அமைப்புகள் தமது செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு ஊடகத்துறை அமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:



முஸ்லிம்களுக்கும் அவர்களது பாரம்பரியங்களுக்கும் எதிரான சில பௌத்த அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன. அது கண்டிக்கத்தக்க விடயம்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக அரசு கவனம் செலுத்தியுள்ளது.

எனவே அவ்வாறான அமைப்புக்களின் செயற்பாடுகளை அரசு தடுத்து நிறுத்தவுள்ளது.

அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. -என்றார். (ச-ரி)

**"முஸ்லிம்களுக்கும் அவர்களது பாரம் பரியங்களுக்கும் எதிரான சில பௌத்த அமைப் புக்கள் ஈடுபட்டு வருகின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்திய மேனனின் கொழும்பு வருகை எதிர்பார்க்கும் பலனைத் தருமா...?

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் மூத்த இராஜதந்திரியுமான சிவ்சங்கர் மேனனின் உத்தேச கொழும்பு விஜயம் இலங்கை அரசியல் வட்டாரங்களில் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகிறது. ஜூலை 7ஆம் திகதி கொழும்பு வரும் மேனன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முக்கிய தலைவர்களுடன் நடத்தும் பேச்சுக்கள் '13'ஐ பாதுகாக்குமா, '13'ஐப் பாதுகாக்க முடியால் முறியுமா? முறிந்தால், இந்தியாவின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும்? இவ்வாறாக அரசியல் வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

இலங்கை, இந்தியா, மாலைதீவு முத்தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்துப் பேசவே மேனன் கொழும்பு வருகிறார் என்று கூறுகிறது இலங்கை அரசு. மேனனின் வருகையின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் விதத்தில் கருத்துகளை வெளியிட்டு வருகிறது.

எனினும், பதின்மூன்றே மேனன் விஜயத்தின் முக்கிய நோக்கம் என்பது தற்பொழுது உறுதியாகி விட்டது. அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை ஒழித்துக்கட்டும் பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல், 13ஆவது திருத்தம் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனம் என்று காரியங்கள் வேகமாக இடம்பெற்று வருகின்றன. 13 தொடர்பான இந்தியாவின் நடவடிக்கைகள் காலம் பிந்தியதாகக் கருதப்பட்டாலும் இந்தியா தற்போதாவது சில ஆக்கபூர்வமான, செயற்பாடுகளை வெளிப்படையாக முன்னெடுத்திருப்பது வரவேற்கக்கூடியது.

13 விவகாரம் இலங்கையில் சர்ச்சையை ஏற்படுத்தி இந்தியாவின் தன்மானத்துக்கு அது சவாலாக உருவெடுத்த வேளை, மன்மோகன்சிங்கின் இந்திய மத்திய அரசு இலங்கை தொடர்பாக மூன்று முக்கிய முடிவுகளை எடுத்தது.

★ *இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 1987 இல் ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் மூலம் கொண்டுவரப்பட்ட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம், மாற்றம் எதுவுமின்றி முழுமையாகச் செயற்படுத்தப்படவேண்டும்.*

★ அரசமைப்பு மாற்றம் குறித்து இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை உடனுக்குடன் இந்தியா தெரிந்துகொள்ள வசதியாக விசேட பிரதிநிதியொருவரை நியமிக்க வேண்டும்.

★ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்க வேண்டும்.

இவற்றுக்கு அமையவே, இரா.சம்பந்தன் தலைமையிலான அறுவர் அடங்கிய கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு, புதுடில்லி சென்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷிட், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரைச் சந்தித்துவிட்டு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு திரும்பியது. இவர்களின் புதுடில்லி விஜயத்தின் உடனடி விளைவே மேனனின் உத்தேச கொழும்பு விஜயம்.

கூட்டமைப்பின் புதுடில்லி விஜயத்தின்போது பிரதமர் மன்மோகன்சிங், '13'குறித்து முதல் தடவையாக இந்தியாவின் கவலையைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி இந்தியாவின் நீண்டநாள் மௌனத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார் என்பது தெரிந்ததே.

இது இலங்கை தொடர்பான இந்தியாவின் இராஜதந்திர அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை வெளிக்காட்டுகிறது. இலங்கை தொடர்பாக இதுவரை கடைப்பிடித்து வந்த மெத்தனப் போக்கு கடுமை அடைவதற்கான அறிகுறிகள் முகிழ்த்து வருவதைக் காட்டுகின்றன.

'13'க்காக இந்தியா கொடுத்த விலை அதிகம். விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். தேர்தல் பிரசாரத்துக்காகத் தமிழ்நாடு சென்றவேளை, ராஜீவ் காந்தி தற்கொலைக் குண்டுதாரி ஒருவரின் தாக்குதலுக்கு ஆளாகி மரணமானார். அத்தனை விலைகொடுத்து செய்யப்பட்ட ஒப்பந்தத்தை இலங்கை மீறுவதை அனுமதிக்க முடியாது என்ற கருத்து இந்திய ஆளும் தரப்புக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவுக்கும் உள்ளது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தை இந்தியாவே முதலில் மீறியது என்கிறார் தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் விமல் வீரவன்ஸ. இதே கருத்தை ஜனாதிபதியும் சமீபத்தில் தெரி வித்திருந்தார். ஒப்பந்தத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டிருக்கவேண்டும்; இந்தியா தவறிவிட்டது என்பது இவர்களது குற்றச்சாட்டு. ஆயுதங்களைக் களைய இந்தியா நேர்மையாகச் செயற்பட்டது. விடுதலைப் புலிகள் வழங்க மறுத்தபோது பிரச்சினை ஏற்பட்டு பின்பு போர் மூண்டது என்பது அப்போதைய நிலைமைகளாகின.

ஆனால், இந்தியப் படைகளை எதிர்த்துப் போராட பிரேமதாஸ இரகசியமாக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியதை இவர்கள் மறந்துபோனார்கள் போலும். 1992இல் லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ கொல்லப்பட்டது தொடர்பாக ஆராய சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் 1994இல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதிக் கமிஷன் தனது அறிக்கையில் இது குறித்து பிரஸ்தாபித்துள்ளது.


ஒப்பந்தம் மூலம் இந்திய இராணுவத்தை வரவழைத்து விட்டு, இந்திய இராணுவத்தைத் தாக்குவதற்கு இரகசியமாக ஆயுதம் வழங்கியது ஒப்பந்தமீறல் அன்றி வேறென்ன? 1989ஜூன், ஜூலை மாதங்களில் ஹெலி மூலமும், நான்கு டிரக்குகள் மூலமும் ஆர்.பி.ஜி. மற்றும் மோட்டார் உட்பட்ட ஆயுதங்கள் புலிகளுக்கு வழங்கப்பட்டதாக கமிஷன் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எதுவோ, 25 வருடங்களுக்கு முன் இடம்பெற்ற சம்பவங்களைத் தற்பொழுது விவாதிப்பதால் பயன் ஏற்படப்போவதில்லை. அது ஒருபுறம் இருக்க, போர் முடிவுற்ற பின்னர் இந்தியாவுக்கும், ஐ.நாவுக்கும், சர்வதேசத்துக்கும் கொடுத்த வாக்குறுதியை இலங்கை காப்பாற்ற பின்னடிப்பதன் சூக்குமம் என்ன? விடுதலைப் புலிகளின் காலத்தின் பின்னர், அதிகாரப் பரவலாக்கலில் பேரம்பேசும் பலத்தைத் தமிழ்த் தலைமைகள் இழந்துவிட்டன என்பதனால் தானே? இந்தியா இதனை மனதில்கொண்டு செயற்படுவது அவசியம்.

# போருக்குப் பின் சதி
# இனியாவது ஒன்றுப

ஒட்டுறவு என்றால் என்ன? நெருங்கிய உறவே ஒட்டுறவு. ஒருமைப்பாடுஎன்றால்என்ன? ஒற்றுமைப்படுதலே ஒருமைப்பாடு. ஆகவே நெருங்கிய உறவு முறையினால் மனதாலும், அண்மித்த ஒற்றுமை காரணமாக உடலாலும் சேர்ந்திருந்து வாழ முற்படுதலே ஒட்டுறவும் ஒருமைப்பாடும்.

இந்தக் காலகட்டத்தில் இவற்றின் அவசியம் என்ன என்று ஆராய்ந்தோமானால் எமது தமிழ் பேசும் மக்கள் இன்று ஓர் ஏகோபித்த தலைமைத்துவம் இல்லாததாலோ என்னவோ மனதால் பிரிந்து உடலால் ஒதுங்கி வாழத் தலைப்பட்டுள்ளார்கள். 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் ஒரு வித விரக்தி மனப்பான்மை எங்களைப் பீடித்துள்ளது. எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்ற மனோபாவம் , எம்மால் இனி எதைச் சாதிக்கலாம் என்ற ஓர் ஏக்க நிலை, நாம் தோற்றுவிட்டோம் என்ற ஒரு பரிதாப மனோநிலை.



இதில் விசித்திரம் என்னவென்றால் இப்பேர்ப்பட்ட மனோநிலை சென்ற நூற்றாண்டின் முதல் பகுதியிலும் இலங்கையரைப் பீடித்திருந்தது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலேயர்கள் என்று எல்லா இன இலங்கை மக்களின் மனதிலும் அந்தக் காலகட்டத்தில் இதே மாதிரியான ஒரு விரக்தி மனோநிலை ஏற்பட்டிருந்தது. 1915 ஆம் ஆண்டில் இலங்கையில் இனக் கலவரம் நடந்தபோது பிரித்தானிய போர் வீரர்கள் காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்ட விதம், அதைக் கண்டித்து சிங்கள மக்கள் சார்பில் சேர் .பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சிங்கள மக்களுக்காகத் தனியொரு மனிதராக பிரித்தானிய அரசாங்கத்துடன் மோதியமை, தம்மை இலங்கையில் இருந்து வெளியேற்றச் சிங்கள மக்கள் சதி செய்கின்றார்கள் என்ற கோபத்தில் பிரித்தானியர் அப்பாவி மக்களைப் பல விதங்களில் கொடுமைப்படுத்தியமை ஆகியன அந்தக் காலகட்டத்தில் மக்கள் மனதில் ஏக்கத்தையும், பயத்தையும், பீதியையும், நம்பிக்கை அற்ற தன்மையையும் ஏற்படுத்தியிருந்தன.

இதைக் கண்ணுற்ற சேர். பொன் இராமநாதனின் சகோதரர் சேர் .பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் இந்த விரக்தி நிலையைப் போக்குவதற்காக உருவாக்கப்பட்ட இலங்கை தேசியச் சங்கத்தின் முதற் கூட்டத்தில் 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதியன்று பின்வருமாறு கூறினார்.

### எங்களை நாமே ஆளும் உரிமையைத் தாருங்கள்

" குடியேறிய முடிக்குரிய நாடொன்றின் நிருவாகத்தின் நிமித்தம் ஏற்படக்கூடிய உள்ளார்ந்த தீமைகள் இன்றும் நடைமுறையில் உள்ளன. உள்ளூரில்எமக்குரிய அதிகாரங்களும், பொறுப்புக்களும் பறி போய்விட்டன. எமது உரிமைகளும் தகைமைகளும் அமுக்கப்பட்டுள்ளன. கீழான ஒரு நிலையில் இருப்பதாக நாங்கள் எங்களைப் பற்றி எண்ணத் தொடங்கியுள்ளோம். எமது முழுச் சொரூபத்தின் பெருமையை வெளிக் கொண்டு வரக்கூடிய ஒரு நிலைக்கு நாங்கள் வளரக்கூடும் என்ற எண்ணம் எங்களை விட்டு விலகிச் சென்று விட்டது. நாங்களே எங்களைப் பலம் குறைந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று கூறுமளவுக்கு நாங்களே எங்களைத் தூங்க வைத்துக் கொண்டுள்ளோம் என்றார்.

மேலும் அவர், ''எனவே நாங்கள் இங்கிலாந்து அரசுக்கு அடிபணிந்த ஆளுநரின் பரந்த மனப்பான்மை கொண்ட வல்லாட்சிக்குட்பட்டே வாழ்ந்து வருகின்றோம். அவர் தமது அதிகாரங்களை பெரும்பாலும் ஐரோப்பியர்களைக் கொண்ட திணைக் கள நிர்வாகஸ்தர்களைக் கொண்டே ஆற்றி வருகின்றார்'' என்றார். தொடர்ந்து " மக்கள் தம்மைத் தாமே ஆள வழிவகுக்கும் திட்டங்கள் எதுவும் இயற்றப்படவில்லை'' என்றார். அது மட்டுமல்ல, மேலும் அவர் ''நாங்கள் கேட்பது என்ன? மற்றைய சுயகௌரவம் கொண்ட மக்களைப் போல் எங்களை எங்கள் நாட்டில் இருக்க விடுங்கள். எங்களை நாங்களே ஆள இடமளியுங்கள். எமக்கு எம் நாட்டிலும் பிற நாடுகளிலும் சுயகௌரவத்தை ஏற்படுத்த வழி அமையுங்கள் என்றே கூறி வந்துள்ளோம். ஆகவே அப்பேர்ப்பட்ட ஒரு விடிவை நோக்கி முன்னேறிச் செல்ல எமக்கு வழி அமைத்துத் தாருங்கள் என்று கேட்கின்றேன். இலங்கை ஒரு பிச்சைக்கார நாடல்ல. அது தனது பாரம்பரியத்தைத் திருப்பித் தாருங்கள் என்றே கேட்கின்றது'' என்றார். சேர். பொன். அருணாசலத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அந்தப் பேச்சின் சில பகுதிகளே இவை.

### இராணுவம் வலிந்து குடியேறிய இலங்கையின் தமிழர் நிலங்கள்

அன்று அவர் பேசிய போது இலங்கை இருந்த நிலையில் தான் இன்று எமது தமிழ் பேசும் மக்களும் பிரதேசங்களும் இருக்கின்றன. அன்று அவர் முடிக்குரிய குடியேற்ற நாடென்றார். இன்று இராணுவம் வலிந்து குடியேறிய நாடாக தமிழ் பேசும் மாநிலங்கள் காட்சி அளிக்கின்றன. எமது உரிமைகளை இழந்து சுயகௌரவத்தை இழந்து நாங்களே எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று எண்ணும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம் என்றார் அவர். அன்று போல் இன்றும் இங்கு வல்லாட்சிக்கு வித்திடப்பட்டுள்ளது. அதன் காரணத்தினால் எங்களைப் பற்றிய எங்கள் மதிப்பீடு மிகவும் குன்றிப் போயுள்ளது. சுயகௌரவத்தை இழந்து வாழத் தலைப்பட்டுள்ளோம். ஆனால் அதற்காக நாங்கள் மனதில் விரக்தியையும் அச்சத்தையும் சுமந்து கொண்டு நடைப்பிணங்கள் போல் பவனி வரவேண்டும் என்று எண்ணுவது மடமை. இந்த நிலைமையை மாற்ற நாங்கள் முன்வர வேண்டும். அவ்வாறு நிலைமையைச் சீர்ப்படுத்துவதானால் எங்களுள் ஒட்டுறவும் ஒருமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வலையில் சிக்கித் தமிழர் சீரழிவு ...ட்டு உரிமைகளை வென்றிடுவோம்

**நேற்று முன்தினம் சனிக்கிழமை நல்லூரில் அகில இலங்கை இந்து மா மன்ற பணி மனையில்இடம்பெற்ற சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரை மற்றும் இந்து சமய சிந்தனைகள் தமிழ் ஆங்கில மொழியிலான நூல்கள் வெளியீட்டு நிகழ்வில் சிறப்புரையாற்றிய ஓய்வு நிலை நீதியரசர் க.வி. விக்னேஸ்வரனின் உரையில் இருந்து.....**

பாடும் வளர வேண்டும். புரிந்துணர்வு வளர வேண்டும். ஆன்மிக எண்ணங்களும் அறம்சார் எண்ணங்களும் மேலோங்க வேண்டும்.

எங்கள் பிரதேசம் கல்விக்குப் பெயர் போனது. கலாசாரத்துக்குப் பெயர் போனது. இப்பொழுது கள்ளுக்கும் சாராயத்துக்கும்தான் பெயர் பெற்று வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நாளொன்றுக்குச் சராசரியாக ஒரு கோடி ரூபாவுக்குக் குறையாமல் மதுபானங்கள் விற்பனையாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுவரித் திணைக்கள விவரங்களின் படி சென்ற ஆண்டு யாழ். மாவட்டத்தில் 71 ஆயிரத்து 336 லீற்றர் வெளிநாட்டு மதுபானங்கள் விற்பனை் செய்யப்பட்டுள்ளன.

## கலாசார சீரழிவுகளால் தனித்துவத்தை இழந்து நிற்கும் யாழ். மண்

போரின் பின்னர் எங்கள் வாழ்க்கையைக் குறிக்கோள் அற்றதாக ஆக்கச் சதிகள் செயற்பட்டு வருகின்றன என்பதை அறியாமலே நாங்கள் விட்டில் பூச்சிகள் போல் அனலை நோக்கிப் பயணித்து வருகின்றோம். எங்கள் வாழ்க்கை முறையில் ஒரு மாற்றம் வேண்டும். ஒரு திருப்பம் வேண்டும். ஒரு திசை அமைக்கப்பட வேண்டும். அதற்கு எம்மிடையே ஒட்டுறவும் ஒருமைப்பாடும் ஏற்பட வேண்டும். இவ்வாறான சமுதாய மாற்றம் எம்மிடையே மலராது இருந்தால் யாழ். மண் அதன் தனிச்சிறப்பை முற்றாக இழந்து விடும்.

தனிப்பட்ட எங்களிடையே இருக்கும் கோபதாபங்கள் , பொறாமைகள், எரிச்சல்கள் யாவும் எமது சமுதாயத்தைப் பாதிக்காத விதத்தில் நாங்கள் நடந்து கொள்ள முன் வரவேண்டும். தன் மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும் என்ற விதத்தில் நாங்கள் நடந்து கொள்ளல் ஆகாது. இன்றைய சூழலில் நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று கூறி ஏங்குவாரும் உளர். இனி என்ன செய்ய, பணிந்து போவோம் என்று அதிகாரத்தை நாடி அடிவருடிகளாக உருவெடுப்பவர்களும் உளர். அது காலத்தின் கோலம்.

எனினும் இன்று எங்கள் இளைஞர்கள், யுவதிகள் எங்களது மண்ணின் தனிச்சிறப்பு பற்றி அறியாமல் வாழ்கின்றார்களே என்று நாங்கள் மலைத்துப் போகும் அளவுக்கு நிலைமை கட்டுக்கடங்காமல் போயுள்ளதை உணர்கின்றேன். பண்பாடு, கலாசாரம், ஒழுக்கம், கல்வி என்பவை தான் எங்கள் தனிச்சிறப்பதாக இருந்து வந்துள்ளது. எம்மிடையே ஒழுக்கமிகு வாழ்க்கைக்கு அந்த நாள்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. சமூக நல்லிணக்கத்துக்கும் கட்டுக்கோப்பான வாழ்க்கை முறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. அண்மையில் கூட ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் எமக்கு உரிமைகள் நல்கக் கூடாது என்று துடிக்கும் அமைச்சர் விமல் வீரவன்ச கூட தமிழர் பாரம்பரியமாக உன்னத பண்புகள் கொண்ட ஓர் இனம் என்று சிங்களத்தில் கூற நான் கேட்டேன் , அவ்வாறான எமது சமூகத்தில் தற்போது நாங்கள் காண்பது என்ன? குடும்பங்களில் வன்முறை, விபசார விடுதிகளின் தொகைகளில் அதிகரிப்பு, விவாகரத்து வழக்குகளின் தொகை அதிகரிப்பு , போதைப் பொருள் பாவனையில் கணிசமான அதிகரிப்பு, அதீத புகைப்பொருள் மற்றும் மது பாவனை , தற்கொலைகளின் தொகை அதிகரிப்பு , கொலை, கொள்ளைகள் அதிகரிப்பு இவ்வாறு பல விதமான சமூகச் சீர்குலைவு நிகழ்வுகளுக்கு நாங்கள் இன்று முகம் கொடுத்து வருகின்றோம். இவை எவ்வாறு எங்கள் அமைதியான யாழ் சூழலுக்குள் ஊடுருவின என்று எவரும் கேட்பதாகத் தெரியவில்லை. இன்றைய எமது இளைஞர்கள் பிறந்து வளர்ந்ததே போர்க்காலச்சூழலில். அவர்களுக்குப் போர்வீரர்கள் அந்நியர்கள் அல்ல. வன்முறை அந்நியம் அல்ல. வன்முறையின் அடிப்படையிலான வாழ்க்கை முறை அந்நியம் அல்ல. ஆனால் நாங்கள் அந்தப் போர் வீரர்களின் பின்னணியைச் சற்றுப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். வறுமை, கல்வியில் சிரத்தை இன்மை , சமுதாய புறக்கணிப்பு, வேலை கிடைக்காமை போன்ற பல காரணங்கள் அவர்களை இராணுவத்தில் சேர வைத்தன. தூர நோக்கான பார்வையையோ, கலாசார விழுமியங்களையோ , கல்வி மீது பற்றையோ, ஒழுக்கம் மீது ஓர்மத்தையோ நாங்கள் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. எப்பொழுது மரணம் சம்பவிக்குமோ என்ற பயத்துடன் போர்க் காலங்களில் வளர்ந்த அவர்கள் அன்றன்றைக்குக் கிடைக்கும் சுகங்களையோ நாடி வாழ்ந்திருப்பர். அத்துடன் தென்னவர்கள் பொதுவாகப் போர்த்துக்கீசர் விட்டுச் சென்ற சில வாழ்க்கை முறைகளில் முற்றாக மூழ்கி வாழ்பவர்கள். ''காப்பள்ளா.பீப்பள்ளா சுதி கரப்பள்ளா'' என்பது அவர்களின் பொதுவான வாழ்க்கைத் தத்துவம். அதாவது ''நன்றாகச் சாப்பிடு, நன்றாகக் குடி அன்றன்று கிடைக்கும் சகல நுகர்தல்களிலும் ஈடுபட்டு சுகம் அனுபவிப்பாயாக'' என்பதே அதன் பொருள். இப்பேர்ப்பட்டவர்களுடன் பழகும் வாய்ப்பைப் பெற்ற எங்கள் இளைஞர்கள் எங்கே புத்தகங்களைத் தூக்கப் போகின்றார்கள். புத்தியை விருத்தி செய்யப் போகின்றார்கள்? எம் இளைஞர்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட இந்த மாற்றத்தால் ஏற்பட்டது தான் சமூகக் கலாசார சீரழிவு. ஆண்கள் ,பெண்கள் இருபாலாரையும் இது தாக்கி வருகின்றது. இவை தானாக ஏற்பட்ட செயலான செயல் என்று நாங்கள் எண்ணிவிட முடியாது. திட்டமிட்டு இப்பேர்ப்பட்ட கலாசார சீரழிவுக்கு வித்திடப்பட்டு வருகின்றது என்பது என் கருத்து. எமது இளைஞர்கள், யுவதிகள் மீண்டும் தமது உரிமைகள் பற்றி தமது தனித்துவம் பற்றி, தமது பாரம்பரியம் பற்றி, தமது வரலாறு பற்றி இனிமேல் கரிசனை செலுத்துதல் ஆகாது. அவர்கள் அன்றன்று கிடைக்கும் அற்ப சுகங்களுக்குள் அமிழ்ந்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் போதைப் பொருள்களும் விபச்சார விடுதிகளும் இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு நம்மவரே உடந்தையாக இருந்து வருகின்றனர். தமது சமுதாயத்தின் சீரழிவுக்குத் தாமே காரணமாய் விளங்குகின்றார்கள் என்பதை அறிந்தோ அறியாமலோ செய்து வருகின்றனர்.

## இராணுவத்தினர் முட்டாள்கள் அல்லர்

இராணுவத்தினரை முட்டாள்கள் என்று நாங்கள் எண்ணுவது தவறு. அவர்கள் தமக்கிடப்படும் கட்டளைகளை நிறைவேற்றவே இராணுவத்தில் சேர்ந்துள்ளார்கள். ''தமிழ் மக்கள் எமது நாட்டைப் பிரிக்க எத்தனிக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த அவர்களின் இளைஞர் குழாமை உங்கள் பக்கம் இழுத்து அவர்களுக்கு மது, மாது, சூது போன்றவற்றில் ஈடுபாட்டை ஏற்படுத்துங்கள். அப்பொழுது தான் அவர்கள் மீண்டும் போர் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்.'' என்று அறிவுரை வழங்கினால் அவற்றைச் சிரமேற் சுமந்து கடமையாற்றுவது அவர்களின் கடமை. ஆகவே போர் வீரர்கள் மீது கோபம் கொள்வதில் பிரயோசனம் இல்லை. நாங்கள் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். நாங்கள் எங்கள் பாரம்பரியங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். நாங்கள் பொறிக்குள் அகப்பட்டு சிக்கிக் கொண்டுள்ளோம் என்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். எமது இளைஞர் யுவதிகளுக்கு இதை விளக்கிக் கொடுக்க வேண்டும். யாராவது நான் கூறும் கூற்று பொய்யானது, அப்படி எதுவும் நடைபெறவில்லை என்று கூறினால் எமது இளைஞர்களின் நடவடிக்கைகளையும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனியுங்கள் என்று தான் கூறுவேன். ஏன் என்றால் போருக்குப் பின்னர் தான் யாழ்ப்பாணத்தில் மது, போதைப் பொருள் பாவனை போன்ற புதிய மது கலாசாரமும் வேறு பல கலாசாரச் சீரழிவுகளும் அதிகரித்துள்ளன என்பது ஆராய்ந்தால் புலப்படும். 30 ஆண்டுகளுக்கு முன் இப்பேர்ப்பட்ட மதுபான பயன்பாடு யாழ்ப்பாணத்தில் காணப்படவில்லை என்று ஒரு கட்டுரையில் அண்மையில் வாசித்தேன். மேலும் அந்தக் கட்டுரையில் உயர் கல்வி கற்கும், பாடசாலை மாணவர்கள் கூட மதுப்பழக்கத்துக்கு அடிமையாகும் சூழல் யாழ் மாவட்டத்தில் இன்று அதிகரித்து வருகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வயது வந்தவர்களுக்கு நிகராக இளையவர்களும் தாராளமாக மதுவைப் பாவிக்கின்றனர் என்றும் மதுபான சாலைகளில் நின்று மது அருந்தாது டின்கள், போத்தல்கள் போன்றவற்றில் வாங்கிச் சென்று வீதிகளில், சந்திகளில் வைத்து மது அருந்துகின்றார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் நாங்கள் கவனிக்க வேண்டியது '' மதுப்பழக்கத்துக்கு அடிமையாகும் சூழல் யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது.'' என்ற கருத்தை எமது வருங்கால சந்ததியினர் மேல் எமக்குக் கரிசனை இருந்தால் இப்பேர்ப்பட்ட சூழல் தொடர்வதை அரசாங்கமோ மாகாண சபையோ, உள்நாட்டு அதிகாரங்களோ உடனே தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படுவதாகத் தெரியவில்லை.

இங்கு தான் பொது மக்களாகிய நாங்கள் எமது ஒட்டுறவையும் ஒருமைப்பாட்டையும் வெளிக்காட்ட வேண்டிய கடப்பாடு எழுந்துள்ளது. நாங்கள் இதன் பொருட்டு போதிய கவனமீர்க்குங் கருத்தரங்குகளையும் ஊடக வெளிப்பாடுகளையும் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளையும் நடத்த ஆவன செய்ய வேண்டும் . எங்கள் சாதிகள் , மதங்கள், தொழில்கள், பணவசதி-வசதியின்மைகள் போன்றவற்றை மறந்து எமது குழந்தைகள், எமது மாணவர்கள்,எமது இளைஞர்கள் -யுவதிகள் என்று அவர்கள் அனைவரையும் அணைத்துக் கையேற்று, விழிப்புணர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் . எமது வருங்கால சந்ததியினர் தவறான வழியில் செல்ல இடமளிக்கக் கூடாது என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் மேலோங்க வேண்டும்.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒட்டுறவும் ஒருமைப்பாடும் விட்டுக் கொடுத்தலில் தான் தங்கி இருக்கின்றது. எந்த நேரமும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற மனோ நிலையில் இருப்பவர்கள் தமக்கும் தம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். இதை உணர்ந்தால் எமது வாழ்க்கை முறை சிறக்கலாம். எனவே எங்கள் பலவீனங்களை , வலுவின்மைகளை, ஆராய வேண்டிய காலம் இப்பொழுது வந்துள்ளது. நாம் எமது வலுவின்மைகளைக் குறைக்காவிட்டால் வெளிப் பாதிப்புக்கள் எம்மைத் தாக்கத் தொடங்கிவிடுவன. அவை தாக்கத் தொடங்கி விட்டன என்பதைத் தான் இந்தப் பேருரையில் உங்களுக்கு உணர்த்தப் பாடுபடுகின்றேன்.

அடுத்து வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும், வாய்ப்புக்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றை எங்கள் ஒற்றுமையின்மையால், ஆணவத்தால், சுய நலத்தால் நாங்கள் தட்டிப் போக்கிக் கொண்டிருக்கின்றோம். இங்கும் ஒட்டுறவும் ஒருமைப்பாடும் தேவையாக இருக்கின்றன. கட்சி, கட்சி என்று நாங்கள் கட்சிகளையே வளர்க்க எத்தனிக்காது மக்கள் , மக்கள் என்று எம் மக்கள் நலன்களுக்காகக் கட்சிகளைப் பின்னணிக்குத் தள்ளிவிட்டு ஒற்றுமைப்பட்டு வாய்ப்புக்களைத் தவறவிடாது நற்பயன்களைப் பெற ஆவன செய்ய வேண்டும்.

அச்சுறுத்தல்கள் இருக்கத் தான் செய்யும். அவற்றைத் தடுக்க அங்கும் எம். மத்தியில் ஒட்டுறவும் ஒருமைப்பாடும் அவசியம்.

ஒட்டுறவும் ஒருமைப்பாடும் இருந்தால் எம்மால் அந்த அச்சுறுத்தல்கள் நிச்சயமாக சமாளிக்க முடியும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே. ஒற்றுமை இன்றேல் அனைவருக்கும் தாழ்வே. எனவே எமது ஆற்றல்களையும் வலுவின்மைகளையும் உணர்ந்து வாய்ப்புக்களைத் தவறவிடாது நற்பலன்கள் எய்த அச்சுறுத்தல்களைப் போதிய மட்டில் தடுக்க ஒட்டுறவும் ஒருமைப்பாடும் எம் மக்கள் மத்தியில் அவசியம் என்று கூறி வருங்காலத்தை நாங்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்வோமாக .

எமது இளைஞர்கள், யுவதிகள் மீண்டும் தமது உரிமைகள் பற்றி தமது தனித்துவம் பற்றி, தமது பாரம்பரியம் பற்றி, தமது வரலாறு பற்றி இனிமேல் கரிசனை செலுத்துதல் ஆகாது. அவர்கள் அன்றன்று கிடைக்கும் அற்ப சுகங்களுக்குள் அமிழ்ந்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் போதைப் பொருள்களும் விபச்சார விடுதிகளும் இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25.05.1934

விண்ணில் 04.07.2012



அமரர் குமாரசாமி இராஜேஸ்வரி

திதி: பிரதமை (24.06.2013)

ஓராண்டு சென்றதம்மா... உங்கள் நினைவுகள் அழியவில்லை.
மீண்டும் உங்கள் முகம் காணத்துடிக்கின்றோம்.
துயர வடுக்களையும் இதயத்தில் சுமக்கின்றோம்
மரணமில்லா வாழ் வென்று அறிந்திருந்தும்
நித்தியமாய் எம்மோடு வாழ்வீரென்று
மகிழ்வாக நாமிருந்தோம் - இன்று மனம் கலங்கி நிற்கின்றோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(சி.9067) (45.6.3)

உங்கள் நினைவுகளுடன்
கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## ஆலய ஜுபிலி விழா நிகழ்வில் 'கலை மாலை'

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். சுண்டிக்குளியில் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு ஜூபிலி விழாவும் புனிதரின் வருடாந்த திருவிழாத் திருப்பலியும் இன்று திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழாத் திருப்பலியை யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையும் இணைந்து நிறைவேற்றுவர்.

ஜூபிலி விழாவின் சிறப்பு நிகழ்வாக நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு துரை ஆரோக்கியதாசன் அரங்கில் 'கலை மாலை' நிகழ்வு நடைபெறவுள்ளது.

கலை மாலை நிகழ்வில் நடனங்கள், வில்லுப் பாட்டு, பட்டிமன்றம், பாடல்கள் ஆகியனவும் சிறப்பு நிகழ்வாக 'சஞ்சுவாம்' தென்மோடி நாட்டுக் கூத்தும் இடம்பெறும் (ந-51)

## சமய சந்நிதிகளில்

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 8 ஆம்திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வ-100)

★ ★ ★

கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனம், திருக்கல்யாணம் மற்றும் மணவாளக்கோல உற்சவம் என்பன இடம் பெறும். செவ்வாய்க்கிழமை மாலை 6 க்கு பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறும். (ந-122)

★ ★ ★

புதிதாக அமைக்கப்பட்ட இணுவில் திருப்பதி பத்மாவதி தயார் கோதை நாச்சியார் உடனுறை திரு வேங்கடேஸ்வர ஆலய கும்பாபிஷேகம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு 26 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும்.


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி பொன்ரதம் விவேகானந்தன்

திதி: பிரதமை (24.06.2013)

பிறப்பு 14.08.1948 இறப்பு 27.06.2010



நீர் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு மூன்று சென்று விட்டாலும் உம்
நினைவு எங்களை விட்டு அகலவில்லை. தினம்
தினம் உம் நினைவாகவே உள்ளது. உமது
அன்பான முகமே கண்முன் நிற்கிறது.
உமது பிரிவால் தினம் வாடும்

தீ. விவேகானந்தன் (கணவர்),
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
பெறாமக்கள், சித்தி.

(38588) (45.6.3)



# விண்ணக வாழ்வின் ஏழாம் வருடம்



மண்ணுலகில் 07.05.1943

விண்ணுலகில் 25.06.2006

அமரர்

ஞானப்பிரகாசம் வேதநாயகம்

(முன்னைநாள் லிகிதர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
(யோவான் 11:25)

அன்பினால் அரவணைத்து பண்பினால் வழிநடத்தி
பாசமுடன் வாழ்ந்தவரே அப்பா!
காலங்கள் கழிந்தாலும் கலையாது உம் நினைவுகள்
மறாது எம் பாசம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (25.06.2013) செவ்வாய்க்கிழமை காலை 6.00மணிக்கு யாழ்.அருள் ஆச்சிரமத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்
மனைவி, சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:யாழ் வீதி, பலாலி.

(38549)(3.5.6)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29. 01. 1934

உதிர்வு 04. 07. 2012

எங்கள் அன்புத் தந்தை

கனகலிங்கம் இராஜரட்ணம்

ஆண்டொன்று ஆனதுவோ
ஆறவில்லை எம் நெஞ்சம்
ஆறுதல் வார்த்தைகளில்
மீளுமோ உங்கள் உறவு
எம் அன்புத் தந்தையே!
இறைவன் திருவடியில் இளைப்பாற
உங்களுக்காய் பிரார்த்திக்கிறோம்

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:

கொக்குவில் மேற்கு. குடும்பத்தினர்.

(38602) (45.6.3)



# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

கிருஸ்ணபிள்ளை புஸ்பராசா

திதி: பிரதமை (24.06.2013)



மண்ணில் 03.11.1955

விண்ணில் 15.07.2011

ஆண்டுகள் இரண்டு ஆனதய்யா
ஆறவில்லை எங்கள் உள்ளம்
விழிக்க முடியாமல் விழியோரம் வடிகிறது கண்ணீர்
உங்கள் கனவுகளை சுமந்து வாழ்கின்றோம்.

வரணி வடக்கு, வரணி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, தாய், தந்தை,
சகோதரர்கள்.



# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் காசிநாதர் பிரசாத் (குஞ்சன்)

தோற்றம் 24.11.1983

மறைவு 24.06.2008

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய் உங்கள் வசீகரமான பேச்சால்
எல்லோரையும் வழி நடத்தினீர்கள்
எம்மைவிட்டுப் பிரிந்து ஐந்தாண்டுகள் கடந்தாலும்
என்றும் எங்கள் நினைவுகளில் நீங்காது நிலைத்திருப்பீர்கள்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

அம்மா, அப்பா,
சகோதரர்கள்.

(38546) (45.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முதல்வர்,ஆளுநரை மாற்றும் எண்ணம் இல்லை

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதி

திருகோணமலை,ஜூன் 24
கிழக்கு மாகாண ஆளுநர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் ஆகியோரை மாற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் வீணான பிரச்சினைகளை தோற்றுவிக்கும் விமலவீர திஸாநாயக்காவைத் தற்போதைக்கு மாற்ற வேண்டிய நிலை தோன்றியுள்ளது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரை அலரி மாளிகைக்கு அழைத்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

கிழக்கு மாகாண அமைச்சர்கள் - ஆளுநருடன் முரண்பட்டுக் கொண்டும், ஆளும்தரப்பு உறுப்பினர்கள் - முதலமைச்சருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டு சபை அமர்வு பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டு வரும் சூழ் நிலையிலேயே ஜனாதிபதி இவ்வாறான அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார்.



கிழக்கு மாகாணத்தில் தற்போதைய ஆளுநரும், முதலமைச்சரும் தான் தொடர்ந்து இருப்பார்கள். அதில் மாற்றம் ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை.

ஆளுநர் மற்றும் முதலமைச்சருடன் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் பின்னணியில் உள்ளவர்களை நான் அறிவேன். அவர்களின் எண்ணம் ஒருபோதும் பலிக்காது என்று ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை விமலவீர திஸாநாயக்க வீணான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றார்.

ஆளுநர், முதலமைச்சர் மாறாவிட்டாலும் கல்வி அமைச்சை வேறொருவருக்கு வழங்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். (ச-ரி)

# கன்னியாவுக்கு அருகில் பிக்குவுக்குக் காணி

## திருமலை இந்துக்கள் விசனம்

திருகோணமலை, ஜூன் 24
வரலாற்றுப் புகழ் பெற்ற திருகோணமலை, கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணற்றுக்கு அருகில் உள்ள ஒரு ஏக்கர் காணி வில்கம் ரஜமஹா விகாரை பிரதம குருவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதியில் வாழும் இந்துக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கன்னியா வெந்நீர் ஊற்று இந்துக்களின் புராண இதிகாசங்களுடன் தொடர்புடையது. இதற்கு நேர் பின்புறமாக விகாரை அமைப்பதற்கு வில்கம் ரஜமஹா விகாரை பிரதம குரு கொழும்பு காணி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு சுமார் 0.4120 ஹெக்ரேயர் காணியை வழங்க கொழும்பு காணி ஆணையாளர் நாயகம், மாகாணக் காணி ஆணையாளருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

> "கன்னியா வெந்நீர் ஊற்று இந்துக்களின் புராண இதிகாசங்களுடன் தொடர்புடையது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட இடத்தில் இந்துக்கள் ஈமக் கிரியைகள் செய்யும் மடம் அமைந்திருப்பதுடன் தொன்மையான சிவன் ஆலயமும், இஸ்லாமியர்களை அடையாளப்படுத்தும் சமாதியும் உள்ளது.

தற்போது இந்தப் பகுதியில் விகாரை நிறுவப்படவுள்ள துடன் நூறு வருட பாவனையிலுள்ள வீதியையும் மாற்றவுள்ளனர். புதிய வீதியில் விகாரையை முதன்மைப்படுத்தவுள்ளனர்-என்றார். (ச-ரி)



மட்டக்களப்பு, சின்ன உப்போடையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'ஈஸ்ட் லகூன்' எனும் நட்சத்திர ஹோட்டல் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மாணவருக்கான விரிவுரைகள் முதலாம் திகதி ஆரம்பம்



மட்டக்களப்பு,ஜூன் 24
கிழக்குப் பல்கலைக்கழக 2011/2012 ஆம் கல்வியாண்டு முதலாம் வருட மாணவர்களுக்கான பல்கலைக்கழக விரிவுரைகள் எதிர்வரும் முதலாம் ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

விவசாய பீடம் மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகளே எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

விவசாய பீடம் மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் தத்தமது விடுதிகளுக்கு தங்களது பீடங்களின் விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிக்கு முதல்நாள் பிற்பகல் 5 மணிக்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங் கலடி எனும் முகவரிக்கு சமுகமளிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

ஏனைய பீடங்களுக்கான மாணவர்களுக்கு விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று பதிவாளர் தெரிவித்தார். (ச)

# மட்டக்களப்பில் புதிதாக தொழு நோயாளர்கள்



மட்டக்களப்பு,ஜூன் 24
மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பிரதேச செயலர் பிரிவுகளில் புதிய தொழு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் பி.மனோகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, ஏறாவூர், செங்கலடி, காத்தான்குடி, வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் புதிய தொழுநோயாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை 72 தொழு நோயாளர்கள் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர். (ச)

# துப்பாக்கியுடன் ஒருவர் மாட்டினார்

வாழைச்சேனை,ஜூன் 24
வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் காவத்தமுனை மணிக்கூட்டுச் சந்தியில் வைத்து ரி- 56 ரக துப்பாக்கியுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு ஓட்டமாவடி, பாலத்தடியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை சோதனை செய்வதற்காக சைக்கிளை நிறுத்துமாறு கூறிய போது அவர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றுள்ளனர்.

அவர்களை துரத்திச் சென்ற பொலிஸார் காவத்தமுனை மணிக்கூட்டுச் சந்தியில் வைத்து பிடித்து சோதனையிட்டபோது அறுகம்புற்களுக்கிடையில் மறைத்து வைத்து ரி 56 ரக துப்பாக்கியைக் கொண்டு வந்தது தெரியவந்துள்ளது. (ச)

# மட்டக்களப்பின் வறுமையை குறைக்க ஒத்துழையுங்கள்

## கோருகிறார் ஹிஸ்புல்லாஹ்

எருவில்,ஜூன் 24
எதிர்வரும் 3 ஆண்டுக்குள் 21 வீதமாக இருக்கிற மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமையை 5 வீதமாகக் குறைக்க வேண்டும். அதற்கு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் என அனைவரும் இணைந்து சேவையாற்ற வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கான அலுவலக உபகரணங்கள் வழங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதாரத்தை முழுமையாகக் கட்டியெழுப்ப முடியாவிட்டாலும், வறுமையை முழுமையாக நீக்கி முன்னேற்றமடையச் செய்வதற்காக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும்.



தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத் திக்கொள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவதன் மூலம் அதனை சாத்தியப்படுத்திக் கொள்ள முடியும்.-என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடகர் தேர்வுப் போட்டி

கிளிநொச்சியில் இயங்கும் அன்னம்ஸ் நிறுவனத்தின் முதலாம் ஆண்டு பூர்த்தியினை முன்னிட்டு வடக்கு மண்ணில் இனிய குரலுக்கான இனிய தேடல்.

இசைப் பிரியர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு. பாடுவோர் பாடலாம், வயதெல்லை கிடையாது, போட்டியாளர்களில் பத்துப் பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

காலம் : 29.06.2013-சனி, 30.06.2013-ஞாயிறு } காலை 8.30-பி.ப 5.30 வரை

இடம் : கிளிநொச்சி, சென் திரேசா பெண்கள் கல்லூரி,

**அனுமதிக்கட்டணம்-ரூபா 200.00**

இல.231, திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

(35083)
(10.6)

தொடர்பு:
0770132484

## பொன்விழாக் காணும்



திரு. திருமதி **மனோகரன் - கலாதேவி**
கண்ணின் இமையாய் எம்மைக் கருத்தோடு காக்கும்
எம் இனிய அன்புத் தெய்வங்களை
மனதார வாழ்த்தும்
*உங்கள் அன்புச் செல்வங்கள்*

யாழ்ப்பாணம்.

ஜிவிந்தன், தினேஸ்,
பிரியந்தன், விஜிதா.

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

வலி. வடக்கு, ஜூன் 24

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பும் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி அதிபர் கு.வேல்சிவானந்தன் தலைமையில் பாவலர் துரையப்பாப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் கல்விப் பீடத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரனும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும் கனடா பழைய மாணவர் சங்கத் தலைவர் உற்பத்திப் பொறியியலாளர் மகாஜனன் க.ஜெயேந்திரனும் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரனும் கலந்துகொள்வார்கள்.

நினைவுப் பேருரையை கிழக்கு மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மகாஜனன் கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா நிகழ்த்துவார்.

ஆசியுரையினை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன் வழங்கவுள்ளார்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

(ந-86)

# பாடசாலை செல்லாது திரிந்த 16 மாணவர்கள் ஒப்படைப்பு

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு பாடசாலைகளில்

நவாலி, ஜூன் 24

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பாடசாலை செல்லாமல் இருந்த 16 மாணவர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்டு பாடசாலைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இளவாலை, பிரான்பற்று, முள்ளியவளை, வடலியடைப்பு, சாவற்கட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த மாணவர்கள் வட்டு இந்துக் கல்லூரி, வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாசாலை, பிரான்பற்று கலைமகள் வித்தியாசாலை, இளவாலை சென்ஹென்றீஸ் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்பவர்கள். இவர்கள் பற்றிய தகவல் பிரதேச செயலகத்துக்கு கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் தலைமையில் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் இவர்களை இனங்கண்டு பாடசாலைகளில் ஒப்படைத்தனர்.

இவர்களது நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்ந்தும் கவனிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(ந-100)

## மண்டப வசதி உண்டு

அரங்கேற்றம், திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் விழா, ஒன்று கூடல் மற்றும் பொது வைபவங்கள் அனைத்துக்கும் சகல வசதிகளும் கூடிய மண்டபம்

(38559)
(45.3.6)

தொடர்பு:
க.ராதாகிருஷ்ணன்,
63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 754 9803, 021 222 3334.



## நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானம்
## பூங்காவனத் திருவிழா 25.06.2013

நவாலி அட்டகிரியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் எல்லாம் வல்ல முருகப் பெருமானின் 2013 ஆம் ஆண்டு மகோற்சவ இறுதி விழாவான பூங்காவனத் திருவிழா ஆனிமாதம் 11 ஆம் நாள் (25.06.2013) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மாலை நிகழ்வாக பூஜை நடைபெற்று இரவு தொடர்ந்து **வள்ளி திருமணம்** இடம்பெறும்.

*விசேட நிகழ்வாக மாலை 4.00 மணிக்கு தவில் நாதஸ்வர கச்சேரி இடம்பெறும்*

**இசை மழை பொழியும்**

| நாதஸ்வரக் கலைஞர்கள் | தவில் கலைஞர்கள் |
|---|---|
| ★ கலா பூஷணம் அளவையூர் M.B. **பாலகிருஷ்ணன்** | ★ தவில் மாமேதை தெட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வன் அளவையூர் T. **உதயசங்கர்** |
| ★ நாதஸ்வர இசைப்பேரொளி கோண்டாவில் V.K. **பஞ்சமூர்த்தி** | ★ தவில் மாமேதை N.R.**சின்னராசா** அவர்களின் புதல்வன் S.**சுதாகரன்** |
| ★ ஈழ நல்லூர் P.S. பிச்சையப்பா அவர்களின் புதல்வன் நாதகான மிருதவான் P.**ரஜீந்திரன்** | ★ இளம் தவில் சுடரொளி N. **நந்தகுமார்** யாழ்ப்பாணம் |
| ★ நாதஸ்வர இளவரசன் R.**சிவகுமார்** தொல்புரம், வழக்கம்பரை | ★ இளம் தவில் சுடரொளி B. **நர்மதன்** இணுவில் |

*இவர்களுடன் விசேடமாக இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சிறப்புத் தவில் வித்துவான் கலைமாமணி*
*கோவிலூர்* K.G. **கலியாணசுந்தரம்** *அவர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.*

*"அனைவரும் வருக முருகனருள் பெறுக"*

பூங்காவன உபயகாரர், டச்சு றோட், மானிப்பாய்.

(E/9977)(45.6.3)



## வயலின் இசைக்கச்சேரி

திரு. திருமதி **மாதவன் பிரவீனா** தம்பதியரின்
திருமண வரவேற்பு உபசார நிகழ்வை ஒட்டி தென்னிந்தியாவில்
இருந்து வருகை தந்திருக்கும் புகழ்பூத்த இசைக் கலைஞர்களான
அக்கரை சுபலக்சுமி சுவர்ணலதா சகோதரிகளின்
வயலின் இசைக்கச்சேரி

இடம் : நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபம்
காலம் : 25.06.2013 செவ்வாய்க்கிழமை
மாலை 5.00 மணி



அரங்கில் அணிசெய் கலைஞர்கள்
மிருதங்கம் : முதுகலைமாணி க. கஜன்
கெஞ்சிரா : கலைமாணி நா.சிவசுந்தரசர்மா
முகர்சிங் : கலாவித்தகர் சி. செந்தூரன்



கலை ஆவலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்.

(38550)(10.16)

மணமகன், மணமகள்.

## அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை நல்லூர் உப அலுவலகம்
### ஆதனப் பெயர் மாற்றம்
### ஆதன இலக்கம் 327 (வெற்று), அரியாலை வீதி, வட்டாரம் -12

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் - 12, அரியாலை வீதியில் உள்ள 327 ஆம் இலக்க ஆதனம் எமது ஆதனப் பதிவேட்டில் வெற்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி ஆதனமானத்தை **தோமஸ் இராஜரட்ணம் கிறிஸ்ரின் செல்வராஜா** என்பவர் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். இந்த ஆதனமானது 15.07.1995 ஆம் திகதிய 1474 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் **சுப்பிரமணியம் குரு நாதன் சற்குணேஸ்வரி** என்பவரால் வெளிப்படுத்தப்பட்டு 03.09.1995 ஆம் திகதிய 1505 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம **தோமஸ் இராஜரட்ணம் நியூட்டா விற்கு** வழங்கப்பட்டு, 1998.12.15 ஆம் திகதிய 79 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் **தோமஸ் இராஜரட்ணம் கிறிஸ்ரின் செல்வராஜா** என்பவரை வந்தடைந்துள்ளது.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தோமஸ் இராஜரட்ணம் கிறிஸ்ரின் செல்வராஜா** என்பவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி யல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ப.வசந்தகுமார்**
**தலைவர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**24.06.2013**

(சி/ 9935(3.6.45)

## காணி விற்பனைக்கு

கந்தர்மடம் சந்திக்கும், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையில் நல்ல சுற்றாடலில் 10 பரப்புக்காணி முழுமையாகவோ பிரித்தோ விற்பனைக்குண்டு.

தொடர்பு:075 503 4930

(38334)(3.6.7.11)

## Room வாடகைக்கு

A/C, Non A/C Room மாத வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 271 9039

(38567)(3.6.11)

## வீடு வாடகைக்கு

யாழ். பாங்சால் வீதியில் 5 அறைகள் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனைக்கு உகந்தது.

இல.261, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5346

(38568)(45.6.3)

## வியப்பூட்டும் விலைக்குறைப்பு

கொழும்பு - சென்னை - கொழும்பு
சேவை Rs. 14,800/-

திங்கள், புதன்,வெள்ளி,
சனி, ஞாயிறு தினங்களில்



✔ Baggage allowance 37 kgs.
✔ Complementary Meals provided
✔ Groups fares offer only over 10 passengers.

AIR - INDIA
express

Contact for further information:
www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில் 2¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

T.P-077 860 7151

(35065)(3.6.11)

## காணிகள் விற்பனைக்கு

அல்வாய் மேற்கு, திக்கத்தில் 02 காணிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
சின்னத்துரை நடராஜா-
021 226 2687
Dr.இ.கனகலிங்கம்- 077 952 2105

(37616)(3.6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி.சம்பியனானது இந்தியா




சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 5 ஓட்டங்களால் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்து கிண்ணத்தைச் சுவிகரித்துக் கொண்டது இந்திய அணி.

மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது.

இந்திய-இங்கிலாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்வெயர் குக் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தார்.

இச்சூழ்நிலையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் துடுப்பெடுத்தாட முன்னரே மழை குறுக்கீடு செய்தது. இதனால் பல மணி நேரம் ஆட்டம் தடைப்பட்டது. மழை விட்டதும் 20 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டு ஆட்டம் ஆரம்பமாகியது.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களம் புகுந்த இந்திய அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக தஹிர் தவான் 81 ஓட்டங்களையும், விராட் ஹோக்லி 43 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்து வெளியேறினர். ரவீந்திர ஜடேஜா இறுதிவரை ஆட்டமிழக்காது நின்று 33 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ரவி போப்ரா 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை வீழ்த்தினார். அண்டசர்சன், ப்ரொட் மற்றும் றொட்வெல் ஆகியோர்தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 130 என்ற இலகுவான வெற்றி இலக்காகக் கொண்டு களம்புகுந்த இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறினாலும் ஜொனதன் றொட் (20) இயன்மோகன் (33), போபரா (30) ஆகியோரின் துணையுடன் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்ற போது 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களை இங்கிலாந்தால் பெற முடிந்தது. இதனால் 5 ஓட் டங்களினால் போராடித் தோற்று வெற்றிக் கிண்ணத்தை கை நழுவவிட்டது இங்கிலாந்து. இந்தியாவின் பந்துவீச்சில் ரவீந்திர ஜடேஜா, ரவிச் சந்திரன் அஸ் வின், இஷாந் சர்மா ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

## பரமேஸ்வராச் சந்தியில் அடிதடி யாழ். பல்கலை மாணவர் காயம்

மாணவர்கள் கை, கால்களாலும் தலைக் கவசங்களாலும் சரமாரியாகத் தாக்கினர் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டது. தென்பகுதி மாணவர்களின் மோதலால் பரமேஸ்வராச் சந்தி ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டது. இதன்போது எட்டு மாணவர்கள் வரை காயமடைந்ததாகக் கூறப்பட்டபோதும் நால்வரே காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பி.ஏரத் (வயது -20), கே.திலக்ஷன (வயது -22), டி.ஜெயரங்க (வயது -23), எஸ்.லக்மண (வயது -22) ஆகியோரே காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களாவர். இதனையடுத்து விஞ்ஞானபீட இரண்டாம் வருட தென் பகுதி மாணவர்கள் 6 பேரை விசாரணைக்காக அழைத்துச் சென்ற பொலிஸார் பின்னர் அவர்களை விடுவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ங-4)

**கணினி திருத்தம் (Computer Repair)**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித்தருகின்றோம்.

அழையுங்கள் - 0779086737

GUNAA BEST PC
52, HOSPITAL ROAD, JAFFNA.

**திருமண சேவை**

பட்டதாரிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக சேவையில் உள்ளோர், கம்பனிகளில் உயர்பதவி வகிப்போர், வர்த்தகர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் பல எம்மிடம் உண்டு. மணமக்களை நாடுவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

"சிவா திருமணசேவை" 100, அரசடி வீதி, கந்தர்மடம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகில்)

தொ.பே- 0778996281

**பதவி வெற்றிடம்**

கிளிநொச்சி நகரப் பகுதியில் இயங்கிவரும் தனியார் ஒப்பந்ததாரர் நிறுவனத்துக்கு கணக்குப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடைய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தகைமை-

* க.பொ.த உ/த 3 பாடங்களிலும் சித்தி
* கணக்குப் பதிவாளர் பணியில் 3 வருடங்களுக்கு குறையாத முன்அனுபவம்.

தொ.பே- 0773517849

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



அமரர்

**திலகவதி இளையதம்பி**

தோற்றம் 27.09.1936 மறைவு 26.05.2013

கடந்த 26.05.2013 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி திலகவதி இளையதம்பியின் அந்தியேட்டிக் கிரியைகள் (22.06.2013) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.06.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், இறுதிவரை உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகாதனை, தெல்லிப்பழை. குடும்பத்தினர்.

## தமிழக மீனவர் மீது மீண்டும் தாக்குதல்

கியதாக தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் மீனவர்கள் படகுகளுடன் கடலில் தத்தளித்தனர் என்றும் சில மீனவர்கள் இது வரை கரைதிரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்படையினரும் தம்மைத் தாக்கியதாக தமிழக மீனவர்கள் குற்றம் சாட்டியுள் ளனர். ஆனால் அதனை இலங்கை கடற்படை யினர் மறுத்துள்ளனர். (ங-14)

## இலங்கை - கனடா இராஜதந்திரப் போர் உச்சக்கட்டம்

விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், கனடாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட எசல வீரக்கோனின் நியமனத்தை ஏற்றுக் கொள்வதை நிறுத்தி வைத்துள்ளதாக கனேடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேபோன்று இலங்கைக்கான தூதுவராக ஷெல்லி வைற்றிங் என்பவரே மூன்று மாதங்களுக்கு முன்னர் கனடா நியமித்தது. அவர் தனது பொறுப்பை ஏற்க கொழும்பு சென்ற போதிலும், இலங்கை அரசு அவரது நியமனத்தை இன்னமும் அங்கீகரிக்கவில்லை. இரு நாடுகளும் தமது இராஜதந்திரப் போரின் உச்சக்கட்ட ஆயுதமாகவே தூதுவர்களுக்கான நியமனத்தை வழங்காது இழுத்தடிக்கின்றது (ங)

**ஜெப வீடு திருச்சபை ஆரம்பித்து 25வது ஆண்டு நிறைவு நன்றி ஆராதனை**

'நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவு தேவனது சமாதானத்துக்கேதுவான நினைவுகளே!.' எரேமியா:29.11

**தேவனுக்கு மகிமை உண்டாவதாக!**



எமது ஜெப இல்லம் ஆரம்பிக்கப்பட்டு தனது 25வது நிறைவு வருடத்தை 24.06.2013 (திங்கட்கிழமை) இன்று தேவ கிருபையால் காண்கின்றது. இதற்கான சிறப்பு ஆராதனை இன்று மாலை:04.30 மணிக்கு திருச்சபையில் இடம்பெறும். எனவே இவ் அறிவித்தலை தேவ அழைப்பாக ஏற்று நடைபெறும் நன்றி ஆராதனையில் கலந்து கொண்டு தேவனுக்கு நன்றி கூறும்படி அன்பான ஊழியர்கள், தேவ பிள்ளைகளை அன்புடன் அழைக்கின்றோம். பிரதம செய்தியாளராக போதகர். S.சுரேஸ் (இந்தியா) கலந்துகொள்வார்.

ஜெப வீட்டுக் குடும்பம்.
இல:13 A,இராசாவின் தோட்ட
ஒழுங்கை, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
021-222-7127

**மரண அறிவித்தல்**



**ஐயன் கந்தையா**

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயன் கந்தையா நேற்று (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஐயன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா தம்பதியரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், சுனித்திரா, மஞ்சுளா, பிரபாகரன் (சுவிஸ்), கேமலதா (இத்தாலி), மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிரமலைநாதன், சண்முகநாதன் (இத்தாலி), பிரசாந்தன் (காணி நிர்வாகத்திணைக்களம்), றஜனி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், சரண்யா, செந்தூரன், சௌமியா, சலோமியா, தரணியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

**மொறட்டுவை பொறியியல் பீட தமிழ் மாணவர்களால் "பள்ளிக்கூடம்" செயற்திட்டத்துடன் இணைந்து நடத்தும் முன்னோடிப் பரீட்சைக்கான நேரசூசி மாற்றம்**

**இரசாயனவியல் I**
28.06.2013 வெள்ளிக்கிழமை 3.00 - 5.00

**இரசாயனவியல் II**
30.06.2013 ஞாயிற்றுக்கிழமை 2.30 - 5.30

தகவல்: பரீட்சைக்குழு. தொடர்பு: 0772462333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடத்தப்படும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
பொலிகை பாரதி அணி எதிர் கொலின்ஸ் வி.க.
பி.ப. 4.30 மணி
ஞானமுருகன் வி.க. எதிர் உதயதாரகை வி.க. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
யாழ். சென். அன்ரனிஸ் வி.க. எதிர் விளான் சென். அன்ரனிஸ் வி.க.
பி.ப. 4.30 மணி
றோயல் வி.க. எதிர் சென். மேரிஸ் வி.க. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 24
மற்றிஸ் கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாடடச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
யாழ்.மத்திய கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 24
வேம்படி மகளிர் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3 மணி
இராமநாதன் மகளிர் கல்லூரி எதிர் யாழ்.இந்து மகளிர் கல்லூரி.
பி.ப. 4 மணி
உடுவில் மகளிர் கல்லூரி எதிர் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை. (ற-23)



### வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்து

# அனைத்து வயதுப் பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட மகளிர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட மாகாண மட்ட வலைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் அணிகள் அனைத்து வயதுப் பிரிவுகளிலும் சம்பியனாகத் தெரிவாகியுள்ளன.
15 வயது மகளிர் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், 17 வயது மகளிர் பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும், 19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் சம்பியனாகத் தெரிவாகியுள்ளன.
இந்த இறுதியாட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றன.




### 15 வயதுப் பிரிவு

முதலில் இடம்பெற்ற 15 வயது மகளிருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணியை எதிர்த்து மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன.
அதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 17:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
அதேபிரிவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு தேவிபுரம் அ.த.க. பாடசாலை அணி மோதிக் கொண்டது.
அதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 22:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

> “
> 15 வயதுப் பிரிவில் முதல்முறையாக மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றிய முல்லைத்தீவு தேவிபுரம் அ.த.க. பாடசாலை அணி பல்வேறு வளப்பற்றாக்குறைகள் காணப்பட்ட போதும் அரையிறுதி வரை முன்னேறி நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது.




### 17 வயதுப் பிரிவு

17 வயது மகளிர் பிரிவின் இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி களமிறங்கியது.
அதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
அதேபிரிவில் மூன்றாம் இடத் துக்கான ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் தூய யோசவாஸ் மகா வித் தியாலய அணி மோதிக் கொண்டது.
அதில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி 24:2 என்ற புள்ளி கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.




### 19 வயதுப் பிரிவு

19 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.
அதில் யூனியன் கல்லூரி அணி 29:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் பரிகாரி கண்டல் அ.த.க. பாடசாலை அணி மோதிக் கொண்டது.
அதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 22:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.(ற-23-86-400-422-433)

# சென்றல் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன்ன் 24
டினோசன் மற்றும் கமில்ரன் ஆகியோரின் அதிரடிச் சதங்கள் கைகொடுக்க யாழ்.மத்திய கல்லூரி அணி ஸ்ரான்லி கல்லூரி அணியை 310 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.
இலங்கை துடுப்பாட்ட சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் பிரிவுக்கான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்றி லேயே யாழ்.மத்திய கல்லூரி இந்த அசத்தல் வெற்றி யைப் பெற்றுக் கொண்டது.
கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
அதையடுத்துக் களமிறங்கிய மத்திய கல்லூரி அணி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. டினோசன் ஆட்டமிழக்காது 143 ஓட்டங்களையும், கமில்ரன் 123 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். கார்த்தீபன், நிக்சன் ஆகியோர் தலா 30 ஓட்டங்களையும், கௌதமன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களையும் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இறுதியில் மத்திய கல்லூரி அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 397 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
ஸ்ரான்லிக் கல்லூரி அணி சார்பில் பந்துவீசிய, லோகதர்சன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சஞ்சீவன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும், பிரதீப் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும், கௌதமன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
398 என்ற இமாலய இலக்கை விரட்டத் தொடங்கிய ஸ்ரான்லி அணிக்கு துடுப்பாட்ட வீரர்கள் கைகொடுக்கவில்லை. மத்திய கல்லூரி அணியின் பந்துவீச்சைத்தாக்குப் பிடிக்காது இலக்குகள் மளமளவென சரிய, 39.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களுடன் சுருண்டது ஸ்ரான்லி அணி.
பிரசாத் 23 ஓட்டங்களையும், லோகதர்சன் 11 ஓட்டங்களையும், டினோசன் 10 ஓட்டங்களையும் ஸ்ரான்லி சார்பாக அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் நிஷாந்தன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், செந்தூரன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், கௌதமன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தசோதபன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பாகக் கைப்பற்றினர்.(ற-23)


டினோசன்


கமில்ரன்

## கூடைப்பந்து முடிவுகள்



யாழ்ப்பாணம், ஜூன் 24
வேம்படி மகளிர் உயர்தப் பாடசாலையின் 175 ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வேம்படி உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை (மஞ்சள்) அணிக்கும் இராமநாதன் மகளிர் கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 29:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.
வேம்படி மகளிர் கல்லூரி (கறுப்பு) அணிக்கும் திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி (கறுப்பு) அணி 16:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணிக்கும் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 17:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.
வேம்படி மகளிர் கல்லூரி (கறுப்பு) அணிக்கும் உடுவில் மகளிர் கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி (கறுப்பு) அணி 19:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.
உடுவில் மகளிர் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 27:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணிக்கும் வேம்படி மகளிர் கல்லூரி (மஞ்சள்) அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி 18:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை அணி 27:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
இராமநாதன் மகளிர் கல்லூரி அணிக்கும் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 31:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலருடைய கூற்றுகளை தவறாக்கியது இங்கிலாந்து

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்துக்கு முன்னேறிய தன் மூலம் சிலரின் கருத்துகளை பொய்யாக்கப்பட்டுள்ளது என்று இங்கிலாந்து அணி வீரர் ஜொனதன் ட்ரொட் தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடர் குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் அனைத்து போட்டிகளிலும் இயன் மோர்கன் மற்றும் ஜோஸ் பட்லர் ஆகியோர் சிறப்பாக ஆடினர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)






இந்தியா மற்றும் இலங்கை அணிகள் மோதிக் கொண்ட சம்பியன்ஸ் கிண்ண அரையிறுதி ஆட்டம் நடைபெற்ற நாளன்று மைதானத்துக்கு வெளியே புலம்பெயர் தமிழர்களால் இலங்கை அரசுக்கெதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழர்களைச் சந்தித்த இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் போராட்டக் காரர்களின் கருத்துகளைக் கேட்டறிந்தார்.

## வீடுகள் வாங்கினர் சென்னை அணி வீரர்கள்

### லலித் மோடி புதுத் தகவல்

சென்னை அணியின் மூன்று வீரர்களுக்கு தரகர் ஒருவர் ரூ. 60 கோடி மதிப்புள்ள வீடுகளைக் கொடுத்துள்ளார் என்று முன்னாள் ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் தலைவராக இருந்தவர் லலித் மோடி நிதிமுறைகேடு செய்த முறைப்பாட்டில் சிக்கிய இவரை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) பணிநீக்கம் செய்தது. அதையடுத்து அவர் 2010 முதல் லண்டனில் வசித்து வருகிறார்.

ஆறாவது பிறீமியர் லீக் தொடரில் நடந்த சூதாட்ட சர்ச்சை சற்று ஓய்ந்துள்ள நேரத்தில், சென்னை வீரர்களுக்கும், தரகராக உள்ள தொழிலதிபர் ஒருவருக்கும் தொடர்புள்ளது என்று லலித் மோடி திடுக்கிடும் தகவலை தற்போது வெளியிட்டுள்ளார்.

தனது டுவிட்டரில் லலித் மோடி வெளியிட்ட தகவலில்,

''பெரும் தொழிலதிபராக விளங்கும் ஒருவர் தரகராகவும் உள்ளார். பெரியளவில் சூதாட்டத்திலும் ஈடுபட்டவர். 2010ஆம் ஆண்டு ஐ.பி.எல் அணியை வாங்க முயற்சித்தார். ஆனால் இதற்கு அவர் அனுமதி கிடைக்கவில்லை. எனக்கு கிடைத்த தகவல்களின் படி, சென்னை அணியின் மூன்று வீரர்கள் இந்தத் தரகருடன் நெருக்கமாக இருந்தனர். இதில் ஒருவர் சர்வதேச வீரர்.

அவர்களுக்காக, மும்பை புதிய பந்த்ரா பகுதியிலுள்ள கடற்கரையோரத்திலும், டெல்லி அருகிலுள்ள நொய்டாவிலும் வீடுகள் கொடுத்துள்ளார். அவற்றின் மதிப்பு ஏறக்குறைய ரூ. 60 கோடி இருக்கும்.

அந்த தரகருக்கு சென்னை அணியின் கௌரவ உறுப்பினர் குருநாத் மெய்யப்பன் உட்படப் பல அணி உரிமையாளர்களுடன் தொடர்பு உள்ளது. பொலிஸார் இது குறித்து விசாரிக்க வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

## முறுக்கு மீசை வீரருக்கு அடிக்கின்றது அதிர்ஷ்டம்



சர்வதேச கிரிக்கெட்டில் ஹாட்ரிக் சதம் அடித்த ஷிகர் தவானை ஒப்பந்தம் செய்ய விளம்பர நிறுவனங்கள் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஆஸ்திரேலியாவுக்கெதிரான மொகாலி டெஸ்டில் இந்தியாவின் ஷிகர் தவான் சதம் (187) அடித்தார்.

அடுத்து, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்கா (114), மேற்கிந்திய தீவுகள் (102) அணிகளுக்கெதிராக அடுத்தடுத்த ஆட்டங்களில் சதம் விளாசினார்.

அப்படி ஹாட்ரிக் சதம் அடித்ததால் இவரது மதிப்பு உயர்ந்து விட்டது. பல்வேறு விளம்பர நிறுவனங்கள் இவரை ஒப்பந்தம் செய்ய துடிக்கின்றன.

வீராட் கோஹ்லி, ரோகித் சர்மா, முரளி விஜய் ஆகியோரை ஒப்பந்தம் செய்துள்ள கார்னர்ஸ்டோன் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் தலைமை அதிகாரி பன்ட்டி சாய்தே கூறுகையில்,

''கிடைத்த வாய்ப்பை கெட்டியாக பிடித்துக் கொண்ட ஷிகர் தவான், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

சர்வதேச கிரிக்கெட்டில் தற்போது தான் தனது வாழ்க்கையை தொடங்கியுள்ளார். எதிர்காலத்தில் சிறந்த வீரராக இருப்பது உறுதி. இவரை எங்கள் நிறுவனத்தில் ஒப்பந்தம் செய்ய முயற்சித்து வருகிறோம்.

இவரது கிரிக்கெட் பயணம் அடுத்த ஆறு மாதத்தில் எப்படி இருக்கும் என்று தெரியாது. ஏனெனில், விளையாட்டு வீரர்களைப் பொறுத்த வரையில் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது.

இதற்குள் அவர் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் எங்களைத் தவிர, மூன்று முதல் நான்கு நிறுவனங்கள் ஷிகர் தவானை ஒப்பந்தம் செய்து விட வேண்டும் என்று துடிக்கின்றன'' என்று தெரிவித்தார்.

### மீசைக்கு கிராக்கி


ஷிகர் தவானை விட பெரியளவில் முறுக்கு மீசை வைத்திருந்த ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் மெர்வ் ஹியுஸ் கூறுகையில்,

''ஷிகர் தவானின் மீசை அவரது ஆளுமைத் தன்மையை உணர்த்தலாம். ஆனால் வாழ்நாள் முழுவதும் இது அவருக்கு சோறு போடும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இப்போதுள்ள நிலையில், இவரது மீசைக்கு பணம் தர எதாவது நிறுவனங்கள் வந்தால், அதை வரவேற்க வேண்டும்'' என்றார்.(ற)

## உசைன் போல்ட் முதலிடம்

ஜமைக்காவின் மெய்வல்லுநர் சம்பியன்சிப் தொடரின் 100 மீற்றர் ஓட்டத்திற்கான சம்பியனாக உலக சாதனையாளர் உசைன் போல்ட் தெரிவாகியுள்ளார். இதன் மூலம் உலக சம்பியன்சிப் தொடருக்கு அவர் தகுதி பெற்றுள்ளார்.

கடந்தவாரம் இடம்பெற்ற சம்பியன்சிப் போட்டியில் உசைன் போல்ட் 9.94 செக்கன்களில் 100 மீற்றர் ஓட்டத்தை நிறைவுசெய்து முதலிடத்தைப் பெற்றார். இரண்டாவது இடத்தில் கேமர் பெய்லி -கோல் 9.98 செக்கன்களில் ஓடிப் பெற்றுக் கொண்டதோடு, நிக்கல் அஷ்மெட் 9.99 செக்கன்களில் 100 மீற்றரை நிறைவுசெய்து மூன்றாவது இடத்தைப் பெற்றார்.




இப்போட்டியில் உசைன் போல்ட் தனது உச்சபட்சத் திறமையை வெளிப்படுத்தாத நிலையில், அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த உசைன் போல்ட்,

''இப்போட்டி கள் அணியில் இடத்தைப் பிடித்துக் கொள்வதற்காக மாத்திரமே'' எனத் தெரிவித்தார்.

உலக மெய்வல்லுநர் சம்பியன்சிப் போட்டிகளிலேயே உச்சபட்ச திறமையை வெளிப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர், தான் ஏற்கனவே 9.63 செக்கன், 9.53 செக்கன்களில் ஓடி தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

உலக சாதனையாளரான உசைன் போல்ட், தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் குறுந்தூர ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## வாய்ச் சண்டை போடும் ரென்னிஸ் வீராங்கனைகள்

ரென்னிஸ் வீராங்கனைகளான செரீனா வில்லியம்ஸுக்கும், மரியா ஷரபோவாவுக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கம் வெடித்துள்ளது.

விம்பிள்டன் ரென்னிஸ் சம்பியன்கிண்ண ஆட்டங்கள் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே, முன்னணி வீராங்கனைகளான மரியா ஷரபோவாவுக்கும், செரீனா வில்லியம்ஸுக்கும் இடையே வாய்ச் சண்டை வெடித்துள்ளது.

அமெரிக்காவில் 2 பாடசாலை மாணவர்களால் 16 வயது சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை குறித்து செரீனா வில்லியம்ஸ் கருத்து தெரிவித்திருந்தார். அவரின் கருத்து மிகப் பெரிய அளவில் சர்ச்சையை கிளப்பியதையடுத்துமன்னிப்புகேட்டார்செரீனா.



இந்த நிலையில் அவ் விவகாரம் குறித்து மரியா, ''செரீனாவின் கருத்து மிக மோசமானதாக இருந்தது, இதை நான் எதிர்பார்க்கவில்லை. முதலில் தன் சாதனைகள் குறித்து பேசட்டும், அடுத்தவர்கள் குறித்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

இதேபோன்று தனது ஆண் நண்பர் பற்றி செரீனா கருத்து தெரிவித்திருப்பது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போது மரியா, ''மற்றவர்களின் நண்பர்கள் குறித்து கருத்து சொல்ல செரீனாவுக்கு உரிமை இல்லை'' என்று கடுமையாகச் சாடினார்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை தாக்கிய பொலிஸாருக்கு இடமாற்றம்

கொழும்பு ஜூன் 24

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஒத்திகை ஊர்வலத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் திக்வெல்ல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 17 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று மாத்தறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை, இத்தாக்குதலின்போது காயமடைந்த மூன்று பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.

திக்வெல்ல, கெமகொட பிரதேச விகாரையில் நேற்று முன்தினமிரவு பௌர்ணமி தின ஒத்திகை ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. இதன் போது தம்மை பொலிஸார் என்று கூறிக்கொண்ட ஒரு குழுவினர் புகுந்து, ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதலில் காயமடைந்த மூவர் மாத்தறை மற்றும் பதீகம வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்துக்கு எதிர்ப்புதெரிவித்து கிராமவாசிகளும் அரசியல்வாதிகளும் இணைந்து மாத்தறை திஸ்ஸமஹராம பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இதன் போது பொலிஸாருக்கும்-மக்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் நிலவியதோடு அந்தப் பிரதேசத்தில் பெரும் பதற்ற நிலைமை நீடித்தது.

இந்த ஊர்வல ஒத்திகை தமக்கு இடையூறு விளைவிப்பதாக சிலர் வந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன, இந்தச் சம்பவத்தை விசாரணை செய்ய பொலிஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 17 பொலிஸ் உத்தியோகத்தர்களை மாத்தறைக்கு இடமாற்றம் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021 222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(ருக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

Join with
**HARIKANAN**
Printers of the North

**ACCOUNTANT**

Harikanan Printers is a leading Printing Press in Northern Province. Harikanan was established in 2000 and presently is one of the largest printing presses in the region.

Continuously 4 Years Presidential Award Winners for the Printing Industry

*The ideal candidate should possess:*

- Minimum of two years experience in a similar capacity
- CIMA / AAT / CA part qualification
- Knowledge and experience in using computerized accounting software such as tally, AccPac, etc.
- Very good knowledge and experience in using MS-Excel, MS-word and MS- Powerpoint
- Excellent communication and interpersonal skills with good command of Tamil and English Languages.

To be part of multi-disciplinary teams with deep industrial knowledge

Applications from prospective candidates should reach the address given below on or before 26th June 2013.

Special consideration will be given for participation in sports and extracurricular activities.

Human Resources Manager
HARIKANAN (PVT) LTD.
NO: 681, K.K.S. ROAD, JAFFNA.

**SPOKEN ENGLISH**
மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி
இளைஞர், யுவதிகள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், மாணவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பம்
சனிக்கிழமை 29.06.2013
புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்
பிரிவு 01 : 8.00 - 10.00 பிரிவு 02 : 10.00 - 12.00
பிரிவு 03 : 01.00 - 03.00 பிரிவு 04 : 03.00 - 05.00
வாரநாள் பிரிவுகள் : 01.07.2013 (திங்கள்,புதன்)
பிரிவு01: 10.00 – 12.00 பிரிவு 02: 3.00 – 5.00
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்
077 621 4567

**மணல் மண் வேண்டுமா?**
★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.
4½ டிரக்டர் 20,500/- (38019) (10.6)
தொடர்பு:- ராம் 072 63 78 546

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 08 * 04 * 1957



மறைவு 05 * 07 * 2012

அமரர் **தர்மலிங்கம் கனகலிங்கம்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்)
முற்றத்தில் நிற்பதுபோல் முகம் மலர்ந்து சிரிப்பது போல்
பக்கத்தில் இருந்து பல கதைகள் சொல்வது போல்
கண்முன்னே காட்சி பல விரிகிறதே
அன்பான அப்பாவே நீங்கள் இன்றி
ஓராண்டு கழிந்ததுவோ?
துயர் சுமக்கும் இதயத்துடன்
விழி நீர் சொரிகின்றோம்
இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
லைமன் லேன்,
லோட்டன் வீதி, மானிப்பாய்.
நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

யாழ் பேருந்து நிலையத்திற்கு வடக்குப் பக்கமாக...
**திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை**



Printing House
enjoy the quality, admire the value
உங்கள் எண்ணங்களுக்கேற்ற வடிவங்களில் அழைப்பிதழ்களை செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.
Wedding Cards Showroom
**பிறிண்டிங் ஹவுஸ்**
021 221 9929, 077 2200148
165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**இடமாற்றம்**
273,275 மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிவந்த எமது நிறுவனம்
10.06.2013 முதல் 244, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும்
புதிய முகவரியில்
புதுப் பொலிவுடன்
**விவாஹாஸ்**
தனியார் நிறுவனம்
என்றும் உங்களுடன்...



- திருமண அழைப்பிதழ்கள்
- விளம்பரப் பதாதைகள்
- சகலவிதமான டிஜிற்றல் பிறிண்டிங்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அலுவலக அடையாள அட்டைகள்
- T-Shirt பிறிண்டிங்

VIVAHAS Your Dreams
உங்களின் சகல விதமான பிறிண்டிங் தேவைகளுக்கும் சௌகரியமான இடம்
0212219999
244, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.